REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN தினகரன் 92 1932–2024 ANNIVERSARY

2024 ஜுன் 12 புதன்கிழமை

வரு. 92 இல. 139 | Wednesday 12, June, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## மட்டு. நகரில் ஒரு புதிய பயிர்ச் செய்கை முறை

### "A–PARK" இம் மாதம் வெளியீடு

லேக்ஹவுஸ் நிறுவனம் மற்றும் விவசாய அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் Agriculture Sector Modernization Project இணைந்து வெளியிடும்

06

### தோட்டத் தொழிலாளர்களுக்கான

## ரூ. 1,700 சம்பள அதிகரிப்பு: ILO மனுஷவுக்கு பாராட்டு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக்கு சர்வதேச தொழிலாளர் அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வருடாந்த சர்வதேச தொழிலாளர் மாநாட்டிலே, அமைச்சருக்கு இப்பாராட்டு வழங்கப்பட்டது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கில்பர்ட் எப். ஹூங்போவுடன் விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்ட அமைச்சரே இங்கு பாராட்டுப் பெற்றார். பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த குறைந்தபட்ச சம்பளம் 1,700 ரூபாவாக அதிகரிக்கப்பட அமைச்சர் மேற்கொண்டிருந்த முயற்சிகளை ILO தலைவர் பாராட்டினார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்தும் நடவடிக்கையில்,

06

## IMF: கடன் ஒத்துழைப்பு இன்று இரண்டாவது மீளாய்வு கூட்டம்

### நாட்டின் பொருளாதார மறுசீரமைப்பு, முன்னேற்றம் தொடர்பிலும் வொஷிங்டனில் மதிப்பீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் ஒத்துழைப்பு தொடர்பான இரண்டாவது மீளாய்வுக் கூட்டம், அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் இன்று (12) ஆரம்பமாகவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இம்மீளாய்வுக் கூட்டத்தின் போது இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் அதன்

06

## கொழும்பில் 1,758 மாணவருக்கு ஜனாதிபதி புலமைப் பரிசில்

### 19 இல், நிலுவையுடன் வழங்க ஏற்பாடு



ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ், கொழும்பு மாவட்டத்தில், 1758 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. 396 பாடசாலைகளிலிருந்து இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். நிலுவைத் தொகையுடன் எதிர்வரும் (19) புதன்கிழமை இது வழங்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரிமாளிகையில் இந்நிகழ்வு நடைபெறும். பொருளாதார சிரமங்களோடு கல்வி மற்றும் இணைப் பாடவிதானங்களில் விசேட திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தரம் 01 முதல் தரம் 11 வரையான 1,00,000 பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

06

### அரசாங்க சேவையில் நிலவி வரும்

# சம்பள முரண்பாடுகளை தீர்க்க விசேட நிபுணர் குழு நியமனம்

### உதய செனவிரத்ன தலைமையில் எண்மர் அடங்கிய குழுவை நியமித்தார் ஜனாதிபதி

### பரிந்துரைகளை 03 மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு வழங்குமாறும் பணிப்பு

அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபுணர் குழுவொன்றை நியமித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய செனவிரத்னவின் தலைமையிலான இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எஸ்.டி.ஜே. நிலுக்ஷன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹிரன்சா களுதந்திரி, ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ். ஆலோக பண்டார, நிறுவன பணிப்பாளர் நாயகம் எச்.ஏ. சந்தன குமாரசிங்க, வைத்தியர் டெரன்ஸ் காமினி டி சில்வா, துமிந்த ஹுலங்கமுவ, சந்தி எச். தர்மரத்ன மற்றும் இசுரு திலகவர்தன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜீ.எல். வெர்னன் பெரேரா குழுவின் செயலாளராக செயற்படுவார்.

அரச சேவையில் உள்ள பல்வேறு சேவைப் பிரிவுகளுக்கிடையில் நிலவும் சம்பள முரண்பாடுகள் குறித்து உரிய கவனம் செலுத்தி, 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அரச சேவையின் அனைத்துத் துறைகளிலும் உள்ள சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை மீளாய்வு செய்து திருத்தங்கள் தொடர்பான பரிந்துரைகளை நிபுணர் குழு சமர்ப்பிக்கும்.

இது தொடர்பான தமது பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை 03 மாதங்களுக்குள் ஜனாதிபதிக்கு வழங்குமாறும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

## ரஷ்ய வெளிநாட்டமைச்சருடன் அமைச்சர் அலிசப்ரி சந்திப்பு

### BRICS வெளியுறவு அமைச்சர்களுடனும் பேச்சு



அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடனான BRICS வெளியுறவு அமைச்சுக்களுக்கான அமர்வில், பங்கேற்பதற்காக ரஷ்யா சென்றுள்ள வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் (10) ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் ஸெர்கேய் லவ்ரோவ்வுடன் இருதரப்பு சந்திப்பை மேற்கொண்டார்.

இச்சந்திப்பின் போது, சுற்றுலா, உயர்கல்வி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட துறைகளை மேம்படுத்த

06



03

## வடக்கில் சீனாவின் கடலட்டை பண்ணை எங்கே இருக்கிறது?

### இடத்தை ஸ்ரீதரன் MP காண்பிப்பாரா?

### ஒலுவில் துறைமுகத்தின் வளங்கள்

## நாட்டின் முன்னேற்றத்துக்கு பயன்படுத்துவதே நோக்கம்



ஒலுவில் துறைமுகம் சார்ந்த வளங்கள் பாதுகாக்கப்பட்டு அதனைப் புனரமைத்து, நாட்டின் முன்னேற்றத்துக்கு பயன்படுத்தப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கடந்த காலத்தில் நிலவிய வரிசை யுகத்தை முடிவுக்கு கொண்டு வந்து மக்களின் வாழ்க்கையை வழமைக்கு கொண்டு வருவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகவும், அதனால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு

06

## இஸ்ரேலில் வேலைவாய்ப்பு தருவதாக ரூ. 05 கோடி மோசடி

### பெண் கைது, சுமார் 53 பேர் முறைப்பாடு



இஸ்ரேலில் வேலை வாய்ப்பை தருவதாகக் கூறி பெருந்தொகையான மக்களிடம் சுமார் 05 கோடி ரூபாவை மோசடி செய்த பெண் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இவரைக் கைது செய்துள்ளது. இப்பெண் குறித்து 53 பேர் முறைப்பாடு செய்திருந்தனர். இதையடுத்து இவரைக் கைது

06

## அதிகாரப்பகிர்வு: ஐ.ம.சவின் தேர்தல் அறிக்கையில் தெளிவு வேண்டும்

### தமிழ், சிங்கள மக்கள் அறியவேண்டியது அவசியம்

**யாழ். விசேட நிருபர்**



அதிகாரப்பகிர்வு தொடர்பில் தமிழ், சிங்கள மக்கள் தெளிவாக, விபரமாக அறியக் கூடியவாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கை இருக்க வேண்டுமென, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதசாவிடம் கூறியதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின்

06

## பொசன் பண்டிகை: அநுராதபுரத்தில் 03 தினங்கள் பாடசாலைகளுக்கு பூட்டு

பொசன் பண்டிகையை முன்னிட்டு அநுராதபுரம், மிஹிந்தலை மற்றும் தந்திரிமலை பகுதிகளில் பதினொரு பாடசாலைகள் மூன்று தினங்களுக்கு மூடப்படவுள்ளன. இம்மாதம் 18 முதல் 20 வரை இப்பாடசாலைகளை மூடுவதற்கு வட மத்திய மாகாண கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

விவேகானந்த மகா வித்தியாலயம், அநுராதபுரம் மத்திய வித்தியாலயம்,

06

## பெருந்தோட்ட சமூக மேம்பாடுகள்: USAID அதிகாரியுடன் அமைச்சர் ஜீவன் பேச்சு



பெருந்தோட்டத் துறையினரின் கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்துவது குறித்து அமைச்சர் ஜீவன் தொண்டமான் இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான (USAID) ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி தூதரக பணிப்பாளர் கெப்ரியல் கிராவுடன் பேச்சு நடத்தியுள்ளார். இவ்விடயங்களை முன்னேற்ற

06

## G.C.E. A/L பரீட்சை நவம்பரில்; கல்வி அமைச்சர் தெரிவிப்பு

### பல்கலை நுழைவை விரைவு படுத்துவதே நோக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில், அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் அடுத்த

06

## புற்றுநோய்க்கான மருந்து வகைகள் சுகாதார அமைச்சரிடம் கையளிப்பு

### 2,25,000 டொலரில் அமெரிக்க அறக்கட்டளை ஏற்பாடு



ஒரு வருடத்துக்குப் போதுமான புற்றுநோய் மருந்துகள் சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2,25,000 அமெரிக்க டொலர் பெறுமதியான இந்த மருந்துகளை LDS Latter – day saints charities நிறுவனம் சுகாதார அமைச்சிடம் நேற்றுக்காலை (11) வழங்கியது. நாட்டில் உள்ள அரச வைத்தியசாலைகளில் புற்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக பயன்படுத்தப்படும் அத்தியாவசிய

06

## 1,500 தோட்ட தொழிலாளர்களுக்கு அதிகரிக்கப்பட்ட ரூ. 1,700 சம்பளம்



### எல்கடுவ பிளாண்டேசன் தோட்டங்களில் நேற்று வழங்கப்பட்டது

**நாவலப்பிட்டி சுழற்சி, மாத்தளை சுழற்சி நிருபர்கள்**

மாத்தளை மாவட்டத்திலுள்ள எல்கடுவ பிளாண்டேசன் கம்பனி நிர்வகிக்கும் ஒன்பது தோட்டங்களிலுள்ள

06

## கனரக வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படவில்லை

### இறக்குமதியின் சாத்தியத்தையே ஆராய்கிறோம்



லொறிகள் உள்ளிட்ட கனரக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள், உண்மைக்கு புறம்பானவையென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வாகனங்களை இறக்குமதி செய்வது

06

## அமைச்சர் விஜேயதாசவுக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவு

### ஜுன் 25 ஆம் திகதி வரை நீடிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும் உறுப்பினராகவும் செயற்படுவதற்கு நீதியமைச்சர் விஜேயதாசவுக்கு விதிக்கப்பட்ட தடையுத்தரவு எதிர்வரும் ஜுன் 25 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

06

## டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கடும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை, 14 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. நாட்டில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும்

06

# நகர்வலம்



# ஐ.தே.க தேர்தல் செயற்பாட்டு அலுவலகம் திறப்பு






ஐக்கிய தேசியக் கட்சியின் கெஸ்பேவ தொகுதி அமைப்பாளரும் ஜனாதிபதி தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகமுமான சமன் ரத்னப்பிரியவின் தேர்தல் செயற்பாட்டுக் காரியாலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார, பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் ஐ.தே.க தேசிய அமைப்பாளருமான சாகல ரத்நாயக்க, முன்னாள் அமைச்சர்களான தயா கமகே, அனோமா கமகே, முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்கள் பலரின் பங்களிப்புடன் புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் மற்றும் சிவில் மற்றும் தொழிற்சங்கத் துறைகளை பிரதிநிதித்துவப்படுத்திய கட்சி செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# குருநாகல் ரணவிரு கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் சம்பவ இடத்துக்கு சென்ற வடமேல் மாகாண ஆளுநர்

*(கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்)*

குருநாகல், இப்பாகமுவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ரணவிரு கிராம மக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றுமுன்தினம் (10) குருநாகல் நகரத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

காணிகளுக்கு இதுவரை காலமும் காணி உறுதி வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து கிராம மக்கள் நேற்று முன்தினம் குருநாகல் நகரத்தில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அங்கவீனமுற்ற படை வீரர்கள், உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினர் உள்ளிட்ட சுமார் இருநூறுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ரணவிரு கிராமத்தில் தாம் நீண்ட காலமாக காணி உறுதிப் பத்திரமின்றி வாழ்ந்து வருவதாகவும், உறுதிப்பத்திரங்களை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லையெனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் விசனம் தெரிவித்தனர். இந்தக் கிராமம், சுமார் முப்பது வருடங்களுக்கு முன்னர் உருவாக்கப்பட்டதாகவும், யுத்தத்தினால் அங்கவீனமுற்றவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்காக பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட இந்தக் கிராமத்தில் ஆரம்பத்தில் நூறு குடும்பங்கள் அங்கு குடியமர்த்தப்பட்டதாகவும், தற்போது அங்கு சுமார் அறுநூறு குடும்பங்கள் வாழ்வதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.



இதனையடுத்து, ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்திற்கு சென்ற வடமேல் மாகாண ஆளுநர் அங்கவீனமுற்ற படைவீரர்கள் மற்றும் உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினருடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகளையும் அமைதியாக கேட்டறிந்தார்.

ரணவிரு கிராம மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தான் கரிசனையுடன் செயற்படுவதாக ஆறுதல் தெரிவித்த ஆளுநர், இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடி, துரிதகதியில் அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

வடமேல் மாகாண ஆளுநர் வழங்கிய வாக்குறுதியையடுத்து, போராட்டக்காரர்கள் அமைதியாக கலைந்து சென்றனர்.

ரணவிரு கிராமம் உள்ளிட்ட அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினர் இதுவரை மேற்கொண்ட போராட்டங்களில், ஆளுநர் ஒருவர் , போராட்டக்களத்துக்கு நேரடியாக சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்த முதலாவது சம்பவம் இதுவாகும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.



முன்னாள் அமைச்சரும் முன்னாள் இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகருமான மிலிந்த மொரகொட கொழும்பு இராமகிருஷ்ண மிஷனுக்கு விஜயமொன்றை மேற்கொண்டு மிஷனின் சேவை நல திட்டங்களை கேட்டறிந்துகொண்டதுடன் அவர்களின் சேவைகளுக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.

# சைவநெறி பயிற்சி வகுப்பு

கொழும்பு சைவநெறி பயிற்சி மையம், இந்து கலாசார திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் சைவநெறி நேர்முகப் பயிற்சி வகுப்பு எதிர்வரும் ஜுலை மாதம் 06ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பிரதி மாதந்தோறும் முதலாம் மூன்றாம் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை வகுப்புக்கள் நடைபெறும். இருபத்துநான்கு பயிற்சி வகுப்புக்கள் நிறைவுற்றதும் தேர்வு நடைபெற்று சித்தி பெற்றோருக்கு சைவமணி என்ற பட்டச் சான்றிதழ் வழங்கப்படும். இப் பயிற்சி வகுப்புக்களில் பங்குகொள்ள ஆர்வமுள்ளவர்கள் 0771823038 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவம் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டுமென பயிற்சி மைய இயக்குநர் அறியத்தருகிறார்.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட அரிசி விநியோகம்

*(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)*

ஜனாதிபதியின் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கான இலவச அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைத்திட்டம் களுத்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



களுத்துறை மாவட்ட ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன இந்நிகழ்வில் கலந்துகொண்டு அரிசி விநியோகத்தை ஆரம்பித்து வைத்தார்.

வேலைத்திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் கொண்ட அஸ்வெசும திட்டத்தின் பயனாளிகள், முதியோர், புற்றுநோய், சிறுநீரக நோயாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி கொடுப்பனவு பெறுவோர் உள்ளிட்ட சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களை இலக்காக கொண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றன.

# வறிய மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் வேலைத்திட்டம்





ஹாஷிம் உமர் பௌண்டேசனினால் க.பொ.த.சாதாரண தரம் கற்கும் வறிய மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் வேலைத்திட்டத்தின் முதற்கட்ட விநியோகம் கடந்த வெள்ளிக்கிழமை (07) கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் நடைபெற்றது. ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சம்மாந்துறை மின்மினி மின்ஹா, கொழும்பு ஆதிகா பஷீர், சாய்ந்தமருது செல்வி அமீர் பர்ஹத் ஜெபீன், ஹட்டன் செல்வன் நிதர்ஷன், மல்வானை செல்வி பாத்திமா நுஹா ஆகியோர் மடிக்கணினிகளைப் பெற்றுக் கொண்டனர்.

# மாவட்ட சாரணர் ஆணையர்கள் மாநாடு இம்முறை மலேசியாவில்



மலேசியாவில் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மாவட்ட சாரணர் ஆணையாளர் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள மாவட்ட ஆணையாளர்கள் மற்றும் தலைமையக ஆணையாளர்களுக்கு அறிவிக்கும் செயலமர்வு (08) கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் பிரதம சாரணர் ஆணையாளர் சட்டத்தரணி ஜனப்ரித் பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இலங்கை சாரணர் சங்கத்தின் தலைவர் பிரிகேடியர் ஜே.பி.ஏ.ஜயவர்தன, பிரதி பிரதம ஆணையாளர் எம்.எப்.எஸ். மூஹெட், தேசிய பயிற்சி ஆணையாளர் கேணல் பத்மலால் பெரேரா, சர்வதேச ஆணையாளர் கலாநிதி ராஜீவ் பீரிஸ், தேசிய வேலைத்திட்ட ஆணையாளர் கலாநிதி அசங்க ஏரியாவ, பொருளாளர் தினேஷ் மானவடு ஆகியோர் கலந்துகொண்டனர்.

மற்றும் சாரணர் தலைமையக ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட ஆணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அடையாளம் தெரியாத மூன்று சடலங்கள் மீட்பு!

கொழும்பை அண்டிய பகுதிகளில் அடையாளம் தெரியாத மூன்று சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நீர்கொழும்பு மற்றும் பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலேயே சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு மார்ஸ்டெல்லா பாடசாலைக்கு முன்பாக ஒருவர் உயிரிழந்துள்ளதாக 119 க்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன் உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

உயிரிழந்தவர் சுமார் 65 வயதுடையவர் என்றும், இறுதியாக பனியன் மற்றும் நீல நிற சதுரங்கள் கொண்ட சாரம் அணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நீர்கொழும்பு சிறிகுரச தேவாலயத்திற்கு பின்னால் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கிடப்பதாக 119 அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் கிடைத்தது. உயிரிழந்தவரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லையென நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவரின் முதுகு மற்றும் தோள்களில் பச்சை குத்திய அடையாளங்கள் இருந்ததாகவும், இறுதியாக நீண்ட கை சட்டை அணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரங்கொன் விகாரையினுள் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் பாணந்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் அவர் 60 முதல் 65 வயதுடையவர் எனவும் 05 அடி 01 அங்குலம் உயரம் கொண்டவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் சிவப்பு நிற மேலாடையும், நீலம் மற்றும் பிரவுன் நிற பாவாடையும் அணிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# Y'S Men International Sri Lanka Region இன் 48 ஆவது வருடாந்த மாநாடு

*Y'S Men International Sri Lanka Region (YSMISL)* இன் 48ஆவது வருடாந்த மாநாடு 15 ஜூன் 2024 அன்று கொழும்பு கோட்டையில் உள்ள *Grand Oriental* ஹோட்டலின் *"Rainbow"* அறையில் நடைபெற உள்ளது.

100 ஆண்டுகள் பழமையான *Y's Men International Geneva (YMI)* அமைப்பின் ஆசிய பசுபிக் பிராந்தியத் தலைவர், கெய்கோ டோனேகாவா சிறப்பு விருந்தினராகவும், இலங்கை *YMCA*க்களின் தேசிய கவுன்சிலின் தலைவர் வணக்கத்துக்குரிய சமன் பெரேரா கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர், *Finlays PLC* இன் முன்னாள் தலைவர் ரொமேஷ் மொராயஸ் முதன்மை பேச்சாளராக அழைக்கப்பட்டுள்ளார்.

1930ஆம் ஆண்டு இலங்கையில் நிறுவப்பட்ட *Y's dom* ஆனது, தற்போது நீண்ட 94 வருட பிரசன்னத்தை நிறைவு செய்துள்ளது, அதே வேளையில், நாட்டினுள், முதன்மையான தொண்டு மற்றும் சமூகம் சார்ந்த வேலைத் திட்டங்களையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. நமது சமூகத்தில் தேவையுள்ள மற்றும் பின்தங்கியவர்கள், இனம் மதம், அரசியல்சார் விருப்பங்கள், பாலினம் போன்றவற்றால் இழப்புகளைச் சந்தித்தவர்களுக்காக இவ்வமைப்பு பணியாற்றுகின்றது.

*YSMISL* அதன் குறிக்கோளுக்கு இணங்க இலங்கையில் உள்ள *YMCA* இன் தேசிய கவுன்சிலுடன் நெருக்கமான பங்காளியாக செயல்படுகிறது.

2024 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் திகதி தொடங்கும் ஆண்டிலும், பிரசாந்த டி சில்வா பிராந்திய இயக்குநராக (RD) பதவியேற்கவுள்ளார். மற்றும் அவரது அர்ப்பணிப்பு, அனுபவம் வாய்ந்த பிராந்திய சேவை இயக்குநர்கள் (RSDs) குழு இந்த இயக்கத்தின் எழுதப்படாத விதியை கடைப்பிடிக்கும்.

*Y's Men's Club of Young Moratuwa*வை 2016/17 & 2017/18 ஆகிய ஆண்டுகளில் தொடர்ச்சியாக வழிநடத்துவதன் மூலம், பிராந்தியத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட மிகவும் துடிப்பான மற்றும் சுறுசுறுப்பான அமைப்பில் இருந்து வந்த பிரசாந்த, 2ஆவது முறையாக பிராந்தியத்தை வழிநடத்துவார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஜுன் 12 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්



தொழுகை நேரம்
சுபஹ் - 04.31
ளுஹர் - 12.11
அஸர் - 03.39
மஃரிப் - 06.26
இஷா - 07.43

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் வைகாசி 30
ராகுகாலம் : காலை : 11.52 - 1.22வரை
சுபநேரம் : மாலை : 04.22 - 5.22வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# எவர் ஆட்சிக்கு வந்தாலும் IMF இன் ஒப்பந்தப்படி செயற்பட நேரிடும்

## 2025 பட்ஜட்டை தயாரிக்கையில் இது தெரியவரும்



அரசாங்கத்தை எவர் நிர்வகித்தாலும், 2028ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கைகளின் படி செயற்படப் போகிறார்களா இல்லையா என்பதை ஆட்சிக்கு வர எதிர்பார்க்கும் தரப்பினர் நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்தன,

இதுவரை பல்வேறு தரப்பினரும் போராட்டங்களையும், வேலை நிறுத்தங்களையும் முன்னெடுத்து வருகின்றனர். இதன்படி, அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் , உள்ளிட்ட அரசாங்க சபைகளில் நிலவும் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட சம்பளம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்வுகளை பரிந்துரை செய்து, 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் முழுமையான தீர்வுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அமைச்சரவை தீர்மானித்துள்ளது. அரசாங்கத்திற்கு எத்தனை தேவைகள் இருந்தாலும் 2024 வரவு செலவுத்திட்ட ஆவணத்தின் மூலம் கூடுதல் நிதி ஒதுக்கீடுகளைப் பெற முடியாது. கடந்த நான்கு தசாப்தங்களாக ஒரு அரசாங்கத்தின் அன்றாட அலுவல்களை மேற்கொள்வதற்குப் போதுமான வருமானம் இருக்கவில்லை என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும்.

2023, அனைத்து வகையான வரிகளையும் அதிகரித்து உள்நாட்டு இறைவரித் திணைக்களம் 1,550 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் மூலம் சுங்கத் திணைக்களம் 923 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது. மதுவரித் திணைக்களம் 169 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது. மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் 20 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளதுடன், வரி அல்லாத வருமானம் 219 பில்லியன் ரூபா கிடைத்துள்ளது. அத்துடன் 16 பில்லியன் ரூபா நன்கொடையாகக் கிடைத்துள்ளது. பல்வேறு வைப்பு நிதிகள் மூலம் 304 பில்லியன் ரூபா பெறப்பட்டுள்ளது. இதன்படி, அனைத்து வழிகளிலும் பெறப்பட்ட மொத்த வருமானம் 3201 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த வருமானங்கள் மூலம் அரசாங்கத்தின் அன்றாட செயற்பாடுகள், அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், சமுர்த்தி, அஸ்வெசும போன்ற நலன்புரி கொடுப்பனவுகள் மற்றும் கடன்களுக்கான வட்டி என்பவற்றைச் செலுத்த வேண்டும்.

06

# Online கசினோவை ஒழுங்குபடுத்த துரித நடவடிக்கை எடுப்பது அவசியம்

ஒன்லைன் கசினோவை ஒழுங்குபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென நிதி அமைச்சருக்கு அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

ஒன்லைன் கசினோ செயற்படுத்துவதற்கு சட்டரீதியான ஏற்பாடு ஒன்று இல்லாதுள்ளது.இந்நிலையில் இதனைப் பொருட்படுத்தாமல் நாட்டுக்குக் கிடைக்கும் வருமானத்தை இல்லாமல் செய்யும் வகையில், ஒன்லைன் கசினோ செயற்படுத்தப்படுகிறது.

இது தொடர்பில் அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விரைவாக கவனம் செலுத்துமாறு கோரி, நிதி அமைச்சருக்கு கடிதம் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண்மையில் (06) நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்தில், இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது.

கசினோ உள்ளிட்ட சூதாட்ட வர்த்தகங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வரிகளை அறவிடுதல் மற்றும் இது போன்ற வர்த்தகங்களுக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பில் மிகவும் முக்கியமான ஒழுங்குபடுத்தும் அதிகாரசபையை ஸ்தாபிப்பதற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறும், அதனை மேலும் தாமதப்படுத்த வேண்டாமெனவும் அதிகாரிகளுக்குக் குழுவின் தலைவர் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன், 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 03ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 04 ஆவது பிரிவின் கீழ், ஒழுங்குவிதி மற்றும் கட்டளை கருத்திற்கொள்ளப்பட்டது. இதையடுத்து இதற்கான அனுமதி குழுவினால் வழங்கப்பட்டது.

அத்துடன், 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதியும் அரசாங்க நிதி பற்றிய குழுவினால் கருத்திற்கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

இக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான நிமல் லான்சா, மயந்த திசாநாயக்க, சந்திம வீரக்கொடி, கலாநிதி நாலக கொடஹேவா, ஹர்ஷண ராஜகருணா மற்றும் மதுர விதானகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

# விவசாயம் மேம்படுத்தல் திட்டம்; ஓமான், இலங்கை உடன்படிக்கை



(தெஹிவளை, கல்கிஸ்ஸை விசேட நிருபர்)

நாட்டில் விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை மற்றும் ஓமானுக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவும்

06

# ரயில் சேவைகள் நேற்று வழமைக்குத் திரும்பின

## ரயில்வே DGM என்.ஜே. இந்திபொலகே

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தொழிற்சங்க நடவடிக்கைகள் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதையடுத்து நேற்றுக் காலை முதல், ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. லொகொமோட்டிவ் ரயில் சாரதிகள் தொழிற்சங்கம் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையிலான பேச்சுவார்த்தையின்போது இதற்கு தீர்வு காணப்பட்டது. பதவி உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து கடந்த (06) முதல் தொழிற்சங்கத்தினர் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

அமைச்சருடனான கலந்துரையாடலின் பின்னர், ரயில் பொது முகாமையாளர் எழுத்துமூலமாக வழங்கிய உறுதிமொழிக்கமைய தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்பட்டது.

இதன்படி நேற்றுக் காலை முதல் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக, ரயில்வே பிரதி பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபொலகே தெரிவித்தார்.

# வடக்கில் சீனாவின் கடலட்டை பண்ணை எங்கே இருக்கிறது?

## இடத்தை ஶ்ரீதரன் MP காண்பிப்பாரா?

(பருத்திதுறை விசேட நிருபர்)



வடக்கில் சீனாவின் கடலட்டை பண்ணைகள் எங்கே உள்ளன? ஆதாரத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இதை,காண்பிப்பாரா? என யாழ். ஈ.பி.டி.பி அலுவலகம் கேள்வி எழுப்பியுள்ளது.

வடபகுதியில் சீனாவின் கடலட்டை பண்ணைகள் உள்ள தை,பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் காண்பிக்க முடியுமா? என சவால் விடுத்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன், அவருக்கு இவ்வாறான பொய்களே தற்போது தேவையாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

06

## நோயாளர் பாதுகாப்பு, நல்வாழ்வு சாசனம்

# இறுதி வரைபு சுகாதார துறைசார் குழுவிடம்



நோயாளிகளின் பாதுகாப்பு, நல்வாழ்வு தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள சாசனத்தின் இறுதி வரைபை கையளிக்கும் நிகழ்வு, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் (06) பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுகாதாரம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன, நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ, சுகாதார இராஜாங்க அமைச்சர் அரம்பேபொல, சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மயந்த திசாநாயக்க, சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட உப குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உபுல் கலப்பதி, பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, இங்கை மருத்துவ சபையின் முன்னாள் தலைவரும், சர்வோதய அமைப்பின் தலைவருமான வின்யா ஆரியரத்ன, உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதி அலகா சிம் ஆகியோர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவால் நியமிக்கப்பட்ட உப குழுவின் தலைவர் உபுல் கலப்பதி ,

சாசனத்தின் இறுதி வரைபை சுகாதாரம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் மயந்த திசாநாயக்கவிடம் கையளித்தார்.

# சந்தையில் கோழி இறைச்சி வாங்குவதில் கவனம் தேவை

## வெள்ளத்தில் இறந்த கோழிகளும் விற்பனை C. A.A. தொழிலாளர் சங்கம் அறிவுறுத்தல்

கோழி இறைச்சியை சந்தையில் கொள்வனவு செய்யும் போது, அவதானத்துடன் செயல்பட வேண்டுமென நுகர்வோர் விவகார அதிகாரசபையின் தொழிலாளர் சங்கம் கேட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளம் காரணமாக கோழி இறைச்சி முதலானவற்றின் தூய்மைக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் என்பதாலேயே அச்சங்கம் இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

ஏராளமான கோழிப் பண்ணைகள் நீரில் மூழ்கியதால், கோழிகள் உயிரிழந்துள்ளதாக சங்கத்தின் செயலாளர் அஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். வெள்ளநீரில் எலிக்காய்ச்சல் போன்ற பல்வேறு வைரஸ்கள் பரவக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது. இதனால் வைரசுகளால் கோழிகளும் பாதிக்கப்பட்டிருக்கலாம். கோழிப் பண்ணைகளிலுள்ள கணிசமான எண்ணிக்கையிலான கோழிகள் வெள்ளத்தினால் அடிக்கடி இறப்பதாகவும் செயலாளர் அஜித் ஜயசுந்தர சுட்டிக்காட்டினார்.

கோழி இறைச்சி விற்பனைக் கடைகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், வெள்ளம் காரணமாக இறந்த கோழிகள் கண்டுபிடிக்கப்பட்டதாக செயலாளர் அஜித் ஜயசுந்தர கூறினார்.

'விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் கோழி இறைச்சி, அதன் தலைகள் தோல் அகற்றப்பட்டு இரத்தம் வெளியேறிய நிலையில் காணப்படக்கூடும். இருப்பினும் தோலில் சிவப்பு நிறம் கொண்ட கோழி இறைச்சி வெள்ளத்துக்குப் பிறகு பாதிக்கப்பட்ட கோழிப்பண்ணையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதாக இருக்கலாமென்றும் அவர் கூறினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சில, பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை விற்பனைக் கடைகளில் இத்தகைய சிவப்பு நிற கோழிகளை தமது சங்கம் அவதானித்ததாகவும் ஜெயசுந்தர குறிப்பிட்டார்.

Meatballs மற்றும் Sausages தயரிப்பதற்காக இவ்வாறு பல்வேறு விலங்குகளின் இறைச்சி அனுப்பப்படுவதாக அவர் கூறினார்.

# ஹோமாகம தர்ம ரஷ்மி பொசன் வலயம் 21, 22, 23 ஆம் திகதிகளில் ஏற்பாடு

## லேக்ஹவுஸ், ஐ.ரி.என், ரூபவாஹினி அனுசரணை

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் ஹோமாகம தர்ம ரஷ்மி பொசன் பண்டிகை இந்த வருடம் 21, 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த ஆண்டு தியகம, பிடிபன, தாம்பே, மீகொட, கொடகம, பனாகொட, ஹோமாகம ஆகியவற்றை இணைத்து 13 கிலோமீற்றர் வரையான பகுதி பொசன் வலயமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மற்றும் தஹம் பாசல , (ஞாயிறு அற நெறி) மாணவ, மாணவியர்களுக்கு மட்டுமின்றி பெரியவர்களுக்கும் பஹன்

06

# சட்டவிரோத கட்டுமானங்கள் ஈர நிலங்களை அழிப்பதை கட்டுப்படுத்த புதிய சட்டம்

சட்டவிரோத கட்டுமானங்களை அழிப்பது, ஈர நிலங்களை அழிப்பது உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்த புதிய சட்டங்கள் இயற்றப்பட உள்ளன. அதற்காக அனைத்து அரச நிறுவனங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர், டபிள்யூ. எஸ். சத்யானந்தா தெரிவித்தார்.

ஈர நிலங்களைப் பாதுகாத்தல், அதனுடன் தொடர்புடைய பல்லுயிர் பாதுகாப்பு, சுற்றுச்சூழலில் சமநிலையை உருவாக்குதல் போன்றவற்றுக்கு முன்மாதிரியான நாடாக இலங்கையை உருவாக்குவதற்கு இந்தக் கொள்கை வகுக்கப்படவுள்ளது. இது தொடர்பானன சகல அறிவையும் சேகரித்து ஒரு திட்டத்தைத் தயாரிப்பதே இதன் நோக்கமாகும்.

சர்வதேச ஈரநிலப் பூங்கா பங்களிப்புடன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஆசியாவின் முதல் மாநாடு குறித்து தெரிவிக்க இந்த செய்தியாளர் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது .

எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை பத்தரமுல்லை தியசரு பூங்காவில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் இதை ஏற்பாடு செய்துள்ளது .

உலகெங்கிலும் உள்ள 15 நாடுகளில் உள்ள 70க்கும் மேற்பட்ட ஈர நிலப் பூங்காக்களில் இருந்து, கிட்டத்தட்ட 100 பிரதிநிதிகள் இதில் பங்கேற்கின்றனர்.

06

# மனைவியை கொன்ற கணவன் கைது

கூரிய ஆயுதத்தால் தாக்கி மனைவியை கொலை செய்த நபர்,சில நாட்களுக்குப் பின்னர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இதையடுத்து இவரையும் கொலைக்கு உதவிய நண்பரையும் பொலிஸார் கைது செய்தனர்.

தலங்கம தலாஹேனயில் உள்ள வீடொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

31 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான இளம்பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவர் மற்றும் குழந்தையுடன் இப்பெண் வாடகை வீட்டில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில்,சமீபத்தில், இவரது கணவர், நண்பருடன் வீட்டிற்கு வந்ததாகவும் சிறிது நேரத்தில், கணவன்மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் தெரிய வருகிறது.

பின்னர், நண்பருடன் இணைந்து கணவன் தனது மனைவியின் தலையில் தாக்கி கொலை செய்துள்ளனர்.

# லசித்மலிங்க பாராட்டிய இளம் வீரரின் இல்லத்துக்கு ரிஷாட் எம்.பி விஜயம்



ஹொரவபத்தான, பத்தாவ பிரதேசத்தின் புகழ் பெற்ற இளம் கிரிக்கெட் வீரர் பைனாஸின் இல்லத்திற்கு

அண்மையில், ரிஷாட் பதியுதீன் விஜயம் மேற்கொண்டு அவரது திறமையை பாராட்டியதுடன் பணப்பரிசும் வழங்கினார். இந்த இளம்வீரர் குறித்து "இலங்கை கிரிக்கெட் வீரர் லசித் மாலிங்க தனது முகநூலில் அண்மையில் பதிவொன்றை இட்டிருந்தார். அதில் இளம் வீரர் ஒருவரின் திறமையான பந்துவீச்சு காணொளியொன்றை பதிவு செய்து இவர் பற்றிய தகவலை எனக்கு தருமாறும், திறமையாக பந்துவீசக்கூடிய இவருக்கு எதிர்காலத்தில் கிரிக்கெட்டில் நல்ல வாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் பாராட்டியிருந்தார். இதையடுத்தே,ரிஷாட்பதியுதீன் எம்பி. இந்த இளம் வீரரின் இல்லதுக்குச் சென்று அவரை வாழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.இவ்வீரர், அநுராதபுரம், ஹொரவாபொத்தான, பத்தாவ என்ற பிரதேசத்தினைச் சேர்ந்த மொஹம்மட் பழீல் மற்றும் மர்சூக்கா ஆகியோரின் மூன்றாவது புதல்வராவார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் வைகாசி மாதம் 30ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 துல்ஹிஜ்ஜஹ் பிறை 05

### குறள் தரும் சிந்தனை

இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம் செம்
பொருள் கண்டார்வாய்ச் சொல்

*அன்பு கலந்து வஞ்சம் அற்றவைகளாகிய சொற்கள், மெய்ப்பொருள் கண்டவர்களின் வாய்ச்சொற்கள் இன்சொற்களாகும்.*

## இலங்கைக்கு பொருளாதார நன்மைகளை கொண்டுவரும் ஜனாதிபதியின் இந்திய விஜயம்

இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற 2024 லோக்சபா தேர்தலில் தேசிய ஜன நாயகக்கூட்டணி வெற்றி பெற்று பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் பிரதமராகப் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார். பிரதமர் மோடி இம்முறை மூன்றாவது தடவையாக இந்தியாவின் பிரதமர் பதவியை ஏற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பிரதமர் மறைந்த ஜவஹர்லால் நேரு அந்நாட்டின் பிரதமர் பதவியை மூன்று தடவைகள் ஏற்கனவே வகித்துள்ளார். அவருக்கு பின்னர் அப்பதவியை மூன்றாவது தடவையாக ஏற்றுள்ள பிரதமர் என்ற பெருமையை நரேந்திர மோடி பெற்றுக்கொண்டுள்ளார்.

இப்பதவியேற்புக்கான உத்தியோகபூர்வ வைபவம் புதுடில்லி ராஷ்டிரபதி பவனில் கடந்த 09 ஆம் திகதி பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் இடம்பெற்றது. பிரதமர் மோடியின் விசேட அழைப்பின் பேரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட பிராந்தியத்திலுள்ள மாலைதீவு, பங்களாதேசம், பூட்டான், நேபாளம், மொரீஷியஸ், ஷீசியல்ஸ் உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

என்றாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுக்கு இந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் அளித்திருந்தன. புதுடில்லியின் பிரதான சுற்றுவட்டங்களைச் சுற்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்காவினதும் பிரதமர் மோடியினதும் உருவம் பொறிக்கப்பட்ட பதாதைகள் பரவலாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இவ்வைபவத்தின் போது, பிரதமர் மோடிக்கு தமது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை ஜனாதிபதி தெரிவித்துக் கொண்டார். அத்தோடு இரு நாடுகளது தலைவர்களும் இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுவுடன் முன்னெடுப்பதற்கான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினர்.

இவ்வைபவத்தில் பங்குபற்றியதன் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மேலும் வலுவடைய வழிவகை செய்துள்ளது. இலங்கை இந்தியாவின் அயல்நாடாகும். 'அயல் நாடு முதலில்' என்ற இந்தியாவின் கொள்கை இந்நாட்டுக்கு பல்வேறு நன்மைகளையும் பெற்றுக்கொடுத்து வருகின்றது. இந்நாட்டின் மேம்பாட்டுக்காக பல்வேறுவிதமான உதவி ஒத்துழைப்புக்கள் கிடைக்கப்பெற இக்கொள்கை பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இருநாடுகளும் ஆரம்ப காலம் முதல் சினேகபூர்வ நட்பு நாடுகளாக இருந்து வருகின்றன. இருநாடுகளுக்கும் இடையில் சமய, கலாசார, பொருளாதார உறவுகள் நீண்ட காலமாக நிலவுகின்றன. அதனால் உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இலங்கை நெருக்கடிகளுக்கு உள்ளாகும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உதவி ஒத்துழைப்புக்களை நல்க முதலில் வரும் நாடாக இந்தியா விளங்குகிறது. அதற்கு பிரதமர் மோடியின் அயல் நாடு முதலில் என்ற கொள்கை பெரிதும் உதவியாக அமைந்துள்ளது..

அந்த வகையில் கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் இந்நாடு அந்நியச் செலாவணி பற்றாக்குறையுடன் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளானது. அச்சமயமும் இந்நாட்டுக்கு உதவ முதலில் இந்தியாவே வந்தது. அத்தோடு அந்த பொருளாதார நெருக்கடியினால் நாடும் மக்களும் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் வகையில் பாரிய உதவி ஒத்துழைப்புகளை இந்தியா வழங்கியது. குறிப்பாக முதல் மூன்று மாதங்களுக்குள் 4 பில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட நிதியுதவியை வழங்கி உதவியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அழுத்தங்களும் மக்களுக்கு பாதிப்பாகவும் சுமையாகவும் அமைவதைத் தவிர்ப்பதே அந்த உதவி, ஒத்துழைப்புக்களின் பிரதான இலக்காக அமைந்திருந்தது.

அந்த வகையில் இலங்கை என்றும் இந்தியாவுக்கு நன்றிக்கடன் உள்ள நாடாக விளங்குகிறது. அதனால் பிரதமர் மோடியின் பதவி ஏற்பு வைபவத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றியதன் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது என உறுதிபடக்கூறலாம்.

அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வைபவத்தின் போது இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்டுள்ள பிரதமர் மோடி, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவும் உத்தேசித்திருக்கிறார்.

ஆனால் பிரதமரின் விஜயத்திற்கு முன்னர் தாம் இலங்கைக்கு வருகை தரவிருப்பதாக குறிப்பிட்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், தடைபட்டுள்ள இந்திய முதலீட்டு திட்டங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும். திருகோணமலையைக் கேந்திர மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட உள்ள கைத்தொழில் வலயத்தில் இந்திய முதலீட்டாளர்கள் பலர் முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதிக்கும் வெளிவிவகார அமைச்சருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்படி தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

ஆகவே பிரதமர் மோடியின் பதவியேற்பு வைபவத்தில் ஜனாதிபதி பங்குபற்றியதன் பயனாக இருநாடுகளுக்கும் இடையிலான நட்புறவில் புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளதோடு இலங்கைக்கு பல பொருளாதார நன்மைகள் கிடைக்கப்பெறவும் வழிவகை செய்துள்ளது என உறுதிப்படக்கூறலாம்.

editor.tkn@lakehouse.lk

# புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கி பயணிக்க முற்போக்கு சிந்தனையுடைய இளம் தலைமுறை தேவை





**இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க**

புதிய பொருளாதாரத்துடன் முன்னோக்கிச் செல்வதற்கு, முற்போக்கு சிந்தனை கொண்ட இளைஞர் சமூகம் அவசியம் என தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் ஐந்தாவது இளைஞர் பாராளுமன்றத்தின் ஆறாவது அமர்வின் இரண்டாம் நாள் நிகழ்வில், விசேட அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த ஜூன் 08ஆம் 09ஆம் திகதிகளில் ஜனாதிபதி செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குணரத்ன ஆகியோர் முதல் நாள் அமர்வின் சிறப்பு அதிதிகளாக கலந்துகொண்டனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இரண்டாம் நாள் அமர்வின் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டார். அத்தோடு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான பசிந்து குண



ரத்ன ஆகியோரும் பங்குபற்றி இருந்தனர்.

நாட்டில் நிலைபேறான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நிரந்தர பொருளாதார கொள்கையின் அவசியத்தை சுட்டிக்காட்டி, உத்தேச பொருளாதார மாற்ற சட்டமூலம் மற்றும் இலங்கையின் தேசிய இளைஞர் கொள்கையை தற்காலத்திற்கு ஏற்றவாறு உருவாக்குவது என்ற தலைப்புகள் இந்த அமர்வில் கலந்துரையாடப்பட்டன.

இளைஞர் பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முதல் நாள் அமர்வில், 62 உறுப்பினர்களும், இரண்டாவது நாள் அமர்வில் 79 உறுப்பினர்களும் பங்கேற்றனர்.

இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளித்த ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க, இளைஞர் பாராளுமன்றத்தில் சிறப்பான பங்குபற்றுதலுக்காக உறுப்பினர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்விலும் கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், 'இன்றைய அமர்வில் இளைஞர் கொள்கை மற்றும் பொருளாதார மாற்ற சட்டம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது. இளைஞர்களின் எதிர்காலத்திற்காக நாட்டில் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறார். 1978/79 இல் ஆரம்பிக்கப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையே நாம் இந்த நாட்டில் கடைசியாக கண்ட புதிய பொருளாதார முறைமையாகும். அதன் பிறகு, பொருளாதாரக் கொள்கைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், முற்றிலும் புதிய பொருளாதார முறைமை நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்படவில்லை. இதன் விளைவாக, ஒரு நாடாக நாம் போட்டியை எதிர்கொண்டு வேகமாக முன்னேற முடியவில்லை.

மேலும் நமது பொருளாதாரம், அரசியல் தாக்கங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. எங்கள் சிறு குழந்தைகளின் சிந்தனை மனப்பான்மை பாதிக்கப்பட்டது. ஒரு புதிய பொருளாதாரத்தை முன்னோக்கி நகர்த்துவதில், இளைஞர்களின் முற்போக்கான சிந்தனையும் அதனுடன் இணைந்து மேம்படுத்தப்பட வேண்டும். பிள்ளைகளின் கல்வி, அறிவு, பயிற்சி ஆகியவற்றை வளர்க்கவில்லை என்றால், எத்தனை பொருளாதார சீர்திருத்தங்களை கொண்டு வந்தாலும், அதனால் பலன் பெற முடியாது.

ஜனாதிபதியும் இதனை ஒவ்வொரு தடவையும் சுட்டிக்காட்டுகின்றார். நாம் நகர்ந்து கொண்டிருக்கும் புதிய பொருளாதாரத்திற்குத் தேவையான பயிற்சிகளை இப்போதிருந்தே பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும். அதற்கு மனதை தயார்படுத்த வேண்டும். பிற்போக்கு சிந்தனைகளையும் பழைய எண்ணங்களையும் மாற்ற வேண்டும். நல்லவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். பலவீனமானவற்றை விட்டுவிட வேண்டும். மேலும், புதிய திட்டத்தில் நல்ல விடயங்களை மாத்திரம் எடுத்துவிட்டு, பலவீனமானவற்றை விட்டுவிட வேண்டும். எனவே புதிய சட்டங்களை கொண்டு வருவதுடன் இளைஞர்களின் மேம்பாட்டிற்கும் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றமையையும் இங்கு குறிப்பிட வேண்டும்' என்று அவர் குறிப்பிட்டார்.

**ஜனாதிபதி ஊடகப் பிரிவு...**

# கொழும்பு சைவ மங்கையர் கழகத்தில் 21-23 வரை ஆய்வரங்கு, புத்தக கண்காட்சி

கொழும்பு சைவ மங்கையர் கழக மண்டபத்தில் ஜூன் 21, 22, 23 களில் நடைபெறவுள்ள ஆய்வரங்கு, புத்தக கண்காட்சி அரங்கில் தமிழகத்திலிருந்து பேச்சாளர், கதைசொல்லி பவா செல்லத்துரை, எழுத்தாளர் பெருமாள் முருகன், கர்நாடக இசைக் கலைஞர் டி.எம். கிருஸ்ணா, உலகறிந்த தமிழாய்வாளர் முனைவர் இரா வேங்கடாசலபதி, பதிப்பாளர் கண்ணன் சுந்தரம் உட்பட தமிழகத்தில் இருந்து பலர் வருகைதர உள்ளனர்.

இலங்கை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மூத்த கல்வியலாளர்களுடன், இளம் பல்கலைக்கழக ஆசிரியர்களும், ஆய்வாளர்களும், எழுத்தாளர்களும் தமது ஆய்வுகளையும் கருத்துக்களையும் முன்வைக்க உள்ளனர். பங்குபற்றுனர்களுடனான விரிவான கலந்துரையாடலும் இடம்பெற உள்ளது. புத்தக கண்காட்சி, 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாகி, 23 ஆம் திகதி ஞாயிறு இரவு வரை இடம்பெற உள்ளது. இந்த புத்தக கண்காட்சியில் தமிழகப் பதிப்பகங்களான பாரதி புத்தகாலயம், நியூசெஞ்சரி புக் ஹவ்ஸ், காலச்சுவடு, டிஸ்கவரி, எதிர், நன்னூல், சிக் சென்த் பதிப்பகங்கள் உட்பட, தஞ்ஞாவூர் பல்கலைக்கழகமும், லண்டன் சமூகம் இயல் பதிப்பகமும் கலந்து கொள்கிறது.இலங்கையிலுள்ள முன்னணிப் பதிப்பகங்களும், புத்தக நிலையங்களின் விற்பனைக் கூடங்களும் இடம் பெறவுள்ளதுடன், தமிழ், ஆங்கில சிறுவர் பதிப்பகங்களும் கலந்து கொள்ளவுள்ளன.

ஈழத்து தமிழ்மொழி எழுத்தாளர்களுக்கான தனி அரங்கும் விசேடமாக அமைக்கப்படவுள்ளது. இந்திய நூல்களை குறைந்த நாணய மாற்று விலையில் இங்கு பெற்றுக் கொள்ள முடியும். இந்த வாய்ப்பினை இலங்கை மாணவர்கள், எழுத்தாளர்கள், வாசிப்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும். பாடசாலை, பல்கலைக்கழக நூலகங்கள் தொடக்கம், உள்ளூராட்சி நூலகங்கள் தமக்கான நூல்களை பெற்றுக் கொள்ளவும் இந்த நிகழ்வு ஒரு அரிய வாய்ப்பாகும்.



**தமிழகத்தின் ஆளுமைகளும் பதிப்பகங்களும் பங்கேற்பு**

# கொழும்பு திண்மக்கழிவுத் திட்ட நிர்மாணப் பணிகள் நிறைவு





**ஆகஸ்ட் முதல் செயற்பாடுகள் ஆரம்பம்**

கொழும்பு பெருநகர திண்மக்கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும் அதன் செயற்பாடுகள் ஆகஸ்ட் மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படும் எனவும் கொழும்பு மாநகர கழிவு முகாமைத்துவ திட்டத்தின் பணிப்பாளர் சரத் பண்டார தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின் பரீட்சார்த்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த ஒத்திகை சோதனைகள் கடந்த 05ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் 2014 இல் அப்போதைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நகர்ப்புற திண்மக்கழிவு அகற்றல் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், புத்தளம் அருவக்காலு பகுதியில் உள்ள கைவிடப்பட்ட குழிகள், சுகாதார கழிவுகளை அகற்றும் வசதி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பை நிர்மாணிக்கும் பணியை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது.

களனி மற்றும் புத்தளத்தில் 02 கழிவுப் பரிமாற்ற நிலையங்களை நிர்மாணிப்பதும் அது தொடர்பான புகையிரத உட்கட்டமைப்பு மற்றும் வீதி அமைப்பும் இதன் கீழ் இடம்பெற்றது.

கொழும்பு பெருநகரத்தைச் சுற்றி சேகரிக்கப்படும் 1200 மெற்றிக் தொன் குப்பைகளை களனி குப்பை பரிமாற்ற நிலையத்திற்கு கொண்டு வந்து கொள்கலன்களில் அடைத்து புகையிரதத்தில் கொண்டு சென்று அருவக்காலுவில் சுகாதார முறையில் அப்புறப்படுத்த இத்திட்டம் முதலில் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், மேல் மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களால் அகற்றப்படும் எஞ்சிய கழிவுகள் அனைத்தும் சுகாதார முறையில் அகற்றப்படும் வகையில் இவ்வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மொத்த செலவு 130 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும் களனி இடமாற்ற நிலையத்திலிருந்து அருவக்காலு குப்பைக் கிடங்குக்கு புகையிரதத்தில் குப்பைகளை கொண்டு செல்வதற்காக 04 புகையிரத இன்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பமாகும் வரை இந்த என்ஜின்களை பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்த புகையிரத திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. குப்பையைக் கொண்டு செல்வதற்கென 94 கொள்கலன் பெட்டிகளும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. அத்தோடு இப்பணிக்கென 17 புகையிரத வண்டிகள் திருத்தப்பட்டும் உள்ளன.

இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர், திட்டத்தின் ஒப்பந்ததாரர்கள் 03 மாத காலத்திற்கு தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பயிற்சி அளித்து, குப்பை சேகரிப்பு முற்றத்தின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவார்கள். அருவக்காலு குப்பைத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை சீன நிறுவனமான சைனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனம் மற்றும் சீனாவின் சௌத்வெஸ்ட் முனிசிபல் இன்ஜினியரிங் அண்ட் ரிசர்வ் இன்ஸ்டிடூட் ஒப் சைனா நிறுவனம் ஆகியவை மேற்கொண்டன.

தற்போது, 140 ஏக்கர் பரப்பளவில் அருவக்காலுவில் கழிவு சேமிப்பு மையம் மற்றும் 20 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள வனவாசல கழிவு பரிமாற்ற மையம் ஆகியவற்றின் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

அதன்படி, இத்திட்டம் மார்ச் 31ஆம் திகதிக்குள் நிறைவுறுத்தப்பட்டது. கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, ஒரு வருடத்திற்கும் மேலாக இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது என்றாலும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூபா 5,500 மில்லியன்களாகும். இந்த நாட்களில் திட்ட பணிப்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி மற்றும் ஒத்திகை சோதனைகள் முடிந்தவுடன் திட்டத்தை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக திட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதற்காக மூன்று புதிய முதலீட்டாளர்கள் முன் வந்துள்ளனர். முதலீட்டாளர்களில் ஒருவரை தெரிவு செய்வதற்கான யோசனையும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

**முனீரா அபூபக்கர்...**




# ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் விபத்து; இருவர் படுகாயம்



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் தியகல பகுதியில் வான் தனியார் பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் வானில் பயணித்த இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் கினிகத்தேன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து நேற்று (11) காலை 7.30 மணியளவில் இடம்பெற்றதாக கினிகத்தேன பொலிஸார் மேலும் தெரிவித்தனர். கண்டியிலிருந்து ஹற்றனை நோக்கி பயணித்த தனியார் பஸ்ஸும், ஹற்றனிலிருந்து கண்டி நோக்கி பயணித்த வான் ஆகியன இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரியவருகின்றது.

விபத்து தொடர்பில் பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக கினிகத்தேன பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, பஸ், வான் என்பனவற்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதோடு விபத்து காரணமாக ஹற்றன் - கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கினிகத்தேன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



நோர்வே பாராளுமன்றத்திலும் 'மலையகம் 200' நினைவு முத்திரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமானால் கையளிக்கப்பட்டது.

# ஐஸ் போதைப் பொருளுடன் சிறைச்சாலை அதிகாரி கைது

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

ஐஸ் போதைப் பொருளை எடுத்துச் செல்லும் போது சிறைச்சாலை அதிகாரியொருவர் நிவித்திகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிகட சிறைச்சாலை வைத்தியசாலையில் கடமையாற்றும் சிறைச்சாலை அதிகாரியொருவரே இவ்வாறு ஐஸ் போதைப்பொருளை எடுத்துச் செல்லும் போது கடந்த 8ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இரத்தினபுரி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கபில பேமதாசவுக்கு கிடைத்த தகவலொன்றையடுத்து நிவித்திகல பொலிஸார் இரத்தினபுரி கலவான பிரதான பாதையில் கெடநிவத்த பகுதியில் பொலிஸ் தடையை ஏற்படுத்தி சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேகநபரை பரிசோதனை செய்த போது அவரது காற்சட்டை பையிலிருந்து ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் சில காலமாக ஐஸ் போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் நிவித்திகல கெடநிவத்த பகுதியில் வசிப்பவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை இரத்தினபுரி மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# குடும்ப பெண் ஆற்றில் விழுந்து மரணம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி கிரியெல்ல பிரதேசத்தில் பாலத்திலிருந்து தவறி விழுந்து குடும்பப் பெண்ணொருவர் நேற்று (11) உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் இப்பிரதேசத்தை சேர்ந்த 33 வயதுடைய பெண் என பொலிஸார் தெரிவித்தனர்.

பாலத்தின் மீது பயணிக்கும் போது இப்பெண் ஆற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தர்ப்பத்தில் ஆற்றின் நீர் மட்டம் உயர்ந்து காணப்பட்டதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிரியெல்லை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் கசிப்புடன் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி, தும்பனை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் இரண்டு போத்தல், கசிப்பு வடிசாராயத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹத்தரலியத்த பொலிஸ்பிரிவிலுள்ள பொல்வத்த என்ற பிரதேசத்தில் இக்கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

அரசியல் கட்சியொன்றை சேர்ந்த இவர் முன்னாள் பிரதேச சபை அங்கத்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டிருந்த போதே கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் இதற்கு முன்னரும் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



ரஷ்ய நாட்டின் கசான் நகரில் கல்வி அமைச்சர்களுக்கான 'எதிர்காலத்தை செப்பனிடல்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்றுவரும் மாநாட்டில் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துகொண்டிருந்தார். இம்மாநாட்டில் ரஷ்ய நாட்டு கல்வி அமைச்சர் சேர்கி க்ரவுத்சோ இராஜாங்க அமைச்சருக்கு கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.



# ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளின் பரிதாப நிலை! உதவி கோரும் பெற்றோர்

ஒட்டிப் பிறந்த இரட்டை பெண் குழந்தைகளை பராமரிக்கவும், அவர்கள் உடல்களை பிரிக்கவும் அரநாயக்க பிரதேசத்தில் வசிக்கும் தம்பதியினர் உதவிகேட்டுள்ளனர்.

அரநாயக்க, உடகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் இந்த இரண்டு குழந்தைகளுக்கும் தற்போது மூன்று வயதாகின்றது.

பிறந்ததிலிருந்தே இடுப்பு பகுதியில் ஒட்டிப் பிறந்துள்ள இவர்களைப் பராமரிக்கவும், சரியான ஊட்டச்சத்தை வழங்கவும் இப்பெற்றோருக்கு போதிய வருமானமில்லையென தெரிவிக்கின்றனர்.

இரண்டு குழந்தைகளின் இந்த நிலைமையால், பெற்றோர் தற்போது மிகவும் அவநம்பிக்கையான சூழ்நிலையில் உள்ளனர்.

சிறுமிகளின் 4 வயதுக்கு முன்பே உடலைப் பிரிக்க அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்ற சூழ்நிலையில், அதற்கான வைத்தியரை கண்டுபிடிப்பது கூட அவர்களுக்கு கனவாகவே மாறி விட்டது. இந்த அப்பாவி குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற உங்களால் முடிந்த பங்களிப்பை வழங்கினால், அது மிகப்பெரிய புண்ணியமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# யூனியன் அஷ்யூரன்ஸ் ஏற்பாடு செய்த Leader Conference 2024




யூனியன் அஷ்யூரன்ஸ் தனது அறிமுக Leader Conference 2024 நிகழ்வை குருநாகல், Epitome ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது. இதில் 250 க்கும் அதிகமான பங்குபற்றுனர்கள் பங்கேற்றிருந்ததுடன், அதில் யூனியன் அஷ்யூரன்ஸ் கிளை வலையமைப்பைச் சேர்ந்த முகவர் தலைமைத்துவ மற்றும் விற்பனை தலைவர்கள் பலரும் அடங்கியிருந்தனர். தலைமைத்துவ விருத்தி மற்றும் சிறப்பு ஆகியவற்றுக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பின் மற்றுமொரு மைல்கல்லாக இது அமைந்திருந்தது.

Leader Conference இனூடாக சிறப்பாக செயலாற்றும் தலைவர்களின் சாதனைகளை கௌரவிக்க எதிர்பார்க்கப்படுவதுடன், அவர்களுக்கு பரிபூரண பயிற்சி மற்றும் விருத்திக்கான வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதையும் இலக்காக கொண்டுள்ளது. பயிற்சிகளை வழங்குவதில் நிபுணரான நாலக ஹேவாமத்தும அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட அமர்வு நிகழ்வில் அதிகளவு முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. தலைமைத்துவ திறன்களை மேம்படுத்திக் கொள்வது தொடர்பில் தாம் கொண்டுள்ள ஆழமான அறிவை இவர் பகிர்ந்து கொண்டார். தலைமைத்துவம் வகிப்போருக்கு தமது செயற்பாட்டு வினைத்திறன்களை மேம்படுத்திக் கொள்ளவும், உயர்ந்த சாதனைகளை எய்தவும் செயலாற்றக் கூடிய தந்திரோபாயங்களை இவரின் பயிற்சி வழங்கியிருந்தது. பயிற்சி அமர்வுகளுக்கு மேலதிகமாக, சிறப்பாக செயலாற்றும் தலைவர்களுடனான குழுநிலை கலந்துரையாடலும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் போது, 2024 இன் முதல் காலாண்டில் சிறப்பாக செயலாற்றியிருந்த தலைவர்களை கௌரவித்து விருதுகள் வழங்கும் நிகழ்வும் இதன் போது முன்னெடுக்கப்பட்டது.




# கொமர்ஷல் வங்கியின் வர்த்தகக் கழகம் நடத்திய இறக்குமதி, ஏற்றுமதியாளர்களுக்கான நிகழ்வு



கொமர்ஷல் வங்கியினால் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு வங்கியின் வர்த்தகச் சேவைகளை இலகுவாக அணுகுவதன் மூலம் அவர்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட தளமான கொமர்ஷல் வங்கி வர்த்தகக் கழகம் (ComBank Trade Club) ஆனது அண்மையில் 100 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கவும் அவர்களது தேவைகள் மற்றும் கருத்துகள் பற்றி கலந்துரையாடவும் நிகழ்வொன்றை நடத்தியது. 'பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளித்தல் 'எனும் தொனிப்பொருளில் மரினோ பீச் ஹோட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வானது, கொமர்ஷல் வங்கியின் வாடிக்கையாளர்களான இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயக்கொள்கைச்சபையின் அங்கத்தவரான பேராசிரியர் திரு.பிரியங்க துனுசிங்க, வணிக திணைக்களத்தின் பணிப்பாளரான நலிந்த விஜேரத்ன, மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் (IRD) ஆணையாளர் பிரதீப் சில்வா, அத்துடன் Diesel & Motor Engineering PLC (DIMO) நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் மற்றும் பிரதம நிதியியல் அதிகாரியுமான சுரேஷ் குணரத்ன, ஆகிய திறன் கொண்ட ஆளுமைகளின் அறிவு மற்றும் அனுபவத்திலிருந்து பயன்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்கியது.

உள்ளடக்கப்பட்ட தலைப்புகள் நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் வர்த்தக சூழல், வர்த்தக வாடிக்கையாளர்களுக்கு வணிக திணைக்களம் வழங்கும் சேவைகள்; வெளிநாட்டு வர்த்தக பணிகள் மூலம் கிடைக்கும் நன்மைகள்;, இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கான வரிச் சலுகைகள் மற்றும் விலக்குகள்; மற்றும் வாகன போக்குவரத்து துறைக்கு அப்பாற்பட்ட பல்வகை வணிகத்தின் வெற்றிக் கதைகள் ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன.

# உலகளாவிய பெருந்தோட்டத் தொழிலில் உலக முதல்வரான மூன்று மகுடத்துடன் ஜொலிக்கும் ஹல்கொல்ல எஸ்டேட்

Kelani Valley Plantationsஇன் (KVPL) துணை நிறுவனமான Halgolla பெருந்தோட்ட நிறுவனம், பெருந்தோட்டத் துறையில் உள்ளூர் மற்றும் உலகளாவிய பங்குதாரர்களை ஒன்றிணைத்த செய்தியாளர் மாநாட்டில், உலகில் முதன்முதலாக மூன்று மகுடத்துடன் ஒரு வரலாற்று சாதனைப் படைத்ததை பெருமையுடன் அறிவித்தது.

இலங்கையின் முன்னேறிய தொழில் துறை நிபுணர்கள், சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் உள்ளிட்ட கௌரவமிக்க பிரமுகர்கள் கலந்து கொண்ட கிங்ஸ்பரி ஹோட்டலில் நடத்தப்பட்ட விசேட நிகழ்வின் போது இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் Hayleys குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹான் பண்டித்தகே, நெதர்லாந்து தூதுவர் மேன்மைப் பொருந்திய Bonnie



Horbach, இலங்கைக்கான நெதர்லாந்து இராச்சிய தூதரகத்தின் சிரேஷ்ட கொள்கை ஆலோசகர்விவசாயம், நிஷான் திஸாநாயக்க, ஜப்பான் தூதரகத்தின் துணைத் தலைவர் இலங்கை, கட்சுகி கோட்டாரோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

Halgolla Estatesஇன் முக்கிய சாதனைகள் குறித்து கருத்து தெரிவித்த Hayleys தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டித்தகே, "எங்கள் தரவரிசையில் இதுபோன்ற ஒரு முன்மாதிரியான தோட்டத்தைப் பற்றி யோசித்துப் பார்க்கையில் நாங்கள் நம்பமுடியாத அளவிற்கு பெருமை கொள்கிறோம்.

Halgolla Estate அதன் மதிப்புகளை நிலைநிறுத்துவதில் உறுதியாக உள்ளது, மேலும் உலகின் சிறந்தவற்றில் அவர்களின் அங்கீகாரம் மிகவும் தகுதியானது. அவை புத்தாக்கம் மற்றும் நிலைத்தன்மையின் கலங்கரை விளக்கமாக, முழுத் துறைக்கும் ஒரு முன்மாதிரியை அமைத்து, உள்ளூர், பிராந்திய மற்றும் உலகளவில் பெருந்தோட்டத் துறையின் எதிர்காலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன." என தெரிவித்தார்.

# பொருளாதார சவால்களுக்கு மத்தியில் சிறந்த நிதி வருவாயை கொண்டுள்ள Softlogic Capital



SoftLogic Life, SoftLogic Finance, SoftLogic Stockbrokers மற்றும் SoftLogic Asset Management (SoftLogic Invest) ஆகிய நிறுவனங்களின் நிதிச் சேவைப் பிரிவான Softlogic Capital, மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்தது.

மார்ச் 31, 2024 இல் முடிவடைந்த நிதியாண்டில், Softlogic Capital ஆனது முந்தைய நிதியாண்டை விட 13% வளர்ச்சியைப் அடைந்து, 36.7 பில்லியன் ரூபாய்களின் ஒருங்கிணைந்த வருவாயைப் பதிவு செய்ய முடிந்தது. பரிசீலனைக்கு உட்பட்ட காலப்பகுதியில் 168% வளர்ச்சியுடன் 431 மில்லியன் ரூபா வரிக்குப் பிந்திய இலாபத்தையும் பதிவு செய்ய முடிந்தது.

செயல்பாட்டு இலாபம் ஆண்டுக்கு ஆண்டு (YoY) 36% அதிகரித்து, வரிக்கு முந்தைய இழப்பு நிலையுடன் 11 பில்லியன் ரூபாவாக அமைந்துள்ளது. கடந்த வருடத்தில் பதிவான 2.3 பில்லியன் ரூபா நட்டத்துடன் ஒப்பிடுகையில், 66 மில்லியன் ரூபா என குறிப்பிடலாம். இதனுடன் தொடர்புடைய காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட செயல்பாட்டு இலாப வரம்பு 29% ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 400 அடிப்படைப் புள்ளிகள் அதிகரிப்பதாகக் குறிப்பிடலாம். மார்ச் 31 இல் முடிவடைந்த மதிப்பாய்வின் கடைசி காலப்பகுதியில் மொத்த வருவாய் 12% வளர்ச்சியுடன் 9.2 பில்லியன் ரூபாவாகும். வரிக்கு முந்தைய இலாபம் 763 மில்லியன் ரூபாவாக இருந்தது, இது 2023 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 150% வளர்ச்சியாகும். இதன் மொத்த சொத்து மதிப்பு 69 பில்லியன் ரூபாவாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

# இ.போ.ச 240 பேருக்கு NVQ சான்றிதழ்கள்





இலங்கை போக்குரத்து சபை பொறியியல் பிரிவில் நீண்டகாலம் பணியாற்றிய 240 தொழில்நுட்பவியலாளர்களுக்கு தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தலைமையில் நடைபெற்றது. “தொழில் பாகாப்பில் நம்பிக்கையின்றி நீண்டகாலமாக தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் செயல்பட்டது மாத்திரமின்றி இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தொழில்நுட்பத் துறைக்கு பெரும் பங்காற்றியிருப்பதாகவும் அமைச்சர் தமது உரையில் சுட்டிக்காட்டினார். அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் போக்குவரத்து அமைச்சர் , நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொகுகே , இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ், பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் குலதிலக , பிரதி முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹன்ச , தொழிற்சங்க பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## நாட்டின் முன்னேற்றத்துக்கு...

ஆதரவளித்து அவருடன் இணைந்து செயற்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று (11) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ,

“ஒலுவில் துறைமுகத்தை புனரமைத்து மீள இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள், கடற்படையினர், துறைசார் நிபுணர்கள், ஒலுவில் பகுதி புத்திஜீவிகள், மற்றும் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

அந்தப் பிரதேச மக்களின் நலன்களைப் பேணும் வகையிலும் அங்குள்ள வளங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்கின்ற வகையிலும் துறைமுகத்தை மேம்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். குறித்த துறைமுகத்தை நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கண்டறிவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும். அப்பணிகளை நிறைவு செய்து விரைவாக எமது இலக்கை அடைய வேண்டும்.

அண்மையில் இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ள விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம் வெற்றிகரமாக அமைந்தது. இவ் விஜயம் தொடர்பில் அமைச்சரவையிலும் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார். எமது நாட்டுக்கு வருமானம் ஈட்டும் வகையிலும், நாட்டில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு ஆயிரக்கணக்கில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் ஜனாதிபதியின் பயணம் அமைந்திருப்பதாக நான் கருதுகின்றேன். அதேநேரம், இந்தியாவின் குறிப்பாக தமிழ் நாட்டு மீனவர்கள் அத்துமீறி எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடுவதும், சட்டவிரோத உபகரணங்களைப் பயன்படுத்துவதும் எமது கடல் வளங்களை அழிக்கிறது. அது மட்டுமன்றி எமது மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது. எனவே இந்த, இலங்கை – இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினை தொடர்பிலும் ஜனாதிபதி தனது இந்திய விஜயத்தின்போது இந்திய தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். எனவே இந்த விடயம் குறித்து இரு நாடுகளும் இராஜதந்திர ரீதியில் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கமுயற்சிகள்மேற்கொள்ளப்படும். கடற்றொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்தும் வகையிலும் கடற்றொழில் துறை வளங்களைப் பாதுகாக்கும் வகையிலும் நாம் கடற்றொழில் தொடர்பான புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

துறைசார் நிபுணர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களின் கருத்துகளைப் பெற்றுக்கொண்டு இந்த சட்டத்தை மிக சிறப்பான முறையில் தயாரித்து பாராளுமன்றத்திற்கு முன்வைக்கவுள்ளதால் அதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும் கடற்றொழில்துறை தொடர்பான நியதிச்சட்டங்களைத் தயாரிக்கவும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

தற்போது எரிபொருள் விலையேற்றத்தால் மீனவர்கள் மாத்திரமன்றி நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கலந்துரையாடி வருகின்றோம். அதேநேரம், நன்னீர் மீன்வளர்ப்பு, நீர் முகாமைத்துவம் குறித்தும் விசேட அவதானம் செலுத்தி வருகின்றோம் என்றார்.

## G.C.E. A/L பரீட்சை நவம்பரில்...

ஆண்டுக்கான கல்வி பொது தராதர உயர்தர பரீட்சையை அடுத்த செப்டம்பர் மாதத்தில் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாணவர்களின் காலத்தை வீணடிக்காது அதனை பிரயோசனப்படுத்தும் வகையில், கல்வி பொது தராதர சாதாரண தரப் பரீட்சை நிறைவு பெற்றதும் உயர்தர பரீட்சையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழக அனுமதியை விரைவு படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்வி பொது தராதர சாதாரண தர பரீட்சை நிறைவு பெற்றதும் உடனடியாகவே உயர்தர பரீட்சைக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்படும். இதன் மூலம் பல்கலைக்கழக நுழைவை விரைவு படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் காலத்தை விரயம் செய்யாமல் அதனை பிரயோசனப்படுத்தும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ரூ. 1,700 சம்பள அதிகரிப்பு:...

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமூக அபிவிருத்திக் கொள்கையை அமைச்சர் மனுஷ நாணயக்கார பின்பற்றியிருந்தார். தற்போது ஜெனீவாவில் நடைபெறும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் வருடாந்த சர்வதேச தொழிலாளர் மாநாட்டில், அமைச்சருக்கும் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பணிப்பாளர் நாயகத்திற்கும் இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

தொழிலாளர் சந்தை தரநிலைகள் மற்றும் தொழில் நிலைமைகளை மேம்படுத்துவதற்கான தற்போதைய திட்டங்கள் மற்றும் அர்ப்பணிப்பு தொடர்பான உண்மைகளை அமைச்சர் இதில், தெளிவுபடுத்தினார்.

## 1,500 தோட்ட தொழிலாளர்களுக்கு...

தொழிலாளர்களுக்கு, கடந்த மே மாதம் 21 ஆம் திகதி முதல் கணக்கிடப்பட்டு 1,700 ரூபா சம்பளம் நேற்று முன்தினம் (10) வழங்கப்பட்டது. பண்டாரபொல, எல்கடுவ, அப்புகஸ்பிட்டிய, உனுகலை, மில்லவான, நாலந்த, பிட்டகந்த, ரத்வத்தை, செலகம ஆகிய பெருந்தோட்டங்களிலுள்ள சுமார் 1,000 தொழிலாளர்கள் இந்த அதிகரித்த சம்பளங்களை நேற்று பெற்றுக் கொண்டனர். எல்கடுவ பிளாண்டேசன் கம்பனியின் தலைவர் சுமித் ஜயரட்ண தெரிவித்தார். எல்கடுவ பிளான்டேஷன் நிறுவனத்தின் தலைவர் சுமித் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இ.தொ. கா மாத்தளை மாவட்ட அமைப்பாளர் கமலநாதன் மற்றும் முன்னாள் மத்தியமான சபை உறுப்பினரும் இ.தொ.க மாத்தளை மாவட்ட உப தலைவருமான எம். சிவஞானம் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

## மட்டு. நகரில் ஒரு புதிய...

"APARK" பத்திரிகை, இம்மாதம் (ஜுன்) தினகரன் நாளிதழுடனும் இதன் சிங்கள மொழிப் பத்திரிகை சிலுமின ஞாயிறு பத்திரிகையுடன் வெளியிடப்படவுள்ளன. நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய புதிய உயர் அடர்த்தி இரட்டை வரிசை பயிர்செய்கை முறையின் கீழ், மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியின் மாதுளை பயிர்ச்செய்கை மற்றும் வாகரை பகுதியின் வெள்ளரிப் பயிர்ச்செய்கை தொடர்பில் வாசகர்களுக்கு இதில் அறிந்துகொள்ள முடியும்.

## கனரக வாகன இறக்குமதிக்கு...

தொடர்பில் அரசாங்கம் தொடர்ந்தும் பரிசீலித்து வருவதாகவும் அவர் கூறினார்.

வாகனங்களை இறக்குமதி செய்யும் நாள் குறித்து அரசாங்கம் அறிவிக்கவில்லை. வாகன இறக்குமதி தொடர்பான அரசாங்கத்தின் தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இறக்குமதிகளை மேற்கொள்வது சாத்தியமா என்பது குறித்து அரசாங்கம் ஆலோசித்து வருவதாகவே பாராளுமன்றில் சுட்டிக்காட்டியதையும் அவர் குறிப்பிட்டார்.

## புற்றுநோய்க்கான மருந்து வகைகள்...

புற்றுநோய் மருந்துகளை சுகாதார அமைச்சுக்கு வழங்கும் நிகழ்வு நேற்றுக் (11) காலை அமைச்சில் நடைபெற்றது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைப் பெற்றுக் கொண்டார். இந்த ஆண்டு பெப்ரவரியில் சுகாதார அமைச்சுக்கும் LDS நிறுவனத்துக்கும் இடையில், கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு இணங்க இந்த மருந்து வகைகள் வழங்கப்பட்டன.

இந்த உடன்படிக்கையின்படி, 13 வகையான அத்தியாவசிய புற்றுநோய் மருந்துகள் கிடைக்கவுள்ளன.

இதன் பெறுமதி ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமாகும். நாட்டில் ஒரு வருட புற்றுநோய் சிகிச்சைக்கு இது போதுமானதாக இருக்கும். மாத்திரைகள், ஊசி வகைகள் மற்றும் மருந்துகள் என்பன இதில் உள்ளன.

## அமைச்சர் விஜேயதாசவுக்கு...

கொழும்பு மாவட்ட நீதிமன்றம் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளது. இந்த வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, வழக்கு தொடர்பில் உரிய ஆட்சேபனைகளை முன்வைக்க, கால அவகாசம் வழங்குமாறு பிரதிவாதி நீதிமன்றத்திடம் கேட்டுக்கொண்டார்.

இதனைக் கவனத்திற்கொண்ட நீதிமன்றம் அந்த தடையுத்தரவை எதிர்வரும் 25 வரை நீடிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் இராஜாங்க அமைச்சருமான லசந்த அழகியவன்னவினால், குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## IMF: கடன் ஒத்துழைப்பு இன்று...

முன்னேற்றம் தொடர்பிலும் மதிப்பீடுக்குட்படுத்தப்படும். தற்போது இது தொடர்பான செயற்பாடுகளை அரசாங்கம் நிறைவு செய்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது கடன் தவணையை பெற்றுக் கொள்வதற்கான மேற்படி பேச்சுவார்த்தை வெற்றியடையுமென தெரிவித்துள்ள அவர், இப்பேச்சுவார்த்தையின் போது சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை, இலங்கைக்கான மூன்றாவது கடன் தவணையை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் அனுமதியை வழங்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி, 330 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாகவும், மூன்றாவது கடன் தவணைக்கான மீளாய்வின் மூலம் அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்கடன் தவணை, சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் இலங்கைக்கு வழங்கும் கடன் ஒத்துழைப்புக்கான மூன்றாவது தவணையாகும்.இலங்கையின் கடன் மறு சீரமைப்பு நடவடிக்கைகள் தற்போது பலமானதாகவும் முன்னேற்றகரமானதாகவும் முன்னெடுக்கப்படகிறது என இராஜாங்க அமைச்சர் செஹான்சேமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

## பொசன் பண்டிகை: அநுராதபுரத்தில்...

ஸ்வர்ணபாலி தேசிய பாடசாலை, வலிசிங்க ஹரிச்சந்திர மகா வித்தியாலயம், நிவத்தகசேதிய தேசிய பாடசாலை, ஸாஹிரா தேசிய பாடசாலை, தேவநம்பியதிஸ்ஸபுர மகா வித்தியாலயம், மகாபோதி வித்தியாலயம்,மிஹிந்தலை மகாவித்தியாலயம், மிஹிந்தலை கம்மலக்குளம வித்தியாளயம் , தந்திரிமலை விமலஞான வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே மூடப்படவுள்ளன. பொசன் பண்டிகையை முன்னிட்டு விசேட பாதுகாப்பு கடமைகளுக்காக வெளி மாகாணங்களிலிருந்து வரும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்க இந்த பாடசாலைகள் மூடப்படுகிறன.

## அதிகாரப்பகிர்வு: ஐ.ம.சவின் தேர்தல்...

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா தமிழரசு கட்சியினரை, யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் சந்தித்தார்.இச்சந்திப்பு நேற்று முன்தினம் இரவு நடந்தது. இச்சந்திப்பு தொடர்பில் கருத்து தெரிவித்த சுமந்திரன் எம்,பி கூறியதாவது: அதிகாரப்பகிர்வு தொடர்பில் எமக்குள்ள ஏமாற்றங்களை எடுத்துக் கூறினோம்.

## ரஷ்ய வெளிநாட்டமைச்சருடன்...

இவ்விருவரும் இணங்கினர். அமைச்சர் அலி சப்ரி, இச்சந்திப்பின் போது, ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ள இலங்கையரின் பிரச்சினைகள் குறித்து ரஷ்ய பிரதமரின் கவனத்துக்கு இச்சந்திப்பில் கொண்டுவரப்பட்டது. இது தொடர்பில், வெளிநாட்டலுவல்களுக்கான இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையிலான இலங்கை உயர்மட்டக் குழுவுக்கும், ரஷ்ய கூட்டமைப்பின் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்குமிடையில் எதிர்வரும் 26, 27 ஆம் திகதிகளில் சந்திப்பு நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் இப்பிரச்சினை மீளாய்வு செய்யப்பட்டு, நிலைமையைக் கட்டுப்படுத்த தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## பெருந்தோட்ட சமூக மேம்பாடுகள்: USAID...

ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தியின் ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் தேயிலைத் தோட்டங்களில் உள்ள தேயிலை வகைகளை பொருளாதார வாய்ப்புக்களை உருவாக்கப் பயன்படுத்தல், பாதையோரங்களில் வாழும் மக்களின் வருமானத்தை அதிகரித்தல் என்பவற்றுக்கான விஷேட திட்டங்கள் தயாரிப்பது பற்றியும் இவர்கள் கவனம் செலுத்தினர். இப்பணிகளைச் செய்வதற்கு என்னும் உறுதியுடன் உள்ளதாக அமைச்சர் ஜீவன்தொண்டமான் இதன்போது அமெரிக்க அதிகாரியிடம் குறிப்பிட்டார்.

## கொழும்பில் 1,758 மாணவருக்கு...

இத்திட்டத்தின் படி, கொழும்பு மாவட்டத்தில் சுமார் 5,000 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.இதில் 242 பேர் உயர்தர மாணவர்களாவர்.க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 6,000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6,000 ரூபா வீதம் 24 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி எண்களுக்கு தொலைபேசி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் புலமைப்பரிசில் பெறுவது குறித்த தகவல்கள் அறிவிக்கப்படும்.

## டெங்கு அபாய வலயங்களின்...

மழையினால், டெங்கு அபாய வலயங்களின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது. இதனால் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் வெகுவாக அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்கள்

(12.06.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம் :**
உங்களின் கோரிக்கைக்கு உயர் அதிகாரிகளின் ஒப்புதல் கிடைக்கக்கூடும். சொந்த தொழிலில் ஆதாயம் சுமாராகவே இருக்கும்.

**ரிஷபம் :**
பூர்வீக சொத்தில் இருந்து எதிர்பார்த்த லாபம் வந்து சேரும். உத்தியோகத்தர்கள் தங்கள் பணியை சிறப்பாக செய்து உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுவார்கள்.

**மிதுனம் :**
பொருளாதாரத்தில் முன்னேற்றமான சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் முன்னேற்றமான மாற்றங்களை சந்திப்பார்கள்

**கடகம் :**
நல்லவை உங்களைத் தேடி வரக்கூடிய காலம் இது. உத்தியோகத்திற்கு பதவி உயர்வு சம்பள உயர்வு பெறுவர்.

**சிம்மம் :**
உத்தியோகத்தர்கள் எதிர்பார்த்த சில சலுகைகளை உயர் அதிகாரிகள் மூலம் பெறுவர். அலுவலகத்திற்கு புதிதாக வரும் நபரிடம் குடும்ப ரகசியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம்.

**கன்னி :**
உத்தியோகத்தில் எதிர்பார்க்கும் மாற்றங்களை சிலர் அடைவீர்கள். புதிய நபர் வருகையால் அசோகரிமான பணி ஒன்றை உடனே செய்ய வேண்டிய நிலை உருவாகலாம்.

**துலாம் :**
புதிய நபர்களை சந்திப்பதால் மாற்றங்களை எதிர்பார்க்கலாம். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் புதிய திருப்பம் உண்டாகும்.

**விருச்சிகம் :**
சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்க சிறிது காலம் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டியது முக்கியம். கூட்டுத்தொழில் சில சிரமங்களோடு நடைபெறும்.

**தனுசு :**
வீடு அல்லது மனை வாங்கும் யோகம் சிலருக்கு வாய்க்கும். உத்தியோகத்தர்கள் அலுவலகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவை பெற்று அதன் மூலம் சில சலுகைகளை பெறுவர் .

**மகரம் :**
பொருளாதார நிலை உயர்ந்து வங்கி சேமிப்பு அதிகரிக்கும். உத்தியோகத்தர்களில் சிலருக்கு பதவி உயர்வும் சம்பள உயர்வும் கிடைத்து இட மாற்றமும் ஏற்படக்கூடும்.

**கும்பம் :**
சிறிது காலம் பொறுமையாக காத்திருங்கள் சொந்தத் தொழில் நன்றாக நடைபெறும். கடுமையாக உழைப்பை வெளிப்படுத்த வேண்டியது இருக்கும் .

**மீனம் :**
வெளியூரிலிருந்து முக்கிய தகவல் வந்து சேரும். உத்யோகத்தர்களில் சிலர் செய்த தவறினால் அலுவலகத்தில் சில சலசலப்பு உருவாக்கக்கூடும்.

## எவர் ஆட்சிக்கு வந்தாலும்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அதற்காக 2023ஆம் ஆண்டில் மட்டும் 4.3 டிரில்லியன் ரூபா செலவாகியுள்ளன.

2025 ஆம் ஆண்டளவில், வெளிநாட்டு வள இடைவெளி சர்வதேச பரிவர்த்தனைகளுக்கு போதுமானதாக இருக்காது. கடந்த வருட அனுபவத்தின் படி அதற்கு 5018 பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

## ஹோமாகம தர்ம.... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

கூடு (விளக்கு) போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பொசன் வலயத்திற்கான அச்சு மற்றும் டிஜிட்டல் அனுசரனையை லேக்ஹவுஸ் நிறுவனம் வழங்குகின்றது. இலத்திரனியல் ஊடக அனுசரணையை சுயாதீன தொலைக்காட்சியும் மற்றும் ரூபவாஹினியும் வழங்குகின்றன.

இந்த போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு 40 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பெரியவர்களுக்கான பஹன் கூடு போட்டியில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.10 லட்சமும், இரண்டாம் இடத்துக்கு ரூ.5 லட்சமும், மூன்றாம் இடத்துக்கு ரூ.2 லட்சமும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். இது தவிர, 4ம் இடம் முதல் 14வது இடத்துக்கு தலா 50,000 ரூபாயும், 15 முதல் 25வது இடத்துக்கு தலா 25000 ரூபாயும் வழங்கப்படும்.

மாணவ, மாணவியர்களுக்கான போட்டியில் முதலிடம் பெறுவோருக்கு ரூ.5 லட்சமும், இரண்டாமிடம் பெறுவோருக்கு ரூ.2 லட்சமும், மூனறாமிடம். பெறுவோருக்கு 1 லட்சமும் 4ஆம் இடம் முதல் 14ஆம் இடம் வரை பெறுவோருக்கு ரூ.30000மும் வழங்கப்படும். 15 முதல் 25 இடம் வரை 20000 ரூபாய் பரிசு வழங்கப்படும். பொசன் பிரதேசத்திற்கு வருகை தரும் இலட்சக்கணக்கான மக்களுக்காக, பிடிபன நகரில் தானசாலைகளும் , பசுமைப் பல்கலைக்கழக மைதானத்தில் தினமும் இரவு 7 மணி முதல் பக்திப் பாடல் நிகழ்ச்சியும் நடைபெறும். இந்த நிகழ்ச்சி ரூபவாஹினி மற்றும் இலங்கை வானொலியில் தினமும் ஒளிபரப்பப்படும். லேக்ஹவுஸ் பத்திரிகையில் வெளியிடப்படும் கூப்பனை நிரப்புவதன் மூலம் தர்ம ரஷ்மி பொசன் பஹன் கூடு போட்டியில் பங்கேற்கலாம். மேலதிக தகவல்களை 0775448485 தர்ஷா அல்லது 0777207371 ஜெயமஹா என்ற தொலைபேசி இலக்கத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்.

## வடக்கில் சீனாவின்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

யாழ் ஊடக அமையத்தில் நேற்று (11) நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற தமிழர் பொருளாதார மாநாடொன்றில், சீனாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற கடலட்டைப் பண்ணைகள் புதிய தாக்கங்களை உருவாக்கியுள்ளன.

இது கடற்றொழிலில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகி றது. குறிப்பாக வடக்கு மீனவர்கள் இதனால், பெரும் இடர்களை எதிர்நோக்கியுள்ளனர் என கூறியுள்ளார்.

## சட்டவிரோத கட்டு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

இலங்கை, கொரியா, மங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்டான், மியான்மார், நியூசிலாந்து, நேபாளம், ஜப்பான், அவுஸ்திரேலியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், தாய்வான், இங்கிலாந்து ஆகிய 15 நாடுகள் இம்மாநாட்டில் பங்கேற்கின்றன. “சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கான ஈர நிலங்கள் மற்றும் ஈரநிலமையங்கள்” என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும். ஈர நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான நிர்வாகத்தில் ஒத்துழைப்பை ஊக்குவித்தல், மேம்படுத்தல் என்பன இம்மாநாட்டின் நோக்கமாகும்.

## விவசாயம் மேம்படுத்தல்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

ஓமான் தூதுவரும் நேற்று முன்தினம் (10) இந்த உடன்படிக்கையை கைச்சாத்திட்டனர். இரு நாடுகளுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ விஜயங்கள், ஆய்வுகள் மற்றும் விவசாய உற்பத்தி பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதிக்கு இந்த ஒப்பந்தம் வலுச்சேர்க்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இஸ்ரேலில் வேலைவாய்ப்பு...

செய்யும் ஏற்பாடுகளில் குற்றப்புலனாய்வு பிரிவினர் இறங்கினர். முறைப்பாட்டாளர்களிடமிருந்து மாத்திரம் நான்கு கோடியே 64,300 ரூபாவை இச்சந்தேக நபர் மோசடி செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தாதியாக வேடமணிந்து ஒருவரிடமிருந்து ஐந்து, பத்து, பதினைந்து இலட்சம் எனப் பலதரப்பட்டவர்களிடம் பணம் பெற்றுள்ளார்என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவில்

# இலவச குடிநீர் இணைப்புக்கு ஜூன் 21வரை கால அவகாசம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாமூலை, கணுக்கேணி கிழக்கு, கணுக்கேணி மேற்கு கிராமங்களில் இதுவரையில் இலவசமாக குடிநீர் இணைப்பை பெற்றுக்கொள்ளாத மக்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது என தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபையின் முல்லைத்தீவு காரியாலயம் அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாமூலை, கணுக்கேணி கிழக்கு, கணுக்கேணி மேற்கு ஆகிய கிராமங்களை சேர்ந்தவர்களில் இதுவரையில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால மைப்புச் சபையினால் வழங்கப்பட்ட இலவச குடிநீர் இணைப்பை பெற்றுக்கொள்ளாதவர்கள் எதிர் வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இலவச குடிநீர் இணைப்பை பெறுவதற்கான பதி வுகளை மேற்கொள்ளுமாறும் பதி வுகளுக்காக வருகை தரும் போது தேசிய அடையாள அட்டை, குடும்ப பதிவு அட்டை மற்றும்



காணி தொடர்பான ஆவணங்களு டன் தங்களின் விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப் புச் சபையின் முல்லைத்தீவு காரியா லயம் தெரிவித்துள்ளது.

அத்துடன் மேற்படி பிரதேசங்க ளில் ஏற்கனவே பதிவுகளை மேற் கொண்டு இதுவரையில் குடிநீர் இணைப்பை பெற்றுக் கொள்ளாத வர்களும் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களின் பதி வுகளை மீள உறுதி செய்து கொள் ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளனர்.

அத்தோடு 21ஆம் திகதிக்கு பின் னரான பதிவுகளுக்கு இலவச குடிநீர் இணைப்பு எதிர்வரும் காலங்களில் வழங்கப்பட மாட்டாது எனவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடி காலமைப்புச் சபையின் முல்லைத் தீவு காரியாலயம் தெரிவித்துள்ளது.

## வடக்கின் உதயம்

தமிழ் பொது வேட்பாளர்;

# சிக்கல் ஏற்பட்டால் நான் சுயேட்சையாக போட்டியிடுவேன்

எம்.கே.சிவாஜிலிங்கம்

யாழ். விசேட நிருபர்



தமிழ் பொது வேட் பாளரை நிறுத்துவதில் சிக்கல் ஏற்பட்டால் தான் சுயேட்சையாக போட்டியி டுவேன் என வட மாகாண சபையின் முன்னாள் உறுப் பினர் எம்.கே சிவாஜிலிங் கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு அவர் தெரிவித்தார். இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்த போது, "தமிழ் பொது வேட் பாளரை நிறுத்துவது தொடர் பில் முயற்சிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. இம்முறை மக்கள் மத்தியி லும் பொது வேட்பாளர் விடயம் பேசப்படுகிறது.

எனவே இம்முறை ஜனா திபதி தேர்தலில் பொது வேட்பா ளர் ஒருவர் முன்னிறுத்தப்படுவார். அதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட் டால் நான் சுயேட்சையாக போட்டி யிடுவேன்" என தெரிவித்துள்ளார்.

# 3000 மீற்றர் ஓட்டப் போட்டியில் சாதனை

10ஆவது வருடாந்த Master Athletics Championship போட்டி கடந்த மே மாதம் 25ஆம் மற்றும் 26ஆம் திகதிகளில் கொழும்பு சுகத தாச விளையாட்டரங்கில் நடைபெற் றது.

இதன்போது 74 வயது நிரம் பிய நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி பழைய மாணவரும், அகில இலங்கை இந்து இளையோர், முதியோர் நலன்புரி மன்ற தலை வரும், பல்துறை அறிவுக் கலசம் 'அ', 'ஆ' நூலாசிரியரும், யோகா மாஸ்டருமாகிய தம்பிராசா வேலா யுதபிள்ளை 3000 மீற்றர் ஓட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளார்.

இந்நிலையில் அவர் வெண்க லப் பதக்கத்தை பெற்றுக்கொண் டுள்ளார். இதேவேளை 80 மீற்றர்



ஓட்டப் போட்டியில் அவர் கலந்து கொண்டு தங்கப் பதக்கத்தினையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

# சட்டவிரோதமாக இயங்கிய மடுவம் கண்டுபிடிப்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ். பருத்தித்துறை, துன்னாலை பகுதியில் நீண்டகாலமாக சட்டவி ரோதமான முறையில் இயங்கி வந்த மாடறுக்கும் மடுவத்தை முற்றுகை யிட்ட சாவகச்சேரி பொலிஸார், இறைச்சிக்கு வெட்டப்படவிருந்த கன்றுத்தாச்சி மாடு உட்பட மூன்று பசு மாடுகளை நேற்று செவ்வாய்க் கிழமை காலை உயிருடன் மீட்டுள் ளனர்.

அத்துடன் பசு மாடுகளை கடத்த பயன்படுத்தப்பட்ட வாகனம் ஒன்று டன் பிரதான சந்தேக நபர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மட்டுவில் பகுதியில் அண்மையில் வளர்ப்பு மாடுகள் திருடப்பட்டதாக பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப் படையில் நீண்ட தேடுதலுக்கு மத்தியில் பொலிஸார் மேற்படி சட்டவிரோத மடுவத்தை கண்டுபி டித்துள்ளனர்.

இதன்போது சாவகச்சேரி, மட் டுவில் கிராமத்தில் திருடப்பட்ட ஒரு மாட்டினை பொலிஸார் மீட்ட துடன், ஏனைய இரண்டு மாடுகள் அடையாளம் காணப்படாத நிலையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வைத்து பராமரிக்கப் பட்டு வருகின்றது.

இந்நிலையில் 60 சி.சி.ரி.வி கம ராக்களை பார்வையிட்டும் 300 கிலோமீற்றர் தூரம் தேடுதல் நடத்தி யும் மேற்படி பசு மாடுகளை மீட்டி ருப்பதாக பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

இது இவ்வாறிருக்க உரிய அனு மதிப்பத்திரம் இன்றி அதிகளவான மாடுகளை சிறிய பட்டா ரக வாக னத்தில் ஏற்றிச் சென்ற குற்றச்சாட் டில் இருவரை கடந்த ஞாயிற்றுக் கிழமை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது சிறிய வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட 04 பெரிய மாடுகள் மற்றும் இரண்டு கன்று களையும் புத்தூர்ச் சந்திப் பகுதி யில் வாகனத்துடன் சாவகச்சேரி பொலிஸார் மீட்டனர்.

நெடுங்கேணி பிரதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்ட மாடுகளே இவ்வாறு பொலிஸாரால் மீட்கப் பட்டுள்ளன.

# யாழ். வட்டுக்கோட்டை பகுதியில் வாள்வெட்டு

இளைஞர் படுகாயம்



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தின் வட்டுக் கோட்டை, துணைவி பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்ப வத்தில் இளைஞர் ஒருவர் படுகா யமடைந்துள்ளார்.

இந்த இளைஞர், வன்முறைக் கும்பல் ஒன்றினால் வாள் வெட் டுக்கு இலக்காகியுள்ளதாக வட் டுக்கோட்டை பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

அண்மையில் இந்த வாள்வெட் டுச் சம்பவம் வட்டுக்கோட்டை, துணைவி பகுதியில் இடம்பெற் றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்க ளில் வந்த நான்கு பேர் கொண்ட வன்முறைக் கும்பலே இந்த வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண் டுள்ளனர்.

ஆயினும் வாள்வெட்டை மேற்கொண்டு விட்டு இந்த வன் முறைக் கும்பல் சம்பவ இடத்திலி ருந்து தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த வாள்வெட்டுச் சம்பவத்தில் காயமடைந்த இளைஞர் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசார ணைகளை தாம் உரிய முறையில் முன்னெடுத்து வருவதாகவும் ஆயினும் இந்தச் சம்பவம் தொடர் பில் இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வாள், போதை மாத்திரைகளுடன் கைதான மூவருக்கு விளக்கமறியல்

பிரதான சந்தேகநபரை 48 மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

யாழ். விசேட நிருபர்



யாழ்ப்பாணத்தில் போதை மாத்திரைகள் மற்றும் வாளுடன் கைதான நால்வரில் ஒருவரை நீதிமன்ற அனுமதியுடன் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஆனைக்கோட்டை பகுதியில் போதை மாத்திரை விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், நான்கு இளைஞர்களை கைது செய் ததுடன், அவர்க ளிடம் இருந்து சுமார் ஆயிரம் போதை மாத் திரைகளையும் வாள் ஒன்றினை யும் மீட்டனர்.

கைது செய்யப் பட்ட நால்வரை யும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசார ணைகளை முன்னெடுத்த பின்னர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நால்வரையும் யாழ். நீதவான் நீதி மன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்ற வழக்கு விசாரணைகளில் பிரதான சந்தேக நபரான இளைஞன் ஒருவரை பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைத்து மேலதிக விசாரணை களை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும் என மன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணபத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்று, பிரதான சந்தேக நபரை 48 மணிநேரம் பொலிஸ் காவலில் தடுத்து வைக்க அனுமதி வழங்கியதுடன், ஏனைய மூவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

பிரதான சந்தேக நபரின் தொலைபேசி தரவுகள் உள்ளிட்ட வற்றின் அடிப்படையில் விசாரணை களை முன்னெடுக்கவும், மேலும் சில சந்தேக நபர்களை அடையாளம் காண்பதற்காவே பொலிஸ் தடுப்பு காவலில் எடுத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் தக வல்கள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவில் ஐந்தாவது உலக சாதனை நிகழ்த்திய திருச்செல்வம்



சாவகச்சேரி விசேட நிருபர்

யாழ்ப்பாணம், தென்மராட்சியை சேர்ந்த 60 வயதான செ.திருச்செல் வம் நேற்று முன்தினம் திங்கட் கிழமை தனது ஐந்தாவது உலக சாதனையை இந்தியாவில் நிகழ்த்தி யுள்ளார்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தினால் இந்தியாவின் தமிழ்நாட்டு சிவகங்கை மாவட்டத் தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேற்படி உலக சாதனை நிகழ்வில் உலக சாதனையாளர் திருச்செல்வம் 1700 கிலோ எடை கொண்ட வாக னத்தை தனது தாடியின் பலத்தால் 510 மீற்றர் தூரம் இழுத்து தனது ஐந் தாவது உலக சாதனையை படைத் துள்ளார். உலக சாதனையாளர் திருச் செல்வம் இதற்கு முன்னர் தாடி, தலைமுடி மற்றும் கழுத்து ஆகிய வற்றின் பலம் கொண்டு கனரக வாக னங்களை இழுத்து நான்கு முறை சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத் தக்கது.


## இடம் தவறிவிட்ட ஏக்கர் இடப்பரப்பளவு வரிப் புத்தகம்

பலப்பிட்டிய, வெலகெதர, நீதிமன்றத்திற்கு அருகாமையில் வசிக்கும் B.H. ஜகத் டி சில்வா ஆகிய நான் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி அலுவலராக பிரஹமெனவத்த வடக்கு 20 ஆம் இலக்க ஏ.ஆர்.பி.ஏ. பிரிவில் கடமையாற்றுவதுடன் என்-411601-என்-411700 என்ற இலக்கத்தையுடைய ஏக்கர் இடப்பரப்பளவு வரிப்புத்தகமானது இடம் மாறிவிட்டது. அதனைக் கண்டுபிடித்தால், தயவு செய்து எனக்கு அறிவிக்கவும்.

தொலைபேசி : 0777 673 837


# சிறுவர் பூங்கா திறப்பு விழா





சாவகச்சேரி விசேட நிருபர்

சங்கானை பிரதேச செயலர் பிரி விற்குட்பட்ட பன்னாகம் காலையடி தெற்கு மறுமலர்ச்சி மன்றத்தின் சிறுவர் பூங்கா திறப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சை யாக இடம்பெற்றது. இதன்போது புலம்பெயர் தேசத்தவர்களின் நிதிப் பங்களிப்புடன் கட்டப்பட்ட பூங் காவினை விருந்தினர்கள் நாடா வெட்டித் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும், சிறுவர் பூங்காவினை அமைப்பதற்கான நிதிப் பங்களிப் பினை வழங்கிய புலம்பெயர் உற வுகளின் பெற்றோருக்கான கௌர விப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந் தினராக தேசிய கல்வியியற் கல்லூ ரியின் ஓய்வு நிலை விரிவுரையாளர் நடேசன் இரவீந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் சபா குகதாஸ் மற்றும் மறுமலர்ச்சி மன் றத்தின் முன்னாள் பொறுப்பாசிரி யர் இ.தர்ஷன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளனர்.

மேலும் சமூக மட்ட அமைப்புக் களின் பிரதிநிதிகள், மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

# இராணுவ வாகனம் – மோ.சைக்கிள் மோதி விபத்து; இருவர் காயம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தி னருக்கு சொந்தமான வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத் துக்குள்ளானதில் மோட்டார் சைக்கி ளில் பயணித்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த இராணுவத்தினருக்கு சொந்தமான பவுசர் வாகனம், புன்னாலைக்கட் டுவன் பகுதியில் மோட்டார் சைக்கி ளுடன் மோதி விபத்துக்கு உள்ளா னது. அதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் படு காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அடுத்த மாதம் சேவைக்கு திரும்பவுள்ள நெடுந்தாரகை

கோப்பாய் குறூப் நிருபர்

நெடுந்தாரகை பயணிகள் படகுச் சேவை அடுத்த மாதம் முதல் சேவைக்கு திரும்பும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தகவல் வெளியிட் டுள்ளன.

நெடுந்தீவுக்கான படகு போக்கு வரத்து மார்க்கங்களில் பிரதானமாக நெடுந்தாரகை படகு சேவையும் ஒன்றாக காணப்படுகிறது. இந்த நிலையில் நெடுந்தாரகை படகு திருத் தப் பணிகளுக்காக திருகோணமலை கடற்படை தளத்துக்கு எடுத்துச் செல் லப்பட்டு அங்கு திருத்தப் பணிகளும் இடம்பெறுகின்றன. இவை முடிவுற்று அடுத்த மாதம் படகு சேவைக்கு திரும் பும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை நெடுந்தீவுக்கான போக் குவரத்து சேவையை குமுதினி மற்றும் வடதாரகை படகுகள் வழங்கி வருகின் றன.

மேலும் நெடுந்தாரகை படகு சேவைக்கு திரும்பும் பொழுது வட தாரகை சோதனை நடவடிக்கைக்காக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.




# யாழ். பல்கலைக்கழகத்தில் சர்வதேச ஆய்வு மாநாடு

கோப்பாய் குறூப் நிருபர்

உலகளாவிய நிலைபேண் தன்மைக் கான ஊக்கமளிக்கும் மாற்றம் என்ற ஆய்வு கருப்பொருளிலான எட்டாவது சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வு மாநாடு, யாழ்ப்பாண பல்கலைக்க ழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் இன்று புதன்கி ழமை ஆரம்பமாகி நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் ஏற் பாட்டில் இன்றையதினம் மற்றும் நாளை வியாழக்கிழமை ஆகிய இரு தினங்களும் இந்தஆய்வு மாநாடு நடைபெறும்.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் ந.கெங் காதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரி யர் சி.சிறீசற்குணராஜா பிரதம விருந்தின ராக கலந்து கொள்ளவுள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மெல் போர்ன் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் சைமன் பெல் மற்றும் இலங்கை சப்ரக முவ பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேரா சிரியர் டி.என்.ஜெயந்தா ஆகியோர் முதன் மைப் பேச்சாளர்களாக கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆய் வாளர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் வணிகங்களை முகாமை செய்தல், மனிதவள முகா மைத்துவம், நிறுவன நடத்தை, வணிகத் தொழில்நுட்பம், நிதி மற்றும் கணக்கி யல், சந்தைப்படுத்தல், சுற்றுலாத்துறை மற்றும் பொருளாதார சமூகக் கொள் கைகள் போன்ற ஆய்வுப் பரப்புகளை கொண்ட ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக் கப்படவுள்ளன.

# கிழக்கின் குரல்



## அக்கரைப்பற்று நீர்ப் பாவனையாளர்களின் கையடக்க தொலைபேசிக்கு பட்டியல் விபரம்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

நவீனகால தொழில்நுட்ப வசதிகளுக்கமைவாக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையானது நீர்ப் பாவனையாளர்களுக்கு பல இலகு வழிகளை செய்து கொண்டு வருகின்றது. அதன் அடிப்படையில் அக்கரைப்பற்று முகாமையாளர் காரியாலயமானது மருதமுனை தொடக்கம் பொத்துவில் வரையான பிரதேசங்களில் உள்ள நீர்ப் பாவனையாளர்களுக்கு மாதந்தோறும் வழங்கி வரும் நீர்ப் பாவனை கட்டண பட்டியல் விபரம் இந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நீர்ப் பாவனையாளர்களின் கையடக்க தொலைபேசிக்கு அனுப்புவதாக அக்கரைப்பற்று பிராந்திய முகாமையாளர் பிரதம பொறியியலாளர் யூ.கே.எம். முஸாஜித் தெரிவித்தார்.

எனினும் நீர்ப் பாவனையாளர்கள் மூலம் இந்த சேவைக்காக ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கணிசமானளவு கையடக்க தொலைபேசி இலக்கங்கள் தற்போது பாவனையில் இல்லாமையால் மாதாந்த நீர்ப் பாவனை கட்டண பட்டியலை பாவனையாளர்களின் கையடக்க தொலைபேசிக்கு தமது காரியாலய உத்தியோகத்தர்களினால் அனுப்ப முடியாது உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த காரியாலய பிராந்தியத்திற்குட்பட்ட நீர்ப் பாவனையாளர்கள் தங்களது மாதந்த நீர்ப் பாவனை கட்டணப் பட்டியலை சிரமமின்றி தொடர்ச்சியாக பெற்றுக் கொள்வதற்காகநிலையானபாவனையில் உள்ள கையடக்க தொலைபேசி இலக்கத்தை தங்களது வீடுகளுக்கு மாணி வாசிப்பிற்காக வருகை தரும் உத்தியோகத்தர்களிடம் அல்லது நீர் வழங்கல் சபையினால் அறிமுகம் செய்யப்பட்ட எஸ்.எம்.எஸ் சேவை மூலம் பதிவு செய்து கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நீர்ப் பாவனையாளர்கள் தங்களது நீர்ப் பாவனை பட்டியலிலுள்ள கணக்கு இலக்கத்தை பாவனையில் உள்ள கையடக்க தொலைபேசி இலக்கத்தினூடாக 0719399999 என்ற இலக்கத்திற்கு எஸ்.எம்.எஸ் செய்வதன் மூலம் பல அசௌகரியங்களிலிருந்து நீர்ப் பாவனையாளர்கள் தவிர்த்து நடக்க முடியும் என்று பிராந்திய முகாமையாளர், நீர்ப் பாவனையாளர்களை கேட்டுக் கொண்டுள்ளார்.

## கிண்ணியா ஊடகவியலாளர்களுக்கு காணி வழங்க ஏற்பாடு

அதாஉல்லா எம்.பி. தெரிவிப்பு

**கிண்ணியா மாத்திய நிருபர்**



கிண்ணியா பிரதேச ஊடகவியலாளர்களின் நலன் கருதி அவர்களுக்கு காணிகள் வழங்குவதற்கு தேவையான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என கிண்ணியா பிரதேச அபிவிருத்தி குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான கிண்ணியா பிரதேச அபிவிருத்தி குழு கூட்டம், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (10) கிண்ணியா பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதனை தலைமை தாங்கி நடத்திய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முறையாக அரச அங்கீகார அடையாளத்துடன் இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக ஊடகத்துறையில் ஈடுபட்டு வருகின்றவர்கள் இதற்காக உள்வாங்கப்பட வேண்டும். இதற்காக பொருத்தமான அரச காணியுள்ள இடங்களை அடையாளப்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும் இந்தக் கூட்டத்தில் நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திருகோணமலை மட்டக்களப்பு வீதியில் பஸ் நிலையம் ஒன்றை அமைப்பதற்கும், கிண்ணியா பிரதேசத்துக்கு மின் பொறியியலாளர் அத்தியட்சகர் காரியாலயம் ஒன்றை அமைப்பதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கிண்ணியாவில் இருந்து கொண்டு செல்லப்படுகின்ற மணலுக்கு பிரதேச சபைக்கு உரிய வருமானத்தை பெற்றுக்கொடுப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டதோடு, இந்த விடயத்தை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்துக்கு கொண்டு செல்வதற்கும் முடிவு செய்யப்பட்டது.

கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் தற்போது ஏற்பட்டிருக்கும் இட நெருக்கடியை தீர்ப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

## திராய்மடு புதிய கட்டடத்தில் மட்டக்களப்பு மாவட்ட செயலகம்





**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு மாவட்ட செயலகமானது நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் திராய்மடு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவட்ட செயலக கட்டடத்தில் இயங்குவதாக அறிவித்துள்ளது. இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக புதிய கட்டடத்தொகுதியில் நிர்வாக பணிகளை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முதளிதரன் ஆரம்பித்து வைத்தார்.

ஆயினும் சில கிளைகளின் சேவைகள் மாத்திரம் மறு அறிவித்தல் வரை பழைய மாவட்ட செயலகம் இயங்கிய கட்டடத்தில் நடைபெறும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் பழைய மாவட்ட செயலக கட்டடத்தில் விளையாட்டுப் பிரிவு, நுகர்வோர் அதிகார சபை, சிறு கைத்தொழில் பிரிவு, சமூக பாதுகாப்பு சபை, பிரதி பதிவாளர் நாயக பிரிவு (கிழக்கு வலயம்), காணி பதிவாளர் பிரிவு, நன்னீர் மீன் வளர்ப்புப் பிரிவு, மனித வள அபிவிருத்தி அதிகார சபை, மாநாட்டு மண்டபம், யு.என்.டி.பி. ஆகிய பிரிவுகள் தற்போது இயங்கி வருகின்றன.

மேற்கூறப்பட்ட இப்பிரிவுகள் தவிர, ஏனைய சேவைகள் யாவற்றையும் திராய்மடு பகுதியில் அமைந்துள்ள புதிய கட்டடத்தில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

கோட்டையில் இயங்கிய மாவட்ட செயலகத்தின் இடவசதி பற்றாக்குறையினால் 2016ஆம் ஆண்டு புதிய மாவட்ட செயலகத்திற்கான கல் வைக்கப்பட்டு இந்த கட்டடத்தொகுதியின் நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

## 'பெண் ஆயுள்' தலைப்பில் சாய்ந்தமருதில் செயலமர்வு



**பாலமுனை தினகரன் நிருபர்**

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம மட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்களுக்கான 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவு பழக்க வழக்கம், தாய்,சேய் பராமரிப்பு மற்றும் குடும்ப நலத்திட்டம் தொடர்பான செயலமர்வு சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் அனுசரணையில் இந்த செயலமர்வு இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கி சங்க சமுதாய அடிப்படை அமைப்புகளின் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீனின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி வங்கி சங்க முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத் தலைமையில் இடம்பெற்ற இந்த செயலமர்வில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு செயலமர்வை ஆரம்பித்து வைத்தார்.

செயலமர்வின் வளவாளராகவும், விசேட அதிதியாகவும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அர்ஷத் காரியப்பர் கலந்து கொண்டார்.

'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவு பழக்க வழக்கம், தாய்,சேய் பராமரிப்பு, தொற்றா நோய் மற்றும் குடும்ப நலத்திட்டம் பற்றிய பூரண விளக்கத்தினை டாக்டர் அர்ஷத் காரியப்பர் வழங்கினார். சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம்.கபீர், செயலாளர் எம்.ஜானுன், பொருளாளர் ஏ.ஆர். ஷர்மிலா உள்ளிட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்கள் என பலரும் இதில் கலந்து கொண்டனர்.



காத்தான்குடி அல் குர்ஆன் மதரசாக்கள் அபிவிருத்தி சபையினால் 2021, 2023ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட அல்குர்ஆன் ஓதும் இறுதி தகுதிகாண் பரீட்சையில் பாலமுனை மதரசத்துல் இலாஹிய்யா சார்பாக பரீட்சைக்கு தோற்றி சித்தி அடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் பாலமுனை இர்ஷாத் பள்ளிவாசலில் நடைபெற்றது. இந்நிகழ்வு இதன் தலைவரும் மண்முனைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினருமான எம்.ஏ.எம்.சியாத் தலைமையில் நடைபெற்றது.

(படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)

## புதிதாக தெரிவாகிய கிராம அலுவலர்களுக்கு பயிற்சி

**திருகோணமலை தினகரன், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்**



திருகோணமலை மாவட்டத்திற்கென புதிதாக நியமிக்கப்பட்ட 51 கிராம உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நேற்று முன்தினம் திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் அம்மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2023.12.02 இல் கிராம உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் புதிய தெரிவுகள் இடம்பெற்றது. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட புதிய கிராம உத்தியோகத்தர்களுக்கு கிராம உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு ஏற்ப காலாண்டு பயிற்சியாக இப்பயிற்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.சுதாகரன், பிரதம கணக்காளர் ப.ஜெயபாஸ்கர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஏ.எல்.மஃறூப், கணக்காளர் ஏ.எல்.பிரசாத் விஜேசிங்க, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ். குருகுலசூரிய, வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் மற்றும் புதிய கிராம உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## பொத்துவிலில் முப்பெரும் விழா



**ஒலுவில் விசேட நிருபர்**

பொத்துவில் மறுவடிவம் அறக்கட்டளை அமைப்பின் ஐந்து வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்த 'மனித நேயத்திற்கான சமூகப்பணி' எனும் தொனிப்பொருளில் முப்பெரும் விழா கடந்த சனிக்கிழமை அமைப்பின் தலைவர் எம்.பி.முபாரக் தலைமையில் பொத்துவில் களப்புக்கட்டு வாசிகசாலை சிறுவர் பூங்காவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்பள்ளி பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் கலை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன் போது கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், முன்பள்ளி ஆசிரியைகள் கௌரவிக்கப்பட்டனர்.

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களிலும் கடமையாற்றி வருகின்ற முஅத்தீன்களின் பணிகளை பாராட்டி விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. சமூகப் பணியாளர்களின் சமூக சேவைகளை பாராட்டி பொன்னாடை போத்தி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## மின்கம்பத்துடன் கார் மோதி விபத்து



### மண்முனை, ஆரையம்பதி, காத்தான்குடியில் சிறிது நேரம் மின்தடை

**மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**



மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள தாழங்குடா பகுதியில் அதி சொகுசு ரக கார் ஒன்று மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளாகினார்.

பொத்துவிலில் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டுவிட்டு வந்த முன்னாள் எம்.பி சிவமோகனின் காரே தாழங்குடா பிரதான வீதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.25 மணியளவில் மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது மின்சாரக் கம்பமும் காரும் சேதமடைந்துள்ளதுடன் மண்முனை, ஆரையம்பதி, காத்தான்குடி போன்ற பிரதேசங்களில் மின்சாரத் தடையும் ஏற்பட்டது. இதன் பின்னர் இப்பிரதேசங்களில் தடைப்பட்ட மின்சாரம் சீர் செய்யப்பட்டு ஒரு மணி நேரத்தின் பின்னர் வழங்கப்பட்டது.

சிறு காயங்களுக்குள்ளாகிய நபர் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு திரும்பியுள்ளார்.

சாரதியின் உறக்க களைப்பே இந்த விபத்திற்கு காரணம் என பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை காத்தான்குடி போக்குவரத்து பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அரச நியமனம் வழங்க வேண்டுமென வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை

**தம்பலகாமம் குறூப் நிருபர்**

பட்டதாரிகளுக்கான நியமனங்களை அரசாங்கத் துறையில் வழங்குமாறு திருகோணமலை வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியம், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் ஒன்றியத்தின் ஊடக சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமை (09) கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போதே இவ்வாறு தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில், "எங்களது வேலையில்லா பிரச்சினையை ஜனாதிபதி செவிமடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம். இது தொடர்பில் பாராளுமன்றத்தில் பேசுவதற்காக ஊர் பாராளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் நாடி உள்ளோம்.

இந்த அரசாங்கம் மிக விரைவில் எங்களது வேலையில்லா பிரச்சினையை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

900 க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் எந்தவிதமான வேலையும் இல்லாமல் இருக்கின்றார்கள். 35 வயது கழிந்து விட்டது.

எங்களுக்கு சரியான வேலையை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

35 வயதுக்கு பிறகு நிறுவனங்களிலும் உள்ளீர்ப்பு செய்வதில் மிகவும் கடினம் உள்ளது.

உள்வாரி, வெளிவாரி வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் என எவ்வித பாகுபாடும் இன்றி எங்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்

பெண்ணுரிமை, பெண் சமூகம், பெண்களுக்கான பாதுகாப்பு சகலதையும் வழங்கக்கூடிய ஒரு நாடாக இருந்தும் எங்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற கால அவகாசம் மிகவும் அதிகமாக இருக்கின்றது.

உரிய வயதில் உரிய வேலை வாய்ப்புகளை தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளனர்.

இந்த ஊடக சந்திப்பில் வேலையில்லா பட்டதாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளின் தோட்ட உபகரணங்கள் திருட்டு

**மூதூர் தினகரன் நிருபர்**

திருகோணமலையின் மூதூர் மேற்கு கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட உப்புக்காச்சிமடு, நாணல்சேனை மற்றும் பாலக்காட்டு தோட்டக் கிராமங்களில் உள்ள மூன்று தோட்டக் குடிசைகளில் வைக்கப்பட்டிருந்த விவசாயிகளின் தோட்ட உபகரணப் பொருட்கள் பல நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு திருட்டுப் போயுள்ளன. இங்கு பெருமளவிலான தோட்டக்காரர்கள் மரக்கறி பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் மூன்று தோட்டக்காரர்கள் தமது குடிசைகளில் வைத்திருந்த தோட்ட உபகரணப் பொருட்களே திருட்டுப் போயுள்ளதாக தெரிவித்துள்ளனர். நீர்க்குழாய், நீர் இறைக்கும் இயந்திரம், விவசாய உபகரணங்கள், முற்கம்பிகள் மற்றும் குடிசைத் தளபாடங்கள் உள்ளிட்ட பல பாவனைப் பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறிருக்க கடந்த ஒரு வார காலத்திற்குள் ஐந்து தோட்டங்களுக்குள் இவ்வாறான விவசாய உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளதாகவும் அத்தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# செலிங்கோ லைஃப் சிரேஷ்ட பிரஜைகளுக்காக அறிமுகம் செய்யப்படும் 'மெடிக்கல் சேவர்' திட்டம்



சரியான நேரத்தில், மருத்துவ நன்மைகளுடன் கட்டமைக்கப்பட்ட ஆயுள் காப்புறுதித் திட்டம் ஒன்று, அசல் காப்புறுதி திட்டம் முதிர்ச்சியடைந்த பின்னர் 20 வருடங்கள் வரை மருத்துவத் தேவைகளுக்குச் செலுத்தக்கூடிய மருத்துவ நிதியை காப்புறுதிதாரர்களுக்கு வழங்கும் வகையில், சந்தையின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ற வகையில் செலிங்கோ லைஃப் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படும் காப்புறுதிதரர்களின் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சை செலவுகளை மீள்நிரப்பலுக்கான வாய்ப்பினை இந்த காப்புறுதி வழங்குகிறது. அத்துடன் காப்புறுதி ஒப்பந்த காலத்திற்கான பிரதி இலாபங்களுடன் கூடிய ஆயுள் காப்புறுதியையும் வழங்குகிறது. மேலும் காப்புறுதி ஒப்பந்த முதிர்வுக்குப் பின்னர் எதிர்கால மருத்துவச் செலவுக்கான சேமிப்பினையும் வழங்குகிறது.

காப்புறுதி ஒப்பந்தம் இல்லாதபோது மற்றும் பெரும்பான்மையினரின் வருமானம் ஈட்டும் திறன் குறையும் போது எழுபது மற்றும் எண்பது வயதுகளில் உள்ளவர்களின் மருத்துவச் செலவுகளை எதிர்நோக்குவதே இன்றைய முக்கியமான கவலைகளில் ஒன்றாகும்.' என்று செலிங்கோ லைஃப்பின் பிரதம செயற்பாட்டு அதிகாரியான திரு. ரங்க அபேநாயக்க தெரிவித்தார். 'செலிங்கோ லைஃப் மெடிக்கல் சேவர் இந்த கவலையை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்டுள்ளது.

செலிங்கோ லைஃப் மெடிக்கல் சேவர் காப்புறுதி ஒப்பந்த திட்டம் முடிவடையும் போது, ஒப்பந்ததாரர்களுக்கு திரட்டப்பட்ட மருத்துவ நிதியை மொத்தமாகப் பெறுவதற்கான விருப்பத்தை வழங்குகிறது.

# ஆசிய சர்வதேச அகாடமியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை எட்டியுள்ள HNB FINANCE



இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் முன்னணியில் இருக்கும் HNB FINANCE, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்வி மற்றும் உயர்கல்வி நிறுவனமான *Asian International Academy (AIA)* உடன் அண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டுள்ளது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் HNB FINANCE இன் கிளை முகாமைத்துவ மட்ட அதிகாரிகளின் கடன் முகாமைத்துவம் தொடர்பான தொழில்சார் அறிவை அதிகரிப்பதற்கும், அதன் மூலம் அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு திறமையான மற்றும் வசதியான சேவையை வழங்குவதற்குமான நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டது.

*Asian International Academy (AIA)* உடனான இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முதல் கட்டத்தின் கீழ், நாடு முழுவதும் பரந்து விரிந்துள்ள HNB FINANCE கிளை வலையமைப்பின் அனைத்து கிளை முகாமையாளர்களுக்கும் டிப்ளோமா படிப்புகளை படிக்க வாய்ப்பு வழங்கப்படும். அப்போது நிர்வாக மட்டத்தில் இருந்து விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வரை அனைவருக்கும் இந்த சந்தர்ப்பம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. சமிந்த பிரபாத் கருத்து தெரிவிக்கையில், "இந்த நாட்டில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு நிதி நிறுவனம் என்ற வகையில், அவர்களுக்குத் தேவையான சேவைகளை எளிதாகவும் திறமையாகவும் வழங்க நாங்கள் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். " என தெரிவித்தார்.

*Asian International Academy* இன் தகுதிவாய்ந்த விரிவுரையாளர்களின் தலைமையில் இந்த அனைத்து டிப்ளோமா படிப்புகளையும் முடித்த HNB FINANCE இன் கிளை முகாமையாளர்களுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழை வழங்குவதற்கு இலங்கை கடன் முகாமைத்துவ நிறுவனம் (SLICM) செயற்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாக குறிப்பிடலாம்.

## விலைமனுக்களுக்கான அழைப்பு - IFB

**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)**

**கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு**

**Friends நிலக்கடலை செயற்றிட்டத்திற்கு 1200 எண்ணிக்கையான நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்**
**(Supply and Delivery of 1200 Nos. of Pod Separators for Friends Groundnut project)**

**விலைக்கோரல் குறிப்பீட்டிலககம்: SAPP/PRO/GDS/2024/25**

இலங்கை அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திலிருந்து (IFAD) சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) செலவுக்காக நிதியுதவியைப் பெற்றுள்ளது மற்றும் நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கு நிதியுதவியின் ஒரு பகுதியை பயன்படுத்த உத்தேசித்துள்ளது. எந்தவொரு IFAD நிதியுதவியின் பயன்பாடும் IFAD இன் ஒப்புதலுக்கு உட்பட்டது, நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும். IFAD மற்றும் அதன் அதிகாரிகள், முகவர்கள் மற்றும் பணியாளர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிலிருந்து பாதிப்பில்லாதவர்களாக இருக்க வேண்டும்.

1. Friends நிலக்கடலை திட்ட விவசாயிகளுக்கு 1200 எண்ணிக்கையான நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரங்களை கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல் என்பன இந்த SAPP பெறுகையில் அடங்குகின்றன. ஒக்டோபர் மாத நடுப்பகுதிக்கு முன் இந்த விநியோகம் எதிர்பார்க்கப்படுகின்றது.
2. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரங்களின் நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரங்களை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து (''விலைமனுதாரர்கள்'') முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கொள்வனவாளர் இப்போது அழைக்கின்றார்.

| விலை மனு இல. | பொருட்களின் பெயர் | எண்ணிக்கை | விநியோகக் காலம் | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரம் | 1200 | 2024 ஒக்டோபர் 15ஆம் திகதிக்கு முன்னர் | 1,600,000.00 | 2024-11-13 |

இந்த விலைக்கோரல் ஆவணத்தில் உள்ள தேவைப்பாடுகளின் அட்டவணையில் இந்த பொருட்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் பற்றிய மேலதிக விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. பதிலளிக்க விரும்பும் அனைத்து தகுதியான ஏலதாரர்களுக்கும் இந்த விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB) திறக்கப்பட்டுள்ளது. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, தகுதிவாய்ந்த நிறுவனங்கள் பொருட்களையும் தொடர்புடைய சேவைகளையும் வெற்றிகரமாக வழங்குவதற்கான திறனை அதிகரிக்க ஏனைய விலைமனுதாரர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.
4. இந்தப் பெறுகையில் 1200 எண்ணிக்கையான நிலக்கடலை கோதுகளை வேறாக்கும் இயந்திரங்களை வழங்குதல் மற்றும் விநியோக அட்டவணையின் பிரகாரம் நகரங்களில் அமைந்துள்ள இடங்களுக்கு ஒற்றை ஒப்பந்தமாக விநியோகிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
5. IFAD இணையத்தில் www.ifad.org/project-procurement என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ள IFAD பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், இந்த விலைமனு ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு நடைமுறையின் ஊடாக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) முறையைப் பயன்படுத்தி விலைக்கோரல் நடத்தப்படும். NCB செயல்முறையானது விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் முன் ஒரு குறிப்பு சோதனை உட்பட தகுதிகள் மற்றும் கடந்தகால செயல்திறன் ஆகியவற்றின் மதிப்பாய்வு மற்றும் சரிபார்ப்பை உள்ளடக்கும்.
6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகத்தில் 2024-06-24ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
7. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டத்தின் (SAPP) 011-2448031 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெறுகை நிபுணரிடமிருந்து அல்லது procurement@sapp.lk என்ற முகவரியில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை 2024-06-13ஆம் திகதி முதல் 2024-07-02ஆம் திகதி வரையில் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 25,000.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் மற்றும் 2024-06-13ஆம் திகதி முதல் 2024-07-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை இலங்கை, ராஜகிரிய, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், செயற்றிட்ட பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து மேற்கூறப்பட்ட பெறுகைக்கான ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். செலுத்தும் முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும். கொடுப்பனவுகளை SAPP நிதிப் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும்.
9. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஒரு உறையில் இட்டு 2024-07-03ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பெறுகைப் பிரிவு, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 120 நாட்கள் வரையில் (2024-10-30ஆம் திகதி வரை) அல்லது வாங்குபவரால் நிர்ணயிக்கப்பட்ட நீடிக்கப்பட்ட நாள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல் முடிந்தவுடன், விலைமனுதாரர்கள் அல்லது கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.
10. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கம் (SAPP/PRO/GDS/2024/25) என்பன கடித உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களுடனும் 02ஆம் பந்தியில் (அட்டவணை) குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரிகள்

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம்,**
**இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய**
**கமத்தொழில் அமைச்சு,**
**தொலைபேசி இலக்கம் : + 94 11 2431 426**

**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)**

**பாதுகாப்பு அமைச்சு**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) நிதியளிக்கப்பட்ட தனிப்பு நடவடிக்கை திட்டத்தின் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தல் (RLVMMP)**

**Loan No: L0124A**

1. தனிப்பு நடவடிக்கை திட்டத்தின் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தல் (RLVMMP) செலவை நோக்கி ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) இடமிருந்து இலங்கை அரசாங்கம் ஏற்கனவே நிதியை பெற்றிருப்பதோடு காலி, கண்டி மற்றும் கேகாலை மாவட்டங்களில் பின்வரும் நிலச்சரிவு பொதிகளின் கீழான கொடுப்பனவுகளை செயற்படுத்துவதற்கு இதன் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட இந்தப் பொதியின் மதிப்பிடப்பட்ட செலவு கீழ் தரப்பட்டுள்ளது.
2. மேலுள்ள பணிக்காக தகுதியுடைய கேள்விமனுதாரர்களிடம் இருந்து பாதுகாப்பு அமைச்சு சார்பில் திட்ட பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கான நிர்மாணக் காலம் 270 நாட்காட்டி தினங்கள் என்பதோடு குறைபாடுகள் பொறுப்புக் காலம் 365 நாட்களாகும்.

| இல. | ஒப்பந்த இல. | பணி விபரம் | எதிர்பாராதவை மற்றும் வெட் தவிர்த்து மதிப்பிடப்பட்ட செலவு (இ. ரூபா) | CIDA பதிவு | மீளளிக்கப்படாத கட்டணம் (இ.ரூபா) | விலைமனு பிணை பெறுமதி (இ. ரூபா) மற்றும் செல்லுபடி திகதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | RLVMMP/ WORKS/06G | தனிப்பு நடவடிக்கை திட்டத்தின் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தலின் (RLVMMP) 6G பொதியின் கீழ் 101.6 கி.மீ. தொடக்கம் 113.8 கி.மீ. வரையில் (தள இல. 121) தெற்கு அதிவேகப் பாதையில் நிலச்சரிவு தனிப்பு நடவடிக்கைகள் - (E01) | 267.6 மில். | C3 அல்லது அதற்கு மேல் அல்லது SPI (SN) | 40,000.00 | 2024 டிசம்பர் 25 வரை செல்லுபடி 4.0 மில்லியன் |
| 02 | RLVMMP/ WORKS/05E | தனிப்பு நடவடிக்கை திட்டத்தின் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தலின் (RLVMMP) 5E பொதியின் கீழ் கேகாலை மற்றும் கண்டி மாவட்டங்களில் (தள இல. 36,46,68,91,92,152) 06 இடங்களில் நிலச்சரிவு தனிப்பு நடவடிக்கைகள் | 235.3 மில். | C3 அல்லது அதற்கு மேல் அல்லது SPI (SN) | 35,000.00 | 2024 டிசம்பர் 25 வரை செல்லுபடி 4.0 மில்லியன் |

3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான கேள்விமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல்/ AIIN மற்றும்/ அல்லது GOSL மூலம் தடை செய்யப்படாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   a) உள்ளூர் கேள்விமனுதாரர்கள் மண் ஆணியில் (Soil Nailing) கட்டிட நிர்மாணம் அல்லது சிவில் பொறியியல் அல்லது சிறப்பு நிர்மாண ஒப்பந்ததாரர்களின் பரப்புகளில் மேலுள்ள தரத்தில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA/ ICTAD) (முன்னர் ICTAD என அறியப்பட்டது) பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு செல்லுபடியான பதிவு ஒன்றை வைத்திருத்தல் வேண்டும்; மற்றும்
   b) பிரதான/ முன்னிலை தரப்பாக எந்த ஒரு "நிர்மாண ஒப்பந்தத்தையும்" மேற்கொள்வதற்கு விரும்பும் எந்த ஒரு வெளிநாட்டு ஒப்பந்ததாரரும் வெற்றிகரமான ஒப்பந்தத்தை பெறுவதற்கு வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களுக்கான தற்காலிக பதிவு சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் வேண்டும். 2018.08.23 ஆம் திகதிய "வெளிநாட்டு ஒப்பந்ததாரர்களின் பதிவு" 2085/19 ஆம் இலக்க வர்த்தமானியை பார்க்கவும் - இதனை www.documents.gov.lk என்ற இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும் என்பதோடு மேலதிக விபரங்களுக்கு www.cida.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசிக்கவும்.
4. 2016 ஜூன் 2 பெறுநருக்கான பெறுகை அறிவுறுத்தல்கள் மீதான AIIB இன் இடைக்கால நடவடிக்கை வழிகாட்டலில் விபரிக்கப்பட்டுள்ளவாறு கேள்விமனுவுக்கான கோரிக்கை (RFT) ஒன்றை பயன்படுத்தி தேசிய போட்டிரீதியான கேள்விமனு (NCT) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
5. ஆர்வம் பெற்ற தகுதியுடைய சர்வதேச மற்றும் உள்ளூர் கேள்விமனுதாரர்கள் RLVMMP, திட்டப் பணிப்பாளரிடம் இருந்து (தொ: 011 2559869) மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024.06.13 ஆம் திகதி தொடக்கம் 2024.07.03 ஆம் திகதி வரை வேலை நாட்களில் கொழும்பு 05, ஜாவத்த வீதி, இல. 99/1, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் 09.00 மணி தொடக்கம் 14.00 மணி வரை அலுவலக நேரங்களில் கேள்விமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். கேள்விமனு ஆவணங்களை 2024.06.12 ஆம் திகதி தொடக்கம் 2024.07.03 ஆம் திகதி வரை https://rlvmmp.lk மற்றும் www.nbro.gov.lk என்ற இணையதளங்களில் இருந்து விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும் என்பதோடு இந்த இணையதளத்தின் வழியான தரவிறக்கம் செய்யப்படும் கேள்விமனு ஆவணங்கள் சமர்ப்பித்தல்/ கூறுவிலையிடலுக்கு ஏற்கப்பட மாட்டாது.
6. கேள்விமனுவை சமர்ப்பிப்பதற்காக, மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கொழும்பு 05, ஜாவத்த வீதி, இல. 99/1, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன (NBRO), பணிப்பாளர் நாயகத்திற்கு நிறுவன முகவரி அச்சிடப்பட்ட அசல் கடிதத்தாளில் கேள்விமனு ஆவணக் கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வம் கொண்ட தகுதியுடைய கேள்விமனுதாரர்கள் 2024.06.13 ஆம் திகதி தொடக்கம் 2024.07.03 ஆம் திகதி வரை ஆங்கில மொழியிலான கேள்விமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும்.
7. கட்டணமானது NBRO காசாளருக்கு ரொக்கப்பணத்தில் மாத்திரம் செலுத்தப்படுதல் வேண்டும்.
8. மேலும், கேள்விமனுவுடன் சமர்ப்பிப்பதற்கு தேவையான PCA 3 படிவத்தை பெறுவதற்கு நிறுவனங்கள் பதிவாளரின் www.drc.gov.lk என்ற முகவரியில் ஒன்லைனில் பதிவு செய்வது அவசியமாகும். பதிவு செயல்முறை eroc.drc.gov.lk என்ற இணையதளத்தின் ஊடாக ஒன்லைன் முறைமை ஒன்றுக்கு மாற்றப்படும்.
9. ஒவ்வொரு கேள்விமனு ஆவணத்திலும் ITT 7.4 இல் அட்டவணைப்படுத்தப்பட்டவாறு தளப் பயணம் ஒன்று 2024.06.18 இல் இடம்பெறும் என்பதோடு கேள்விமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024.06.19 ஆம் திகதி 10.00 மணிக்கு கொழும்பு 05, ஜாவத்த வீதி, இல. 99/1, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
10. அனைத்து கேள்விமனுக்களும் கேள்விமனு படிவம் - IV ஆவது பிரிவில் தரப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதம் ஒன்றாக மாத்திரம் கொண்ட கேள்விமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். கேள்விமனு பிணை மற்றொரு நாட்டில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்டிருந்தால், அது கேள்விமனு படிவம் - IV ஆவது பிரிவில் தரப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் உள்ள ஏற்புடைய வங்கி ஒன்றினால் உறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
11. கேள்விமனு ஆவணத்தின் அனைத்துப் பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிடப்பட்டு மற்றும் அவரது முத்திரை இடப்பட்டிருத்தல் வேண்டும்.
12. கேள்விமனுக்கள் "அசல்" மற்றும் "நகல்" என சமர்ப்பித்தல் வேண்டும். அசல் மற்றும் நகல் ஆகியவை வெவ்வேறு கடித உறைகளில் முத்திரையிட்டு முறையே "அசல்" மற்றும் "நகல்" என குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் ஒற்றை கடித உறையில் மூடப்பட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பணி விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.
13. கேள்விமனுக்களை 2024.07.03 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் கீழுள்ள முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மின்னணு கேள்விமனு ஏற்பது/ சமர்ப்பிப்பதற்கு அனுமதி இல்லை. தாமதிக்கும் கேள்விமனுக்கள் ஏற்கப்படாது என்பதோடு நிராகரிக்கப்படும். கேள்விமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் கேள்விமனுதாரர்களின் பிரதிநிதிகள் மற்றும் பங்கேற்பதற்கு தேர்வு செய்யப்பட்ட எந்த ஒருவரினதும் முன்னிலையில் கீழுள்ள முகவரியில் அவை உடன் திறக்கப்படும்.
14. மேல் குறிப்பிடப்பட்ட முகவரி(கள்) ஆனது திட்டப் பணிப்பாளர், திட்ட முகாமைத்துவ பிரிவு, தனிப்பு நடவடிக்கை திட்டத்தின் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தல், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், இல. 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு 05, இலங்கை.

**சார்பான,**

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு (PPC)**
**தனிப்பு நடவடிக்கை திட்டத்தின் மூலம் நிலச்சரிவு பாதிப்பை குறைத்தல் (RLVMMP)**

# பெறுகை அறிவித்தல்

## வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

1. வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ்க் குறிப்பிடப்படும் செயற்றிட்டத்திற்காக வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் 2024.06.26 மு.ப. 11.00 வரை தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

| நிதியிடல் | செயற்றிட்டம் | கேள்விப் பத்திரக் கட்டணம் (ரூ) | 105 நாட்கள் செல்லுபடியாகும் கேள்விப்பிணை முறியின் பெறுமதி (ரூ) |
|---|---|---|---|
| வரிசை சுகாதார அமைச்சு | 2024ம் ஆண்டிற்காக வடமத்திய சுகாதார சேவைத் திணைக்களத்தின் நாய்கள் மலடாக்கல் நிகழ்ச்சித் திட்டம் - அநுராதபுரம் மாவட்டம் | 3,000.00 | 30,000.00 |
| | 2024ம் ஆண்டிற்காக வடமத்திய சுகாதார சேவைத் திணைக்களத்தின் நாய்கள் மலடாக்கல் நிகழ்ச்சித் திட்டம் - பொலன்னறுவை மாவட்டம் | 3,000.00 | 30,000.00 |

02. கேள்விதாரர் கால்நடை மருத்துவ சபையில் பதிவு செய்த வைத்தியராக இருத்தல் வேண்டும்.

03. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாத கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் கேள்வி கோரல் ஆவணத் தொகுதியொன்றை வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்திலிருந்து 2024.06.12 ஆம் திகதி முதல் 2024.06.26 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்திற்கு வருகை தந்து இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (மேலதிக தகவல்களை 025-2050718 / 025-2223790 இலக்கங்களை அழைத்துப் பெற்றுக்கொள்ளமுடிவதுடன் மாகாண சுகாதார சேவைத் திணைக்கள உத்தியோகபூர்வ இணையதளமான pdhsncp மூலமும் இவ் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

04. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2024.06.26 ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘தலைவர், மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் பண்டாரநாயக்க மாவத்த, அனுராதபுரம்’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ சமர்ப்பிக்கலாம்.

05. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்போது இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வெவ்வேறான இரு உறைகளிலிட்டு ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ எனக் குறிப்பிட்டு முத்திரை பொறித்து, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இடல் வேண்டும். அவ்வுறையின் இடதுபக்க மேல் மூலையில் “வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், நாய்களை மலடாக்கல் நிகழ்ச்சித் திட்டம் - 2024” எனக் குறிப்பிடல் வேண்டும்.

06. 2024.06.26 திகதி மு.ப. 11.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே அவை திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

07. இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்துள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட 2024.06.26 முதல் 105 நாட்கள் (2024.06.26 முதல் 2024.10.09 வரை) செல்லுபடியாகும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அலுவலகத்தில் குறித்த தொகையை வைப்புச்செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. இக்கேள்வி தொடர்பில் வடமத்திய மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் - வ.ம.மா,**
**பண்டாரநாயக்க மாவத்த,**
**அநுராதபுரம்.**

### நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
### நகர அபிவிருத்தி அதிகாரசபை
## விலைமனுக்களுக்கான அழைப்பு

கீழ் விபரிக்கப்பட்டுள்ளவாறு பணிகளுக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து நகர அபிவிருத்தி அதிகாரசபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (கனிஷ்ட), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை - 01**

| விலைமனு இல. | திட்டத்தின் பெயர் | வரிகள் தவிர்த்து மதிப்பிடப்பட்ட செலவு (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை தொகை (ரூபா) | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | தகுதியடைய CIDA பதிவுத் தரம் | விலைமனு பிணை செல்லுபடி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தெய்யந்தரவில் பஸ் நிலைய அபிவிருத்தித் திட்டம் PD/UDA/DPC/ DEIYANDARA /22/2024 | 18,700,000/- | வரி மற்றும் 5,100/- | 187,000/- | 180 நாட்கள் | C6 மற்றும் C5 | 2024/11/18 |

01. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

02. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் மேலுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ள தேவைகள் மற்றும் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள ஏனைய தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் - 1, 07 ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை தலைவரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2024 ஜூன் 12 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை 03 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை வேலை நாட்களில் பெறுகை அலுவலக தலைவரிடத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீசிக்க முடியும்.

04. நகர அபிவிருத்தி அதிகாரசபை, நிதிப் பிரிவில் சிறாப்பருக்கு மேலுள்ள அட்டவணை 01 இல் உள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை 2024 ஜூன் 12ஆம் திகதி தொடக்கம் 2024 ஜூலை 03 ஆம் திகதி வரை பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் - 1, 07 ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை தலைவருக்கு கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து எந்த ஒரு எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர் அல்லது அவர்தம் அங்கீகாரம் பெற்ற முகவரினால் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம்.

05. விலைமனுக்கள் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட இலங்கையில் உள்ள வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டவாறு வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணைகளின் பெறுமதி மற்றும் விலைமனு பிணைகளின் செல்லுபடிக் காலம் அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டிருப்பதோடு அது நகர அபிவிருத்தி சபை, தலைவரின் பெயருக்கு இருத்தல் வேண்டும்.

06. விலைமனுக்களை 2024 ஜூலை 04 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (கனிஷ்ட), 7ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிறிபாய - கட்டம் 1, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அசல் மற்றும் நகல் உடன் பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

07. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 ஜூன் 25 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் 1, 07ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, பெறுகை பிரிவில் இடம்பெறும். இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு அனைத்து விலைமனுதாரர்களும் அறிவுறுத்தப்படுகின்றனர்.

08. விலைமனுதாரரின் முந்தைய செயல்திறன் மற்றும் திரவ நிலை விலைமனுதாரர்களின் தேர்வில் கண்டிப்பாக மதிப்பிடப்படும். மோசமான செயல்திறனை கொண்ட விலைமனுதாரர்கள் எந்த ஒரு விலைமனுவிலும் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.

09. எந்த ஒரு விலைமனுவையும் தயாரிப்பதுடன் தொடர்புபட்ட செலவுகளுக்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை எந்த ஒரு பொறுப்பையும் ஏற்காது. கிடைக்கப்பெற்ற விலைமனுக்களில் பொருத்தமான விலைமனு ஒன்றை ஏற்பது அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழு (கனிஷ்ட) வசமானது. திணைக்கள பெறுகைக் குழுவின் (கனிஷ்ட) முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கனிஷ்ட),**
**நகர அபிவிருத்தி அதிகாரசபை,**
**07ஆவது மாடி, “செத்சிறிபாய”, கட்டம்-1**
**பத்தரமுல்லை.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு - IFB

### சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)
### கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**Friends நிலக்கடலை செயற்றிட்டத்திற்கு 1200 எண்ணிக்கையான மோட்டார் பொருத்தப்பட்ட பல்வகை செயற்பாடுடைய inter-cultivator இயந்திரம்**
**150 எண்ணிக்கையான 2 அங்குல நீர் பம்பி - மின்சாரம்**
**36 எண்ணிக்கையான 2 அங்குல நீர் பம்பி - எரிபொருள்**
**மற்றும்**
**186 எண்ணிக்கையான தெளிக்கும் நுண் நீர்ப்பாசனப் பொதியை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்துதல்**

**விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம்: SAPP/PRO/GDS/2024/26**

இலங்கை அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திலிருந்து (IFAD) சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை நிகழ்ச்சித் திட்டத்தின் (SAPP) செலவுக்காக நிதியுதவியைப் பெற்றுள்ளது மற்றும் ஒரு பகுதியை மேற்கூறிய பொருட்களின் வழங்கல் நிதியிடலுக்கு பயன்படுத்த உத்தேசித்துள்ளது. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட உருப்படிகளை வழங்குவதற்காக SAPP தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து (விலைமனுதாரர்கள்) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை செயற்றிட்ட பெறுகைக் குழு தற்போது அழைக்கின்றது

எந்தவொரு IFAD நிதியுதவியின் பயன்பாடும் IFAD இன் ஒப்புதலுக்கு உட்பட்டது, நிதி ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் IFAD இன் விதிகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும். IFAD மற்றும் அதன் அதிகாரிகள், முகவர்கள் மற்றும் பணியாளர்கள் SAPP தொடர்பாக எந்தவொரு தரப்பினராலும் கொண்டு வரப்படும் அனைத்து வழக்குகள், நடவடிக்கைகள், உரிமைகோரல்கள், கோரிக்கைகள், இழப்புகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிலிருந்து பாதிப்பில்லாதவர்களாக இருக்க வேண்டும்.

1. 1200 எண்ணிக்கையான மோட்டார் பொருத்தப்பட்ட பல்வகை செயற்பாடுடைய inter-cultivator இயந்திரங்கள், 150 எண்ணிக்கையான 2’’ நீர்ப் பம்பிகள் - மின்சாரம், 36 எண்ணிக்கையான 2’’ நீர்ப் பம்பிகள் - எரிபொருள் மற்றும் 186 எண்ணிக்கையான தெளிக்கும் நுண் நீர்ப்பாசனப் பொதிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் Friends நிலக்கடலை திட்ட விவசாயிகளுக்கு விநியோகித்தல் என்பன இந்த SAPP பெறுகையில் அடங்குகின்றன. ஒக்டோபர் மாத நடுப்பகுதிக்கு முன் இந்த விநியோகம் எதிர்பார்க்கப்படுகின்றது.

2. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரங்களைக் கொண்ட உருப்படிகளை வழங்குவதற்கு தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து (விலைமனுதாரர்கள்) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை செயற்றிட்ட பெறுகைக் குழு தற்போது அழைக்கின்றது.

| லொட் இலக்கம் | உருப்படியின் பெயர் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| லொட் 1 | மோட்டார் பொருத்தப்பட்ட பல்வகை செயற்பாடுடைய inter-cultivator இயந்திரம் - 4 Stroke | 1200 | 900,000.00 | 2024-11-13ஆம் திகதி வரை |
| லொட் 2 | 2’’ அங்குல நீர் பம்பி - மின்சாரம் | 150 | 150,000.00 | 2024-11-13ஆம் திகதி வரை |
| லொட் 3 | 2’’ அங்குல நீர் பம்பி - எரிபொருள் | 36 | 50,000.00 | 2024-11-13ஆம் திகதி வரை |
| லொட் 4 | தெளிக்கும் நுண் நீர்ப்பாசனப் பொதி | 186 | 465,000.00 | 2024-11-13ஆம் திகதி வரை |

3. லொட் ரீதியிலான விலைக்கோரல்கள் ஏற்கத்தக்கவை மற்றும் வழங்குநர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு விலைக்கோரலாம். இந்த விலைக்கோரல் ஆவணத்தில் உள்ள தேவைப்பாடுகளின் அட்டவணையில் இந்த பொருட்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள் பற்றிய மேலதிக விவரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

3. பதிலளிக்க விரும்பும் அனைத்து தகுதியான ஏலதாரர்களுக்கும் இந்த விலைக்கோரலுக்கான அழைப்பு (IFB) திறக்கப்பட்டுள்ளது. விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, தகுதிவாய்ந்த நிறுவனங்கள் பொருட்களையும் தொடர்புடைய சேவைகளையும் வெற்றிகரமாக வழங்குவதற்கான திறனை அதிகரிக்க ஏனைய விலைமனுதாரர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

4. இந்த Friends நிலக்கடலை திட்டத்திற்கான பொருட்களை வழங்குதல் மற்றும் விநியோக அட்டவணையின் பிரகாரம் நகரங்களில் அமைந்துள்ள இடங்களுக்கு விநியோகிக்கப்படும்.

5. IFAD இணையத்தில் www.ifad.org/project-procurement என்பதன் கீழ் வழங்கப்பட்டுள்ள IFAD பெறுகை வழிகாட்டியின் பிரகாரம், இந்த விலைமனு ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு நடைமுறையின் ஊடாக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) முறையைப் பயன்படுத்தி விலைக்கோரல் நடத்தப்படும். NCB செயல்முறையானது விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒப்பந்தத்தைக் கையளிக்கும் முன் ஒரு குறிப்பு சோதனை உட்பட தகுதிகள் மற்றும் கடந்தகால செயல்திறன் ஆகியவற்றின் மதிப்பாய்வு மற்றும் சரிபார்ப்பை உள்ளடக்கும்.

6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ராஜகிரிய, இல. 212/A, நாவல வீதி, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகத்தில் 2024-06-24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறும்.

7. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்டத்தின் (SAPP) 011-2448031 எனும் தொலைபேசி இலக்கத்தில் பெறுகை நிபுணரிடமிருந்து அல்லது procurement@sapp.lk என்ற முகவரியில் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் ஆவணங்களை 2024-06-13ஆம் திகதி முதல் 2024-07-02ஆம் திகதி வரையில் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 25,000.00 ரூபாவை செலுத்துவதன் பேரில் மற்றும் 2024-06-13ஆம் திகதி முதல் 2024-07-02ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை இலங்கை, ராஜகிரிய, இல. 212/A, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், செயற்றிட்ட பணிப்பாளருக்குச் சமர்ப்பித்து மேற்கூறப்பட்ட பெறுகைக்கான ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். செலுத்தும் முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும். கொடுப்பனவுகளை SAPP நிதிப் பிரிவிற்குச் செலுத்துதல் வேண்டும்.

9. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதி’’ எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட ஒரு உறையில் இட்டு 2024-07-03ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பெறுகைப் பிரிவு, சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம், இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும் அல்லது அந்த முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 120 நாட்கள் வரையில் (2024-10-30ஆம் திகதி வரை) அல்லது வாங்குபவரால் நிர்ணயிக்கப்பட்ட நீடிக்கப்பட்ட நாள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல் முடிந்தவுடன், விலைமனுதாரர்கள் அல்லது கலந்துகொள்ளத் தெரிவுசெய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும்.

10. ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கம் (SAPP/PRO/GDS/2024/26) என்பன கடித உறையின் மேல் இடது மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். அனைத்து விலைமனுக்களுடனும் 02ஆம் பந்தியில் (அட்டவணை) குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு உரிமம்பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.

மேலே குறிப்பிடப்பட்ட முகவரிகள்

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடைமை திட்ட அலுவலகம்,**
**இல. 212/A, நாவல வீதி, இராஜகிரிய**
**கமத்தொழில் அமைச்சு,**
**தொலைபேசி இலக்கம்: + 94 11 2431426**

Trusted Marketplace of Classified Advertisers




For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460 வது அத்தியாயம்) 7 வது பிரிவின் கீழ் அறிவித்தல்

**தொடர்பு இலக்கம்: பிய3/1/1/502**

இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம்: 2388/13 மற்றும் 2024.06.11. ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | கம்பஹா |
| பிரதேச செயலகப் பிரிவு | : | பியகம |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | இலக்கம் 279/ A, பட்டிவில, தெற்கு |
| கிராமத்தின் பெயர் | : | பட்டிவில |
| ஆரம்ப திட்டப்பட இலக்கம் | : | நிலப்பரப்பு வரைபட இலக்கம் 512437 வலய இலக்கம் 03 |
| துண்டு இலக்கம் | : | 01 முதல் 05 |

**எஸ். ஏ. ஷந்திமா சூரியஆரச்சி**
**பிரதேச செயலாளர் - பியகம.**

**2024.06.10ஆம் திகதி**
**பியகம பிரதேச செயலகத்தில்,**
**சபுகஸ்கந்த, மாகொல**

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி சுவீகரித்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டதன் பிரகாரம் காணி சுவீகரித்தல் சட்டத்தின் (460 வது அத்தியாயம்) 7 வது பிரிவின் கீழ் அறிவித்தல்

**தொடர்பு இலக்கம்: பிய3/1/1/502**

இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணியை அரசாங்கத்திற்கு சுவீகரித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமான மேலதிக விபரங்களுக்கு இலக்கம்: 2388/13 மற்றும் 2024.06.11. ஆம் திகதிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | கம்பஹா |
| பிரதேச செயலகப் பிரிவு | : | பியகம |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | இலக்கம் 276/ A, மாபிம, மேற்கு |
| கிராமத்தின் பெயர் | : | மாபிம |
| ஆரம்ப திட்டப்பட இலக்கம் | : | நிலப்பரப்பு வரைபட இலக்கம் 512422 வலய இலக்கம் 02 |
| துண்டு இலக்கம் | : | 01 முதல் 23 |

**எஸ். ஏ. ஷந்திமா சூரியஆரச்சி**
**பிரதேச செயலாளர் - பியகம.**

**2024.06.10ஆம் திகதி**
**பியகம பிரதேச செயலகத்தில்,**
**சபுகஸ்கந்த, மாகொல**

SUNDAY OBSERVER adZ it's what you want
தினகரன் வாரமஞ்சரி
Promotional Rates for Classified Advertisements
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Badulla & Nuwaraeliya District
Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.
Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.
Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.
Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.
Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.
Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.
Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.
Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.
Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.
ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

## தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் - களுத்துறை வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்கிப் பொருத்துதல் – 2024

## கேள்விக்கான அழைப்பு

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வளிச்சீராக்கி இயந்திரங்களுக்காக Non inverter மொடல் ஒன்றை வழங்கிப் பொருத்துவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கொள்ளளவு | தேவைப்படும் இயந்திர அளவு |
|---|---|---|
| 01 | 9000 BTU | 01 |
| 02 | 12000 BTU | 02 |
| 03 | 18000 BTU | 05 |
| 04 | 24000 BTU | 04 |

மேற்படி வேலைகள் பற்றிய சகல விபரங்களையும் கேள்வி ஆவணத்துடன் பெற்றுக்கொள்ளலாம். மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. 2500.00 ஆகும்.

2024.06.12 முதல் 2024.06.24 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவக அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2024.06.25 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

**தொ.பே. இலக்கம்: 034-2222264 / 034-2222001 நிர்வாகப் பிரிவின் நீடிப்பு : 237 / 333**

**தலைவர், பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம்,**
**களுத்துறை.**

## வேலைவாய்ப்பு

### கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபை (மேல் மாகாணம்)

### அபிவிருத்தி அதிகாரி - பதவிகள் 02 (அன்றாட அடிப்படை)

அபிவிருத்தி அதிகாரி பதவிக்கு கீழே காணப்படும் தகைமைகள் உள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி : அபிவிருத்தி அதிகாரி - அன்றாட அடிப்படை**
**அன்றாட சம்பளம் : ரூ. 34870/- மாதாந்த சம்பளம் + வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு.**
**கல்வித் தகைமைகள்: அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் புவியியல் / சமூக விஞ்ஞானம் / விவசாயம் / சுற்றாடல் / கல்வி பற்றிய பட்டம்.**
**வயதெல்லை : 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். கூடிய வயதெல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு அல்லது அரச அல்லது மாகாண அரச சேவையின் விண்ணப்பதாரிகளுக்கு பொருந்தாது.**

**வேறு விடயங்கள் :**

01. சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளின் அடிப்படை சம்பளத்தில் 10% ஊழியர் சேமலாப நிதிக்காக அவர்களால் செலுத்தப்பட வேண்டியதுடன் 5% ஊழியர் சேமலாப நிதிக்கும் 3% ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிக்கும் அதிகார சபையினால் செலுத்தப்படும்.
02. சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் நிறுவனக்கோவை, மேல் மாகாண நிதிவிதிகள், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள், இலங்கை அரசினால் அல்லது மேல் மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது விதிக்கப்படும் கட்டளைகள் மற்றும் விதிகளுக்கு இணங்குதல் வேண்டும்.

**சேர்த்துக்கொள்ளும் முறை :**

கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ அதிகார சபையின் தலைவரால் கோரப்படும் நேர்முகத் தேர்வு சபையின் முன்னிலையில் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படும். தகைமைகளினைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள், முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதாக அல்லது நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்படமாட்டாது. (மேல் மாகாணத்தில் பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு கூடுதல் கவனம் செலுத்தப்படும்).

**விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டிய முறை :**

தமது விபரங்களை உள்ளடக்கி உங்களால் தயாரிக்கப்படும் விண்ணப்பத்தை 2024.06.20 அல்லது அதற்கு முன்னர், தலைவர், கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா) தும்போவில, கரதியான, பிலியந்தலை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

தற்போது அரச / மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தமது சேவை தலைமையூடாக அனுப்பப்பட வேண்டியதுடன், நேர்முகத் தேர்விற்காக சமுகமளித்தல் சார்பாக எந்தக்கொடுப்பனவையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் எந்தவிதத்திலும் நேர்முகத்தேர்வுச் சபைக்கு வற்புறுத்தல் மேற்கொள்ளல் அப்பதவி கிடைப்பதற்கு தகைமையற்றதாகக் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபை,** **தொ.பே. இலக்கம் : 011-3056703**
**மேல் மாகாணம்.** **011-2613151**
2024.06.11

## அஞ்சல் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### இலங்கை அஞ்சல் திணைக்களத்திற்கு PASS Cloud கணனி சேவையை வழங்குதல், நிறுவுதல், கட்டமைத்தல் (PASS - Platform ஒரு சேவையாக)

1. இலங்கை அஞ்சல் திணைக்களத்திற்கு PASS Cloud கணனி சேவையை வழங்குதல், நிறுவுதல், கட்டமைத்தல் எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அஞ்சல் திணைக்களத்தின் சார்பில் அஞ்சல் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கிறார்.

| இல. | விபரம் | விலைக்கோரல் பிணை முறி (இல.ரூபா) |
|---|---|---|
| 1. | Private Platform as a service Cloud Computing Solution | 240,000.00 |

   சகல விலைமனுக்களுடனும் ''அஞ்சல் மா அதிபர், அஞ்சல் திணைக்களம்'' பெயரில் வரையப்பட்டதும் மற்றும் 2024 ஒக்டோபர் 29ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் இலங்கையில் செயற்படும் வங்கி அல்லது இலங்கை காப்புறுதி சபையினால் அங்கீகரிக்கப்பட காப்புறுதி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்று (நிபந்தனையற்ற) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
2. விலைக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் முறையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும்.
3. தகுதித் தகவுத்திறன்கள்:
   அ) இயைபுடைய செல்லுபடியாகும் வியாபாரப் பதிவு
   ஆ) PCA 3 படிவம் (1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம்)
4. 2024 ஜூன் மாதம் 02ம் திகதி பி.ப. 2.00 மணி வரையில் அஞ்சல் மா அதிபருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இலங்கை ரூபாவைச் செலுத்தி பின்வரும் முகவரிக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகளினால் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
5. கொழும்பு-10, இல. 310, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, அஞ்சல் திணைக்கள தலைமை அலுவலகத்தின் 3ஆம் மாடியிலுள்ள அஞ்சல் மா அதிபரின் கலந்துரையாடல் அறையில் 2024 ஜூன் மாதம் 19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இது சம்பந்தமான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
6. 2024 ஜூலை மாதம் 03ம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு விலைமனுக்களைக் கிடைக்கச் செய்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பின்வரும் முகவரியில் சுயவிருப்பத்தின் பேரில் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது விலைக்கோரலில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் 011-5746194 மற்றும் 011-4927249 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக கணக்காளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
   **கணக்காளர் (பெறுகைகள்),**
   **அஞ்சல் தலைமையகம்,**
   **இல. 310, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10.**
   **தொலைபேசி: 011-4927249**
   **தொலைநகல்: 011-2428726**
   **மின்னஞ்சல் முகவரி: acct.procurement@slpost.lk**
9. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
   **கணக்காளர் (பெறுகைகள்),**
   **அஞ்சல் திணைக்களம்,**
   **தரை தளம், அஞ்சல் தலைமையகம்,**
   **இல. 310, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
   **கொழும்பு-01000, இலங்கை.**
10. எக்காரணமும் காட்டாமல் எந்தவொரு அல்லது சகல விலைமனுக்களையும் மற்றும் விலைக்கோரலின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை அஞ்சல் திணைக்களத்தின் அஞ்சல் மா அதிபர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

**2024-06-12**

Repeat Your Ad For Better Offers

## அறிவித்தல்

பஸ்ஸர பிரதேச சபையின் 2025ம் ஆண்டின் மூலதன செலவு மதிப்பீட்டிற்கு மற்றும் அபிவிருத்தி திட்டமிடலுக்கு உட்படுத்துவதற்காக அதிகாரப் பிரதேசத்தின் பொது மக்களிடம் இருந்து அபிவிருத்தி ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும். அதற்காக உங்களது அபிவிருத்தி ஆலோசனைகளை 2024.06.30ம் திகதிக்கு முன்பு பதிவுத்தபாலில் எனக்கு அனுப்புமாறு அறிவிக்கிறேன்.

**டபிள்யூ.எஸ்.எம்.என். வனசிங்ஹ,**
**சபை செயலாளர்,**
**பஸ்ஸர பிரதேச சபை.**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசாங்கம்

## நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

### சீன – இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலையம்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**ஆய்வுகூட இரசாயனங்களின் வழங்கல் மற்றும் விநியோகத்திற்கான கேள்விமனு**

**ஒப்பந்த இல.: JRDC/ PRL/ NCB/ CHEM/ 2024/ 05**

1. ஆய்வுகூட இரசாயனங்களின் வழங்கலுக்காக சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலையம் சார்பில், பேராதனை, மீவதுர, E.O.E. பெரேரா மாவத்தை, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலைய, திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. பொது ஒப்பந்த பதிவாளருடனான 1987 இன் 03 ஆம் இலக்கத்தின்படி ஒப்பந்தப் பதிவின் சான்றிதழுடன் சேர்த்து வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளிலான கோரிக்கையில் பொருத்தமான வெட் மற்றும் மீளளிக்கப்படாத 12,500 ரூபா கட்டணத்தை செலுத்தி 2024.07.02 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிக்கு இடையே பேராதனை, மீவதுர, E.O.E. பெரேரா மாவத்தை, சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலைய, நிர்வாக மற்றும் நிதி உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனு ஆவணங்கள் கிடைக்கப்பெறும்.
3. விலைமனு ஆவணங்களை பேராதனை, மீவதுர, E.O.E. பெரேரா மாவத்தை, சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலைய, நிர்வாக மற்றும் நிதி உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
4. வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் ஆவணங்களுக்கான கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் ஆய்வுகூட இரசாயனங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் முகவர்களுக்கு மாத்திரம் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும்.
5. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும்.
6. மாற்று விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.
7. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.07.03 அன்று 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு பேராதனை, மீவதுர, E.O.E. பெரேரா மாவத்தை, சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலைய, நிர்வாக மற்றும் நிதி உதவிப் பணிப்பாளரின் அலுவலகத்துக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது கைகளால் சேர்த்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் 112,000.00 ரூபாவின் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனு பிணையானது 2024.11.03 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் பேராதனை, மீவதுர, E.O.E. பெரேரா மாவத்தை, சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலைய, கூட்ட அறையில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.
10. மேலதிக விபரங்களுக்கு, தொலைபேசி/ தொலைநகல் 0812058116, கைபேசி: 070 305 8116 பேராதனை, மீவதுர, E.O.E. பெரேரா மாவத்தை, சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலைய, நிர்வாக மற்றும் நிதி உதவிப் பணிப்பாளரை தொடர்புகொள்ளவும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**சீன - இலங்கை கூட்டு ஆராய்ச்சி மற்றும் செயல் விளக்க நிலையம்**

## பெறுகை அறிவித்தல்

### நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

### அபிவிருத்தி லொத்தர் சபை

### விலைக்கோரலுக்கான அழைப்பு

## 400 எண்ணிக்கையான லொத்தர் சீட்டு விற்பனை கூடங்களை வர்த்தக நாமமிடுதல் (Branding)

**BID No: DLB/PRO/2024/21**

நாடு முழுவதிலுமுள்ள 400 எண்ணிக்கையான லொத்தர் விற்பனை கூடங்களை வர்த்தக நாமமிடுவதற்காக (Branding) ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் சிறு அளவிலான பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
03. 2024-06-12ஆம் திகதியிலிருந்து 2024-07-03ஆம் திகதி வரையில் (வேலை நாட்களில்) மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாக 2,360.00 (18% வெட் சகிதம்) ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கொழும்பு-02, யூனியன் பிளேஸ், டாக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவின் வழங்கலாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
04. விலைமனு ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப் பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
05. விலைமனு ஆவணத்தில் தேவைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து விபரமான விபரங்களையும் விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.
06. விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''400 எண்ணிக்கையான லொத்தர் விற்பனை கூடங்களை வர்த்தக நாமமிடுதல்'' எனக் குறிப்பிட்டு இரு பிரதிகளிலான விலைமனுக்களை தலைவர், சிறியளவிலான பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02, இலங்கை என்ற முகவரிக்கு 2024-07-04ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு பிந்தாத வகையில் கிடைக்கச் செய்தல் வேண்டும் மற்றும் இதற்கு பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
07. விலைமனுக்களை 2024-07-04ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், சிறியளவிலான பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை இல. 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். 2024-07-04ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
08. அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் விலைமனு ஆவணங்களைப் பார்வையிடலாம். www.dlb.lk

**தலைவர்,**
**சிறியளவிலான பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011-4824824.**
**www.dlb.lk**
**2024-06-12.**

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–06–12

பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| **பொது நிதித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் இலத்திரனியல் அரச பெறுகை (e-GP) முறைமையின் மூலம் (10 மில்லியன் ரூபா வரை) பொருட்களுக்கான கேள்விகளை அழைக்கும் பணியில் நாம் ஈடுபட்டுள்ளோம். கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான தகுதித் தேவைப்பாடாக முறைமையில் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 011 -2635886/071-1525234 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக எமது அதிகாரியை தயவுசெய்து தொடர்புகொள்ளவும்.** | | | | | | | |
| **சிவில் கேள்விகள்** | | | | | | | |
| **01** | தும்மோதரைக்கு அருகில் உள்ள வக் ஓய கடவையில் பிரதான பரிமாற்றம் (N33) முதல் கலட்டுவாவ WTP வரைக்குமான திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **RPC/WP/W/KAL/CIVIL/RH/2024/36** | 20,000/- + VAT | ரூபா 810,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | ஏறக் குறைய 66 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 19/06/2024<br>மு.ப. 10.00 |
| **02** | நாச்சதூவ - அனுராதபுரம் கிழக்கு (விஜயபுர/ நாச்சதூவ) நீர் வழங்கல் திட்டத்தில் Chain Link வேலியை நிர்மாணித்தல் மற்றும் அனுராதபுரம் கிழக்கு நீர் வழங்கல் திட்டத்தில் பாதுகாப்பு மதிலை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RH/NC/DGM/CIVIL-FEN/APE-NACH/2024/059** | 6,000/- + VAT | ரூபா 118,700/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 8.6 மில்லியன் | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele: 0252222296/ 0252235339<br>Fax: 0252225609 | 03/07/2024<br>பி.ப. 2.00 |
| **03** | மாத்தளை நீர் வழங்கல் திட்டம் - கந்தேகெதர வலயத்தில் உள்ள வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான வாடகைச் சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC-C/MA/CIVIL/O&M/MATALE/2024/151** | 12,500/- + VAT | ரூபா 155,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.4 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **04** | மாத்தளை நீர் வழங்கல் திட்டம் - பலாபத்வல வலயம் மற்றும் அலுவிகார வலயத்தில் உள்ள வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான வாடகைச் சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC-C/MA/CIVIL/O&M/MATALE/2024/168** | 12,500/- + VAT | ரூபா 151,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 15.01 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **05** | உக்குவலை நீர் வழங்கல் திட்டம் - வருமானமற்ற நீரைக் குறைப்பதற்கான வாடகைச் சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC-C/CN/CIVIL/O&M/ UKUWELA/2024/150** | 6,000/- + VAT | ரூபா 96,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 9.5 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **06** | கண்டி தெற்கு நீர் வழங்கல் திட்டம் - ஒகஸ்தவத்தயில் வீதியில் இணைப்பை இடம் மாற்றுதல் மற்றும் HDPE குழாய்களைப் பதித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC-C/CS/PL/NRW/U-Y/UDA-PERADENIYA/2024/142** | 4,000/- + VAT | ரூபா 34,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7 அல்லது C8 தரத்தில் CIDA பதிவு | 3.1 மில்லியன் | பி.ஓ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **07** | கேகாலை நீர் வழங்கல் திட்டத்தில் வால்வு அறைகளை உயர்த்துதல் மற்றும் வால்வு அறைகளை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/RM(KEG)/CIVIL/ NRW/KEGALLE/ 2024/49** | 6,000/- + VAT | ரூபா 80,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 5.4 மில்லியன் | பிஓநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 03/07/2024<br>பி.ப. 2.00 |
| **08** | மாவனல்லை மற்றும் கேகாலை நீர் வழங்கல் திட்டங்களில் உள்ள நீர்க் கசிவு திருத்தவேலைகளுக்கான வாடகை சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/RM(KEG)/CIVIL/O&M/ KEG. REG/2024/01R3** | 12,500/- + VAT | ரூபா 160,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C6 அல்லது C5 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 10.58 மில்லியன் | பிஓநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 03/07/2024<br>பி.ப. 2.00 |
| **09** | தனமல்வில நீர் வழங்கல் திட்டம் - தனமல்வில நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியை மேம்படுத்தல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ THANAMALWILA/2024/95** | 12,500/- + VAT | ரூபா 250,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.70 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **10** | திவிதொட்டவெல நீர் வழங்கல் திட்டம் - திவிதொட்டவெலயில் பம்பி இல்லத்தை நவீனமயப்படுத்துதல், பாதுகாப்பு மதிலை நிர்மாணித்தல் மற்றும் வேலி வேலைகள்<br>ஒப்பந்த இல : **RSC(UVA)/DGM(UVA)/ REH/ DIVITHOTAWELA/2024/55** | 12,500/- + VAT | ரூபா 261,800/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 22.63 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **11** | தனமல்வில நீர் வழங்கல் திட்டம் - தனமல்வில நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் சேறு உலர்த்தும் படுகையை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/REH/ THANAMALWILA/2024/94** | 12,500/- + VAT | ரூபா 250,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 16.7 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **12** | கெப்பெட்டிபொல நீர் வழங்கல் திட்டத்தில் உள்ள திமுத்துகம படிநிலை 01 இற்கு விநியோகத்தை மேம்படுத்துவதற்காக HDPE/DI குழாய்கள் மற்றும் பொருத்தல்களை பதித்தல் மற்றும் இணைத்தல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/NRW/ KEPPETIPOLA/2024/53** | 12,500/- + VAT | ரூபா 305,450/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5 அல்லது C6 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 23.70 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **13** | அம்பத்தலை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் உள்ள பம்பி இல்லத்திற்கு Transformer முற்றவெளியை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல : **RPC/WP/W/AMB/CIVIL/RH/2024/20** | 4,000/-+ VAT | ரூபா 47,500/- | கட்டிட நிர்மாணத் துறையில் C8 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 4.73 மில்லியன் | பி.ஓ.நி. (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532<br>Fax:0112549199 | 03/07/2024<br>பி.ப. 2.00 |
| **2024-05-15ஆம் திகதிய விளம்பரம் தொடர்பானது. தெதுறுஓயா ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் - பொல்பித்திகம வலயம் (விநியோகப் பொதி -1) பூர்த்தி செய்வதற்காக HDPE/DI குழாய்களைப் பதித்தல் ஒப்பந்த இல: RSC(NW)/P&D/PL/CEDE/A3/A3-13/POLPITHI/2023/65 - இந்தக் கேள்வியின் முடிவுறுத்தல் திகதி 2024-06-19ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் கவனத்திற் கொள்ளவும்.** | | | | | | | |
| **வழங்கல் கேள்விகள்** | | | | | | | |
| **14** | 60 தொன் பிளீச்சிங் பவுடரை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **SUP&MM/CHEM/BP-01/2024/10R** | 12,500/- + VAT | ரூபா 193,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 03/07/2024<br>மு.ப. 10.00 |
| **15** | தும்மோதர - கலட்டுவாவ பிராந்தியத்திற்கு DI மற்றும் உருக்குக் குழாய்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல : **RPC/WP/G/KAL/CIVIL/RH/2024/51** | 12,500/- + VAT | ரூபா 185,000/- | உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 18.5 மில்லியன் | பி.ஓ.நி. (மேற்கு – உற்பத்தி), தேநீவவச, உடுமுல்ல வீதி, முல்லேரியா புதிய நகரம்.<br>Tele:0112418532<br>Fax:0112549199 | 19/06/2024<br>பி.ப. 2.00 |
| **16** | கம்பஹா பிராந்தியத்திற்கு DI Foot வால்வுகளை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(W/N)/SS/DI FV/GAM(O&M)/2024/41** | 4,000/- + VAT | ரூபா 71,000/- | DI Foot வால்வுகளை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129<br>Fax:0112922146 | 03/07/2024<br>மு.ப. 10.00 |
| **17** | புத்தளம் நீர் வழங்கல் திட்டத்திற்கு Bore Hole Type Submersible நீர்ப் பம்பித் தொகுதிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RSC(NW)/M-PUT/P/RH/PUT/2024/30** | 4,000/- + VAT | ரூபா 62,135/- | உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் | 4.2 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 03/07/2024<br>பி.ப. 2.00 |
| **M & E கேள்விகள்** | | | | | | | |
| **18** | புத்தள நீர் வழங்கல் திட்டத்திற்கு ஸ்டாட்டர் பெனல்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்<br>ஒப்பந்த இல:**RSC(UVA)/DGM(UVA)/REH/ BUTTALA/2024/89** | 12,500/- + VAT | ரூபா 306,596.18/- | VFD's Soft ஸ்டாட்டர்கள் மற்றும் மின்சார பெனல்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை.<br>Tele: 0552230934<br>Fax: 0552230974/ 0552222448 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **19** | மன்னார் நீர் வழங்கல் திட்டத்திற்கு Industrial High Pressure Washer இயந்திரங்களை வழங்குதல், விநியோகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>ஒப்பந்த இல : **RSC/N/DGM/RH/SUP-PRESSURE MACHINE/2024/51** | 4,000/-+ VAT | ரூபா 20,000/- | Industrial High Pressure Washer இயந்திரங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 26/06/2024<br>பி.ப. 2.00 |
| **20** | கணனிகள், துணைப்பாகங்கள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல : **RSC/N/DGM/CIPC/SUP&DEL-COM&E. ITEM/2024/067** | 6,000/-+ VAT | ரூபா 50,000/- | கணனிகள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது மற்றும் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 26/06/2024<br>பி.ப. 2.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சேவைக் கேள்விகள்** | | | | | | | |
| 21 | பூண்டுலோயா நீர் வழங்கல் திட்டம் - நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியின் பராமரிப்பு வேலைகளுக்கு சேவை வழங்குவதற்கான கேள்வி<br>ஒப்பந்த இல : **ජ්‍රසං'ම(ම)/ම.දි/සං'වා/ක්‍රියා/පුඩළු ඔය/2024/57** | 6,000/- + VAT | ரூபா 55,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 கெட்டம்பே (மத்திய தெற்கு) முகாமையாளர் அலுவலகத்தில் 2024-06-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். **(T:P-0812420585)** | 26/06/2024 பி.ப. 2.00 |
| 22 | காலி பிரதேச பொறியியலாளர் பிரதேசம் - ஹபராதுவ, அஹங்கம, கொக்கல, அக்மீமன மற்றும் போபே பொத்தல நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர் மானி வாசித்தல் மற்றும் நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளைத் தயாரித்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்கான ஒத்துழைப்பு சேவையை வழங்குவதற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல : **RSC(S)/P&C/MR/SER./GALLE AE AREA/ GALLE (O&M)/2023-196** | 12,500/- + VAT | ரூபா 158,400/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 26/06/2024 பி.ப. 2.00 |
| 23 | அம்பலாங்கொட பிரதேச பொறியியலாளர் பிரதேசம் - பத்தேகம, பலப்பிட்டிய, எல்பிட்டிய, பிட்டிகல, உடுக்கம மற்றும் பட்டபொல நீர் வழங்கல் திட்டங்களுக்கு நீர் மானி வாசித்தல் மற்றும் நீர்க் கட்டண பற்றுச்சீட்டுகளைத் தயாரித்தல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல : **RSC(S)/P&C/MR/SER./A'GODA AE AREA/ GALLE (O&M)/2023-197** | 6,000/- + VAT | ரூபா 79,200/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஓநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை. Tele: 0412222105 Fax 0412221329 | 26/06/2024 பி.ப. 2.00 |
| 24 | தும்மோதர நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி ஜெனிட்டோரியல் சேவைக்கான கேள்வி<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M/(BAM) DEMODARA/2024/79** | 2,000/- + VAT | ரூபா 17,700/- | ஆவணத்தின் பிரகாரம் | 1.18 மில்லியன் | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை. Tele: 0552230934 Fax: 0552230974/ 0552222448 | 26/06/2024 பி.ப. 2.00 |
| **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | | |
| 25 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (NC) - நிர்மாணப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **O&M(RSC)/NC/DGM/HV-VAN/ CONS/2024/061** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 2.96 மில்லியன் | பிஓநி (வடமத்தி), தேநீவவச, கொடகே மாவத்தை, அனுராதபுரம். Tele: 0252222296/ 0252235339 Fax: 0252225609 | 03/07/2024 பி.ப. 2.00 |
| 26 | வலப்பனை / பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RSC-C/M&E/HIRING/O&M/CE/2024/156** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 | 26/06/2024 பி.ப. 2.00 |
| 27 | முகாமையாளர் O&M (மத்திய கிழக்கு) அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RSC-C/M&E/HIRING /O&M/CE/2024/33** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 10 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 | 26/06/2024 பி.ப. 2.00 |
| 28 | மத்திய வடக்கு நீர் பாதுகாப்புத் திட்ட அறிவுரை பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல : **RSC-C/M&E/HIRING/O&M/CN/ 2024/104** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 08 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை. Tele : 081-2386068 Fax: 081-2388027 | 26/06/2024 பி.ப. 2.00 |
| 29 | தங்கொட்டுவ பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துவதற்கான ஒப்பந்தம்<br>ஒப்பந்த இல : **RSC(NW)/M-PUT/HV/O&M/DAN/2024/53** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | 3.6 மில்லியன் | பிஓநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல். Tele: 037-2223158 Fax : 037-2230086 | 03/07/2024 பி.ப. 2.00 |
| 30 | செவனகல நீர் வழங்கல் திட்டத்திற்கு சிங்கள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC(UVA)/DGM(UVA)/O&M/ SEVANAGALA/2024/88R** | 4,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பிஓநி (ஊவா), கேள்விகள் பிரிவு, தேநீவவச, மெதிரிய வீதி, பதுளை. Tele: 0552230934 Fax: 0552230974/ 0552222448 | 26/06/2024 பி.ப. 2.00 |
| 31 | வவுனியா, பிஓநி (வடக்கு) அலுவலகத்திற்கு வாகனமொன்றை (வேன்) வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/O&M/Hiring-Vech-RSC(N)/2024/086** | 6,000/- + VAT | ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 08 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 4.79 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340 Fax:024-2225088/ 024-2227341 | 26/06/2024 பி.ப. 2.00 |
| 32 | முகாமையாளர் (தெஹிவளை) அலுவலகத்திற்கு 02 எண்ணிக்கையான க்றூ கெப்கள் மற்றும் டபள் கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **W-S/P&C/H(09)/DEHI/O&M/2024/47** | 4,000/- + VAT | ஒரு வாகனத்திற்கு ரூபா 15,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் குறைந்தபட்சம் 04 ஆசனங்கள் கொள்ளளவு சகிதமான வாகன உரிமையாளர்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 9.43 மில்லியன் | பி.ஒ.நி. (மேற்கு-தெற்கு) அலுவலகம், தேநீவவச, இல. 07, அங்குலான ஸ்டேஷன் வீதி, மொரட்டுவ. Tel: 011-2224888 Fax : 011-2637945/ 011-2637946/ 0112637947 | 27/06/2024 மு.ப. 10.00 |
| **நிலப்பரப்பியல் சேவை (TOPOGRAPHICAL SERVICE)** | | | | | | | |
| 33 | பலியாறு நீர் திட்டத்தின் முன்மொழியப்பட்ட பிரதான விநியோகத்திற்கான நீளமான நில அளவை வேலைகள் - கட்டம் 1<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/CB/SURVEY/ PALIARU/2024/062** | 12,500/- + VAT | ரூபா 210,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் இலங்கையில் நில அளவைகளை மேற்கொள்வதற்கு செல்லுபடியாகும் பதிவைக் கொண்டுள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர்கள் அல்லது நில அளவை நிறுவனங்கள் அத்துடன் 2018 ஒக்டோபர் 16ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின் பிரகாரம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | 20.28 மில்லியன் | பிஓநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா. Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340 Fax:024-2225088/ 024-2227341 | 26/06/2024 பி.ப. 2.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10

கொழும்பு - 10, இலங்கை தேசிய வைத்தியசாலையின் புதிய வெளிநோயாளர் பிரிவு கட்டிடத்தின் உணவகத்திற்காக Dining table & chair set கொள்வனவு செய்வதற்கு தகைமையுள்ள வழங்குநர்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பொருளின் பெயர் | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|
| Dining table & Chair set (Staff) | 20 | 1500.00 |
| Dining table & Chair set (Public) | 16 | |

02. குறிப்பிட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணத்தை இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் 2024.06.12 மு.ப. 9.00 முதல் 2024.06.25 பி.ப. 3.00 வரை வழங்கல் கிளையில் இருந்து குறித்த கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

03. முறையாகப் பூர்த்தி செய்த கேள்விகளை பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அதன் இடது மேல் மூலையில் "PURCHASING OF DINING TABLE & CHAIR FOR NEW O.P.D BUILDING - 2024.06.26" என்று குறிப்பிட்டு, 2024.06.26 மு.ப. 10.00 இற்கு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். வழங்குநர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம். மேலதிக விபரங்களை தொ.பே.இலக்கம் 2691111 Ext - 2314/2313 பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்திய நிபுணர் டபிள்யூ.கே. விக்ரமசிங்ஹ,**
**தலைவர், பிரதேச பெறுகைக் குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு - 10**

# இறுதித் திகதி நீடிப்பு

**விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**

**விலைமனு இல : 039/T/2024**

**விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்டில் வருடாந்த பராமரிப்பு ஒப்பந்தம், உதவி, பதிப்பு மேம்பாடு மற்றும் IFS ERP முறைமையின் மேம்பாட்டு சேவைகளின் பணியமர்த்தல்**

மேலுள்ள விலைமனு 2024.05.17 ஆம் திகதி 'டெய்லி நியூஸ்', 'தினமின' மற்றும் "தினகரன்" பத்திரிகைகளில் வெளியான விளம்பரம் தொடர்பிலான.

மேலுள்ள விலைமனுவின் இறுதித் திகதி 2024 ஜூன் 19 அன்று புதன்கிழமை பி.ப. 2.00 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மற்றவை மாற்றமின்றி தொடரும்.

**தலைவர்**
**விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Green Light for Online Transfer Lake House Branch Acc. No. 000000377
WE ACCEPT
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343

Daily News Classifieds, the Housewives' companion

# கேள்விக்கான அழைப்பு

## (இலங்கை அரசின் மானிய செயற்றிட்டம்)

## விவசாயத் திணைக்களம் - பழைய கலஹா வீதி, பேராதனை

பேராதனை விவசாயத் திணைக்களத்தின், செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பொருட்களின் பெறுகையின் பொருட்டு இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன. 2024.06.12 முதல் 2024.07.01 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை மீளளிக்கப்படாத வைப்புத் தொகையைச் செலுத்தி மாதிரிகள் அடங்கிய ஆவணங்களை கீழுள்ள முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| கேள்வி இலக்கம் | கொள்வனவு செய்யும் பொருட்கள் / சேவைகள் | கேள்வி வைப்பு | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப்படாத | காசாகச் செலுத்துவதாயின் | வங்கிப் பிணையை சமர்ப்பிப்பதாயின் |
| செ/ப/6/2/2024 - 48 | அச்சிடப்பட்ட பயிர்செய்கை பைகள் 150,000.00ஐ கொள்வனவு செய்தல் | ரூ. 2000.00 | ரூ.47,000.00 | ரூ.94,000.00 |

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.06.25 மு.ப. 10.30 இற்கு செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறும், கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.07.02 மு.ப. 10.30 இற்கு முடிவுறும். நகல் பிரதியுடன் தயாரிக்கப்பட்ட பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை அதற்கு முன்பு பதிவுத் தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு அல்லது விவசாயத் திணைக்களத்தின் செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டு அதன் பெறுகைக் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தைக் குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடனேயே அவ் இடத்தில் கேள்விகள் திறக்கப்படும். இவ்வேளையில் கேள்வி சமர்ப்பிப்போருக்கு அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைகுழு,**
**செயற்றிட்டம் மற்றும் பயிற்சி நிலையம்**
**விவசாயத் திணைக்களம், பழைய கலஹா வீதி, பேராதனை**
**தொ.பே.இல: 081 - 2389127**

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண கல்வித் திணைக்களம்

## கல்வித்தர அபிவிருத்திக்காக பாடசாலை உபகரணங்களைப் பழுதுபார்த்தல்

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் கீழ்க்காணும் பாடசாலை உபகரணங்களைப் பழுது பார்ப்பதற்காக திறன் உடைய மற்றும் தகைமையுடனான கேள்வி வைப்பாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் இத்தால் கோரப்படுகின்றன.

| லொட் இலக்கம் | விபரம் | மதிப்பிடப் பட்ட தொகை ரூ.மி | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப்பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக வைப்புச் செய்வதாயின் ரூபா | வங்கிப்பிணை ஒன்றை சமர்ப்பிப்பதாயின் ரூபா |
| 01 | பாடசாலை மரத்தள பாட உபகரணங்களை பழுது பார்த்தல் | ரூ.மி.6 | ரூ.2500.00 | ரூ.50,000.00 | ரூ.100,000.00 |

➢ ஓடர்களை ஒப்படைக்க வேண்டிய இடம் : பண்டாரவளை, கினிகம கல்விப் பிரதான களஞ்சியம் மற்றும் வெஹெரயாய மகா வித்தியாலயம் - எத்திலிவெவ

➢ ஓடர்களை பூர்த்திசெய்ய வேண்டிய தினம் : ஓடர்கள் வழங்கப்பட்ட தினத்தில் இருந்து 60 நாட்களுக்குள்

பாடசாலை மேசை கதிரைகளைப் பழுதுபார்ப்பதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள கீழ்க்காணும் இடங்களில் பழுதுபார்த்தல் விடயங்கள் இடம்பெறும் (கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு முன்பு தள பரிசீலனையை மேற்கொள்ளலாம்)

➢ வெஹெரயாய மகா வித்தியாலயம் - எத்திலிவெவ

➢ பண்டாரவளை, கினிகம கல்வி பிரதான களஞ்சியம்

**கவனிக்கவும்**

01. ஓடர்கள் வழங்கப்படும் தினம் முதல் 60 நாட்களுக்குள் பாடசாலை மேசை கதிரைகளை பழுதுபார்த்து ஓடர்களைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.
02. கேள்விகோரல், தேசிய போட்டி கேள்விகோரல் முறைமை (NCB) ஊடாக மேற்கொள்ளப்படும்.
03. கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்வி வைப்பாளர்களால் பதுளை, வெலகெதர வீதி, கல்வித்திணைக்களம், பிரதம கணக்காளரிடம் (தொ.பே.இல - 0552223184, பெக்ஸ் - 0552222713) மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடிவதுடன், மேற்படி அந்த முகவரியிலேயே, 2024 ஜூன் 12 முதல் ஜூலை 09 வரை அலுவலக நேரங்களில் (09.00 முதல் 15.00 மணிவரை) கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. தகைமைத் தேவைப்பாடுகள் கீழ்க்காணுமாறு இருப்பதுடன், மேலதிக விபரங்கள் கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.
    i. கடந்த ஆண்டுகளில் கேள்விதாரருக்கு ரூ.6 மில்லியன் வருமானம் இருத்தல் வேண்டும்.
    ii. கடந்த மூன்று ஆண்டுகளில் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்று
    iii. பாடசாலை உபகரணங்களை வழங்குதல் அல்லது பழுதுபார்த்தல் பற்றிய விபரம்
05. 2024 ஜூன் 03 முதல் ஜூலை 09 வரை அலுவலக நாட்களில் மேற்படி (03 ஆம் பந்தியின்) முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து மற்றும் கல்வித் திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு பாடசாலை உபகரணங்களை பழுதுபார்ப்பதுடன் சம்பந்தப்பட்ட மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணத்தை செலுத்துவதன் பேரில் கேள்வி ஆவணத்தொகுதியை கொள்வனவு செய்ய முடியும் கொடுப்பனவுகள் காசாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.
    ➢ 2024 ஜூன் 26 மு.ப. 9.00 மேற்படி (03ம் பந்தியில்) ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விக்கு முன்னரான சந்திப்பு நடத்தப்படும்.
06. இரு பிரதிகளுடனான கேள்விகள், 2024 ஜூலை 10ம் திகதி 14.00 மணிக்கு (பி.ப.2.00 இற்கு) அல்லது அதற்கு முன்பு பதிவுத்தபாலில் கீழ்க்காணும் முகவரிக்கு (03ம் பந்தியில்) அனுப்பலாம் அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும்.
    அதே போல் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். 2024 ஜூலை 10ம் திகதி 14.00 மணிக்கு (பி.ப.2.00 இற்கு) கேள்வி ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் பதுளை, வெலகெதர வீதி, கல்வித் திணைக்கள பணிமனையில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் வருகைதருவதற்கு ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் அல்லது பிரதிநிதிகள் இருப்பின் அவ்வேளையில் கண்காணிப்பு மட்டத்தில் சமுகமளிக்கலாம்.
07. 2024 ஓகஸ்ட் 30 வரை கேள்விகள் செல்லுபடியாவதுடன், சகல கேள்விகளும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கிப்பிணையின் மூலம் அல்லது காசாக (இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில்) மேற்கண்டவாறு பெற்றுக்கொண்டு கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணையை காசாக வைப்புச் செய்வதாயின் 2024 ஜூன் 12 முதல் 2024 ஜூலை 09 வரை மு.ப.9.00 மணிமுதல் பி.ப.15.00 மணி வரை அலுவலக நாட்களில் மேற்படி (03ம் பந்தியில்) முகவரியில் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்ளலாம்.
08. பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திரங்களில் தகுதியான கேள்விப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளல் அல்லது பூர்த்தியற்று சமர்ப்பித்துள்ள கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்,**
**வெலகெதர வீதி, பதுளை**

## மாவட்ட நீதிமன்றம் - திருகோணமலை.
## பிஸ்கால் ஊடாக ஏலவிற்பனை செய்தல்.

திருத்தம் செய்யப்பட்ட 1990ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான வழக்கொன்றாகும்.

இல: 75, சேர் சிற்றம்பலம் A. காடினர் மாவத்தை, கொழும்பு - 02 எனும் விலாசத்தில் தலைமைக் காரியாலயம் அமைந்துள்ள மக்கள் வங்கி.

**வழக்காளி**

வழக்கு இலக்கம் : M/ 4754/ 18
தன்மை : பணம் **- எதிர் -**
நடவடிக்கை முறை : கிராம முறை
பெறுமதி : ரூ.1,251,712,91

1. அபூபக்கர் ஐயூப்,
   வட்டார இல: 04,
   புல்மோட்டை.

2. அபூபக்கர் பஸ்லுல் பாசிக்,
   இல: 45/4, ஜமாலியா வீதி,
   திருகோணமலை.

**எதிராளிகள்**

மேற்குறித்த இலக்கம் கொண்ட வழக்கில் பதியப்பட்டுள்ள பின்முற்றாகும் தீர்வையின் பிரகாரம் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட 01ஆம், 02ஆம் எதிராளிகள் வழக்காளி வங்கிக்கு **மூன்று இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து முந்நூற்றைந்து ரூபாவைச் (ரூ.332,305.00)** செலுத்துவதற்குத் தவறியுள்ளதனால் அவ்வழக்கிலே எனக்கு வழங்கப்பட்டுள்ள ஆதன நடுக்கட்டல் கட்டளையின் பிரகாரம் என்னால் 2024ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆந் திகதியன்று நடுக்கட்டல் செய்யப்பட்ட 01ஆம் எதிராளிக்கு சொந்தமான கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அசையும் ஆதனங்கள் 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் 26ஆந் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட 01ஆம் எதிராளிக்குச் சொந்தமான ஆதனங்கள் அமைந்துள்ள வட்டார இலக்கம்: 04, புல்மோட்டை எனும் விலாசத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

**மேலே கூறப்பட்ட அட்டவணை:**

| | |
|---|---|
| 1. Godrej fiidge | 1 இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 25,000.00) |
| 2. Table 1, Plastic Chairs | 6 ஐயாயிரம் ரூபா (ரூ.5,000.00) |
| 3. Wooden Alumare | 1 பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000.00) |
| 4. Wooden Table | 1 மூவாயிரம் ரூபா (ரூ.3,000.00) |
| 5. Washing Machine - Singer | 1 இருபதாயிரம் ரூபா (ரூ.20,000.00) |
| 6. Plastic Chairs | 10 ஐயாயிரம் ரூபா (ரூ.5,000.00) |
| 7. Computer Table | 1 மூவாயிரம் ரூபா (ரூ.3,000.00) |
| 8. Compressor | 1 இருபதாயிரம் ரூபா (ரூ.20,000.00) |
| 9. Air Conditioner - Sisil | முப்பத்தையாயிரம் ரூபா (ரூ.35,000.00) |
| 10. Wall Fan | 1 மூவாயிரம் ரூபா (ரூ.3,000.00) |
| 11. Gas Cylinder | 1 பத்தாயிரம் ரூபா (ரூ.10,000.00) |
| 12. Small bicycle | 1 எண்ணாயிரம் ரூபா (ரூ.8,000.00) |
| 13. Ladies bicycle | 2 பத்தாயிரம் ரூபா (ரூ.10,000.00) |
| 14. Steel cupboard | 1 ஐயாயிரம் ரூபா (ரூ.5,000.00) |
| 15. BGJ 404 Pulsar - 150 Motor Bike | மூன்று இலட்சம் ரூபா (ரூ. 300,000.00) |

**பதிவாளர் / பிரதிப் பிஸ்கால்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**திருகோணமலை.**

**திகதி: 2024ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆந் திகதி.**

## அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## மாவட்ட செயலகம் - மொனராகலை

# பெறுகை அறிவித்தல்

கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் மாம்பழம் மற்றும் ரம்புட்டான் செடிகளை கொள்வனவு செய்து பிரதேச செயலகத்திற்கு போக்குவரத்து செய்யும் வேலைக்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மொனராகலை மாவட்ட செயலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2024 ஜூலை 03ம் திகதி பி.ப. 2.30 வரை ஏற்கப்படும்.

- அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு மீளளிக்கப்படாத கேள்வி வைப்பொன்றை மொனராகலை மாவட்ட செயலாளருக்கு செலுத்தி பெற்றுக் கொள்ளும் கேள்வி மாதிரிப் பத்திரங்களில் தயாரிக்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை பொறியிட்டு குறித்த தினம் குறித்த நேரத்திற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளருக்கு கிடைக்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
- 2024.06.12 முதல் 2024.07.02 வரை கேள்வி மாதிரிப் பத்திரத்தை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் மாவட்ட செயலாளரின் கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- சாதாரண அலுவலக நேரங்களில் மாவட்ட செயலகத்தின் கணக்குப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
- பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.06.24 மு.ப. 10.30 இற்கு மாவட்ட செயலகத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன
- அட்டவணையில் குறிப்பிடப்படும் முறையில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியிலிருந்து ‘மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், மொனராகலை’ என்ற முகவரிக்கு பெற்றுக் கொண்ட செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த பெறுமதி மொனராகலை மாவட்ட செயலாளருக்கு காசாகவும் வைப்புச் செய்யலாம்.
- கேள்விகளை சமர்ப்பிக்கும் போது இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதி” என்று தெளிவாகக் குறிப்பிட்டு வேறுவேறு பொறியிடப்பட்ட உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும். மேலும் உங்களால் விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “மாம்பழம் மற்றும் ரம்புட்டான் கன்றுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கள்” என்று குறிப்பிடல் வேண்டும் என தெரிவிக்கிறேன்.
- தேசிய போட்டி கேள்வி கோரல் மூலம் ஒப்பந்தக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
- கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு முடிவடைந்தவுடன் அதாவது 2024.07.03 பி.ப. 2.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு கேள்விதாரர்களுக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்கப்படும்.
- கேள்விப் பத்திரங்களின் சகல பக்கங்களும் கேள்விதாரர்களால் கையொப்பமிட்டு நிறுவனத்தின் முத்திரையை இடல் வேண்டும்.
- அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்ட கேள்விதாரர்களுக்கு கேள்விகள் சமர்ப்பிக்க முடியாது.
- ஒப்பந்தத்தை வழங்குவதுடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்கள் சம்பந்தமாகவும் இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

மேலதிக விபரங்களுக்கு 055-2276067 என்ற தொ. பே. இலக்கம் மூலம் மாவட்ட செயலகத்தின் கணக்கு பிரிவுடன் தொடர்பு கொள்ளலாம்.

### அட்டவணை

| இணைப்பு இலக்கம் | செயற்றிட்டத்தின் பெயர் | கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கும் கன்றுகளின் அளவு | கேள்விப் பிணை (ரூபா) (செல்லுபடி காலம்) | போக்குவரத்து செய்ய வேண்டிய பிரதேச செயலகம் | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு (ரூ.) |
|---|---|---|---|---|---|
| MO/DS/ ACC/10/03/05 | TJC மாம்பழக் கன்றுகளை கொள்வனவு செய்தல் | 20000 - 25000 இற்கிடையில் | 75,000.00 (2024.10.02 வரை செல்லுபடியாதல் வேண்டும்) | மொனராகலை புத்தள, வெள்ளவாய, தணமல்வில | 1,000.00 |
| | ரம்புட்டான் கன்றுகளை கொள்வனவு செய்தல் | 26000 - 31000 இற்கிடையில் | 95,000.00 (2024.10.02 வரை செல்லுபடியாதல் வேண்டும்) | படல்கும்புர, சியம்பலாண்டுவ, பிபில, மெதகம, மடுல்ல | 1,000.00 |

**ஆர்.எம்.பசன்.எஸ்.பீ. ரத்நாயக்க,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**மொனராகலை.**

## சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்



117

**வேன்கள்**
**விற்பனைக்கு**

251-7963 TOYOTA LH113, 1995, வேன் அதியுய ர் விலை க்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 07112108 10. 038843

252-1687 MIT-S U B I S H I S-P05V, 1993, வேன் அதியுயர் விலைக்கு . வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபே சி . 07112 1081 0 . 038837

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Daily News Classifieds, the Housewives' companion

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்**

CRIWMP

## நீர்ப்பாசன அமைச்சு

**(தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல்)**

**IFB No.: CRIWMP/NCB/VIS/2024/03-22 பொதிகள்**

புத்தளம் மாவட்டத்திலுள்ள, குந்தானியாகம ஆற்றுப்படுக்கை, வவுனியா மாவட்டத்திலுள்ள கப்பச்சிக்குளம் ஆற்றுப்படுக்கை, அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள மஹகிரிந்தேகம ஆற்றுப்படுக்கையிலுள்ள கிராமிய நீர்ப்பாசன முறைமைகளின் (VIS) புனரமைப்பு வேலைகளுக்காக விலைமனுக் கோரல்.

01. இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது UNDP இன் தர அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையத்துடன் பசுமை காலநிலை நிதியத்திலிருந்து (GCF) காலநிலை மாற்றத்தினைத் தாக்குபிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்ட கிரயச் செலவிற்காக நிதியொன்றை பெற்றுள்ளதுடன் இந்நிதியத்தின் பகுதியொன்று மேலேயுள்ள வழங்கலுக்கு உரிய பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. பின்வரும் பொதிகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து காலநிலை மாற்றத்தினைத் தாக்குபிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டத்தின் (CRIWMP) செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவரின் சார்பாக செயற்றிட்ட பணிப்பாளர், முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| பொதி இல. | பொதிகளின் விபரம் | விலைக் கோரல் இல. | விலைக் கோரல் உத்தரவாதம் ரூபா | CIDA தரம் | சுமாரான மதிப்பீடு (ரூ. மில்) |
|---|---|---|---|---|---|
| **அனுராதபுரம் மாவட்டம், மிஹிந்தலை பிரதேச செயலாளர் பிரிவு, மஹகிரிந்தேகம ஆற்றுப்படுக்கை (07 பொதிகள்)** | | | | | |
| 3 | அத்தாபாதிய வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ MAHA/2024/03 | 300,000.00 | C6 முதல் C5 வரை | 20.23 |
| 4 | கந்துபாகம வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ MAHA/2024/04 | 200,000.00 | C6 முதல் C5 வரை | 13.50 |
| 5 | கட்டுகல்லியாவ வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ MAHA/2024/05 | 150,000.00 | C6 முதல் C5 வரை | 11.94 |
| 6 | புஞ்சிகுளம வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ MAHA/2024/06 | 200,000.00 | C6 முதல் C5 வரை | 13.32 |
| 7 | எலப்பன்குளம வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ MAHA/2024/07 | 250,000.00 | C6 முதல் C5 வரை | 17.97 |
| 8 | கட்டுகல்லியாவ வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ MAHA/2024/08 | 250,000.00 | C6 முதல் C5 வரை | 18.86 |
| 9 | குடா கிரிந்தேகம வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ MAHA/2024/09 | 200,000.00 | C6 முதல் C5 வரை | 12.72 |
| **வவுனியா மாவட்டம், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவு, கப்பச்சிக்குளம் ஆற்றுப்படுக்கை (04 பொதிகள்)** | | | | | |
| 10 | கப்பச்சிக்குளம் கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KAPPA/2024/10 | 500,000.00 | C5 முதல் C4 வரை | 34.54 |
| 11 | கருக்காய்குளம் கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KAPPA/2024/11 | 200,000.00 | C6 முதல் C5 வரை | 15.55 |
| 12 | சோனகனொச்சிக்குளம் கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KAPPA/2024/12 | 350,000.00 | C5 முதல் C4 வரை | 24.54 |
| 13 | புளியடிமுறிப்பு அணைக்கட்டின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KAPPA/2024/13 | 200,000.00 | C6 முதல் C5 வரை | 13.87 |
| **புத்தளம் மாவட்டம், ஆனமடுவ பிரதேச செயலாளர் பிரிவு, குந்தானியாகம ஆற்றுப்படுக்கை (09 பொதிகள்)** | | | | | |
| 14 | அஸ்ஸாதுரும வெவ, இஹல பம்மன்னேகம வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/14 | 250,000.00 | C6 முதல் C5 வரை | 16.71 |
| 15 | திவுல்கஹ வெவ, அலுத் வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/15 | 250,000.00 | C6 முதல் C5 வரை | 15.94 |
| 16 | பலுகஹ வெவ, இஹல பலுகஹ வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/16 | 200,000.00 | C6 முதல் C5 வரை | 14.47 |
| 17 | இஹலவவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/17 | 200,000.00 | C6 முதல் C5 வரை | 14.41 |
| 18 | பஹல ஊத்துவ வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/18 | 150,000.00 | C6 முதல் C5 வரை | 10.93 |
| 19 | இஹல ஊத்துவ வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/19 | 150,000.00 | C6 முதல் C5 வரை | 10.78 |
| 20 | தங்கஹ கிவுல வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/20 | 150,000.00 | C6 முதல் C5 வரை | 10.30 |
| 21 | பம்மன்னேகம வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/21 | 300,000.00 | C6 முதல் C5 வரை | 19.41 |
| 22 | குந்தானியாகம வெவ கிராமிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | CRIWMP/NCB/ KUN/2024/22 | 400,000.00 | C5 முதல் C4 வரை | 28.24 |

02. குளக்கட்டை அமைத்தல், வான், மதகு மற்றும் கால்வாய் உள்ளிட்ட அனைத்து வேலைகளையும் (Head works) 90 நாட்களுக்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

03. விலைக்கோரல்கள் முதலில் பொதிகள்ரீதியாக மதிப்பீடு செய்யப்படும். விலைமனுதாரர்கள் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தப் பொதிகளுக்கு விருப்பத் தெரிவுகளை மேற்கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகளுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விலைமனுதாரர்கள் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியான விலைக்கோரல் பிணை முறிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் தனித்தனியாக பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு பொதிகளுக்காகவும் இயந்திரங்கள், உபகரணங்கள், வள ஒதுக்கீட்டைக் குறிக்கும் தகுதி / தகைமை தகவுத்திறன்களை பிரத்தியேகமாக உள்ளடக்கல் வேண்டும். இறுதி மதிப்பீட்டுச் செயற்பாட்டின் போது கணிசமாக பதிலளிக்கக்கூடிய மதிப்பீடு செய்யப்பட்ட விலைக்கோரல் பொதிகளின் முழு மொத்தத் திட்டத்திற்கும் மிகவும் சிக்கனமான கலவை கவனத்திற் கொள்ளப்படும். விலைக்கோரல்கள் அவற்றின் ஒட்டுமொத்த திறன் மற்றும் மீதமுள்ள தகுதி / தகைமை / தகவுத்திறன் / வள ஒதுக்கீடு மற்றும் கையளித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படும்.

04. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும். ஆர்வமுள்ள விலைமனுதாரர் விரும்பினால் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன் CRIWMP அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பிலக்கம்: 0112672223 மற்றும் மின்னஞ்சல்: tendercriwmp@gmail.com

05. விபரமான தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன என்பதுடன் சில முக்கிய தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

   அ. விலைமனுதாரர்கள் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு துறையில் மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள CIDA (ICTAD) தரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஆ. நிர்மாண அனுபவம்: கடந்த பத்து வருடங்களில் இதற்கு நிகரான தன்மையுடைய குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தையாவது வெற்றிகரமாக நிறைவு செய்த குறிப்பிடத்தக்க அனுபவம்.

06. 2024-06-12ஆம் திகதி முதல் 2024-07-02ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை) ஒரு தொகுதி ஆவணத்திற்கு (3,4,5,6,7,8,9,11,13,14,15,16,17,18,19,20 மற்றும் 21 பொதிகளுக்கு) 4,000.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தையும் (10, 12 மற்றும் 22 பொதிகளுக்கு) ஆவணக் கட்டணமாக 6000.00 ரூபாவையும் செலுத்திய பின்னர் CRIWMP செயற்றிட்ட பணிப்பாளருக்கு ஒப்பந்தக்காரரின் வியாபார தலைப்புக் கடிதத்தில் எழுத்துமூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 500ஆம் இலக்கத்திலுள்ள 12ஆம் மாடியின் நீர்ப்பாசன அமைச்சின் CRIWMP அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

07. விலைமனுக்கள் திறக்கப்பட்ட நாள் முதல் 90 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் மேற்படி 1ஆம் பந்தியில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கானதும் செயற்றிட்டப் பணிப்பாளர், CRIWMP நீர்ப்பாசன அமைச்சு, 12ம் மாடி, இல. 500, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10 இற்கு வழங்கப்பட்டுள்ளதுமான விலைமனுப் பிணையொன்று விலைமனுக்களுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணையானது விலைக்கோரல் செல்லுபடிக் காலத்தை விட 28 நாட்களுக்குச் செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனு ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ள வடிவத்தில் இலங்கை மத்திய வங்கி / இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி / காப்புறுதி நிறுவனத்தினால் (வரையறுக்கப்பட்ட கூட்டுறவு காப்புறுதி நிறுவனம் தவிர்ந்த) வழங்கப்பட்டுள்ளதுமான நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாத விலைமனுப் பிணையொன்றாகவிருத்தல் வேண்டும்.

08. விலைமனுதாரர் விலைமனுவின் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பவற்றை இரு தனித்தனியான உள்ளக தபாலுறைகளில் உள்ளிட்டு அவைகளின் மேல் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிட்டு அதன் பின்னர் அவ்விரு உறைகளையும் ஒரு வெளியக தபாலுறையில் உள்ளிட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் பொதி இலக்கத்தை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பொதிகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது, விலைமனுதாரர் ஒவ்வொரு பொதிக்கும் தனித்தனியாக அத்தகைய உறைகளைத் தயாரித்து, அத்தகைய அனைத்து உறைகளையும் "MASTER ENVELOPE" இல் உள்ளடக்குதல் வேண்டும். ஒப்பந்தக்காரர்களால் முறையாக கையொப்பமிடப்பட்ட சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து முன்னுரிமை பட்டியல் "MASTER ENVELOPE" இல் உள்ளடக்குதல் வேண்டும்.

09. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ஏழாம் (07) பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியில் 2024-06-25ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறும். தகுதியுள்ள விலைமனுதாரர்கள் வேலைத்தளத்திற்கு விஜயம் செய்து பரீட்சித்துப் பார்க்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். விலைக்கோரல் முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு முன் விலைமனுதாரர்களின் சொந்த செலவில் விலைமனுக்களைத் தயாரிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

10. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024-07-03ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் செயற்றிட்ட பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது செயற்றிட்டப் பணிப்பாளர், CRIWMP, நீர்ப்பாசன அமைச்சு, 12ஆம் மாடி, இல. 500, T.B. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். தாமதமான சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் சமுகம்தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்கூறிய முகவரியில் உடன் திறக்கப்படும்.

11. 2017 முதல் 2023 வரையான காலப்பகுதியில் CRIWMP வழங்கிய இதனையொத்த வேலை ஒப்பந்தங்களின் செயற்றிறன் திருப்தியாக இல்லை என திட்ட முகாமைத்துவப் பிரிவினால் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு விலைமனுதாரருக்கும் விலைமனு ஆவணங்களை வழங்குவதற்கான எந்தவொரு கோரிக்கையையும் நிராகரிக்கும் உரிமையை CRIWMP செயற்றிட்ட பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

12. வேலை கொள்வோர் விலைமனுதாரர்களின் விலைமனுக்களைத் தயாரித்தல் அல்லது விநியோகித்தல் மற்றும் வேலைத் தள விஜயங்கள் தொடர்பான எந்தவொரு கிரயச் செலவுகள் அல்லது செலவினங்களுக்கும் பொறுப்புக்கூற மாட்டார்.

**தலைவரின் சார்பாக,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**செயற்றிட்ட பணிப்பாளர்,**
**காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ செயற்றிட்டம்,**
**நீர்ப்பாசன அமைச்சு,**
**12ஆம் மாடி, இல. 500, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10**

# மாவட்ட செயலகம் - கேகாலை

**பிளாஸ்டிக் கதிரை, கூரைத்தகடு மற்றும் ஸ்மார்ட் போட் கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல்**

## கேகாலை மாவட்ட செயலகத்தினால் கீழ்க்காணும் பெறுகை வேலைகளுக்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | உருப்படி | தேவைப்படும் அளவு | பெறுகை இலக்கம் | மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூ) | கேள்விப் பிணைத் தொகை (ரூ) | கேள்விப் பிணை செல்லுபடியாக வேண்டிய நாட்களின் எண்ணிக்கை | கேள்வி கோரல் முடிவுத் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | பிளாஸ்டிக் கதிரை (கைப்பிடியுடன்/ கைப்பிடி இன்றி) | 16022 | DSK/ACC/ PRO/ CHAIR/ A12/16 | 3500.00 | 501,100.00 | 91 | 2024.07.02 பி.ப. 3.00 |
| 02 | கூரைத் தகடு | 3100 | DSK/ACC/ PRO/ CHAIR/ A12/16 | 3500.00 | 114,652.00 | 77 | 2024.07.02 பி.ப. 3.00 |
| 03 | ஸ்மார்ட் போட் | 25 | DSK/ACC/ PRO/ CHAIR/ A12/16 | 3500.00 | 126,350.00 | 77 | 2024.07.02 பி.ப. 3.00 |

இதற்கான மாதிரிகள் அடங்கிய கேள்வி ஆவணங்களை மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை கேகாலை மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பித்து 2024.06.11 முதல் 2024.06.28 வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலத்திற்குள் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் 2024.07.02 பி.ப.3.00 இற்கு முன்பு "தலைவர், பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், கேகாலை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது மேல் மூலையில் குறித்த பெறுகை உருப்படியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். சகல கேள்விக்கும் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென இரு உறைகளைத் தயாரித்து அது பற்றி உறைகளிலும் குறிப்பிட்டு இரு பிரதிகளையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்கள் திறத்தல் 2024.07.02 பி.ப. 3.15 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்கள் நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவருக்கு ஆளடையாளத்தை உறுதிசெய்து சமுகமளிக்கலாம். கேள்விப் பிணைக்காக இலங்கை மத்திய வங்கியில் அனுமதித்த இலங்கைக்குள் செயற்படும் அரச அல்லது தனியார் நிறுவனத்தின் வர்த்தக வங்கியிலிருந்து மாவட்ட செயலாளர், கேகாலை பெயரில் பெற்றுக் கொண்ட செல்லுபடியாகும் பிணை அல்லது மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், கேகாலை பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விகள் சமர்ப்பித்தல் சம்பந்தமான தகவல்கள் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இதற்கான மேலதிக தகவல்களை 035 - 2223112 தொ.பே.இலக்கத்தின் மூலம் பிரதம கணக்காளரை அழைத்து பெற்றுக் கொள்ள முடியும் என்பதை மேலும் தெரிவிக்கிறேன். பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**மாவட்ட செயலாளர்/ பெறுகைக்குழுத் தலைவர்,**
**மாவட்ட செயலகம்,**
**கேகாலை.**

# நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் கீழ் விலைமனுக்களுக்கான அழைத்தல்

1. கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான சிவில் வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை திருகோணமலை, நீர்ப்பாசன திணைக்கள நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலமாக நடத்தப்படும். இப்பெறுகையின் கீழான நிறைவேற்றப்பட வேண்டிய வேலையின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமதியானது (பெசேவ மற்றும் ஏனைய வரிகள்) 50 மில். ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால், 04/2016(ii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிருணயிக்கப்பட்டுள்ளவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன பிரயோகப்படுத்தப்படும்.

| ஒப்பந்த இல. மற்றும் ஒப்பந்த தலைப்பு | பிரிவு | நிர்மாணக் காலம் | ஆகக்குறைந்த ICTAD/CIDA பதிவு | விலைமனுக்கோரல் ஆவண பெறுமதி (ரூ) மற்றும் செல்லுபடியாகும் காலவரை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| திருகோணமலை மொரவெவ பிரிவின் யான் ஓய அணைக்கட்டு திட்டத்தின் குஞ்சு குணத்துவிலுள்ள தாம்போதி (vented Causeway) சதுப்புநில நீடித்தல். விலைமனு இல. **ID/TRI/NCB/2024/01** | மொரவெவ | 3 மாதங்கள் | சி-6 மற்றும் சி-5 – நீர்ப்பாசனம் | 162,000.00 16.10.2024 | 3,000.00 |
| திருகோணமலை மொரவெவ பிரிவின் யான் ஓய அணைக்கட்டு திட்டத்தின் குஞ்சு குணத்துவிலுள்ள வனீர்வெளி தாம்பேதி மேம்படுத்தல். விலைமனு இல். **ID/TRI/NCB/2024/02** | மொரவெவ | 3 மாதங்கள் | சி-7 மற்றும் சி-6 – நீர்ப்பாசனம் | 110,000.00 16.10.2024 | 3,000.00 |
| திருகோணமலை மொரவெவ பிரிவின் யான் ஓய அணைக்கட்டு திட்டத்தின் 0+717 இலிருந்து 0+789 வரையிலான டி கால்வாய்க்கான மேம்படுத்தல் விலைமனு இல. **ID/TRI/NCB/2024/03** | மொரவெவ | 3 மாதங்கள் | சி-7 மற்றும் சி-6 – நீர்ப்பாசனம் | 97,000.00 16.10.2024 | 3,000.00 |
| திருகோணமலை, மொரவெவ பிரிவு, யான் ஓய வலது கரை திட்டத்தில் 0+000 நிலையத்திலிருந்து 0+720 வரை மயிலவெவவிற்கான வழங்கு வாய்க்கால் மேம்படுத்தல்கள். விலைமனு இல.: **ID/TRI/NCB/2024/04** | மொரவெவ | 3 மாதங்கள் | சி-7 மற்றும் சி-6 – நீர்ப்பாசனம் | 94,000.00 16.10.2024 | 3,000.00 |

3. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டோரின் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலே பட்டியலிடப்பட்டுள்ள **ICTAD/CIDA** பதிவு மற்றும் தகைமை தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தவராகவுமிருத்தல் வேண்டும். தேவைப்படும் மேலதிக விபரங்கள் மற்றும் வேலை அனுபவம் ஆகியன விலைமனுக்கோரல் ஆவணங்களில் வழங்கப்பட்டுள்ளன.
4. விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4 ஆம் பிரிவில் தகைமைத் தேவைப்படுத்தல்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களின்5 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை திருகோணமலை, உட்துறைமுக வீதி, நீர்ப்பாசன திணைக்கள, நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலக, நீர்ப்பாசன பணிப்பாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி இல.: 026-2222524) அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.06.12 ஆம் திகதியிலிருந்து 2024.07.03 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு தொகுதிக்கும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், திருகோணமலை, உட்துறைமுக வீதி, நீர்ப்பாசன திணைக்கள, நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலக, நீர்ப்பாசன பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. 2024.07.03 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக திருகோணமலை, உட்துறைமுக வீதி, நீர்ப்பாசன திணைக்கள, நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலக, நீர்ப்பாசன பணிப்பாளரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்/ பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024.09.18 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டுமென்பதுடன் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறான பெறுமதி மற்றும் திகதிக்காக விளக்கப்படுத்தப்பட்டுள்ள உருமாதிரியின் பிரகாரம் நிபந்தனையற்ற விலைமனுக்கோரல் ஆவண பாதுகாப்புடனான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. திருகோணமலை, உட்துறைமுக வீதி, நீர்ப்பாசன திணைக்கள, நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலக, நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் 2024.06.26 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம்,**
**உட்துறைமுக வீதி, திருகோணமலை.**
**12.06.2024.**

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
Pay online & Save your precious time
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383 E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT

# பங்களாதேஷை வீழ்த்தி 'சுப்பர் 8' சுற்றை நெருங்கியது தென்னாபிரிக்கா

## இலங்கைக்கு தொடர்ந்தும் குறுகிய வாய்ப்பு

பங்களாதேஷுக்கு எதிரான டி குழுவுக்கான போட்டியில் பரபரப்பு வெற்றியை பெற்ற தென்னாபிரிக்க அணி டி20 உலகக் கிண்ண சுப்பர் 8 சுற்றுக்கு கிட்டத்தட்ட முன்னேறிய நிலையில் இலங்கை அணி அடுத்த சுற்றுக்கான தனது குறுகிய வாய்ப்புக்காக இன்று (12) அதிகாலையில் (இலங்கை நேரப்படி) நேபாள அணியை எதிர்கொள்ளவுள்ளது.

முதல் இரு போட்டிகளிலும் தோல்வி அடைந்த இலங்கை அணி நிகர ஓட்ட விகிதத்திலும் பின்னடைவை சந்தித்துள்ளது. எனினும் தொடர்ந்தும் தனது வாய்ப்பை தக்கவைத்துக்கொள்ள கத்துக்குட்டி அணியான நேபாளத்தை வெல்வது கட்டாயமாகும்.

இதில் தென்னாபிரிக்காவிடம் பங்களாதேஷ் அணி தோற்றிருக்கும் நிலையில் அந்த அணிக்கும் நெதர்லாந்துக்குமே அடுத்த அணியாக சுப்பர் 8 சுற்றுக்கு முன்னேற வாய்ப்பு அதிகம் உள்ளது.



இந்த இரு அணிகளும் நாளை பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்தப் போட்டி அடுத்த சுற்றுக்கு முன்னேறுவதற்கான தீர்க்கமான ஆட்டமாக அமையவுள்ளது.

இன்றைய போட்டியில் இலங்கை அணி வென்று பங்களாதேஷுக்கு எதிராக நெதர்லாந்து அணி வெல்லும் பட்சத்தில் இலங்கை தனது வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள போராட முடியும்.

இலங்கை அணி ஆரம்ப சுற்றில் தனது கடைசி போட்டியில் எதிர்வரும் ஜூன் 17 ஆம் திகதி நெதர்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது. அதே தினத்தில் பங்களாதேஷ் அணி நேபாளத்துடன் பலப் பரீட்சை நடத்தும்.

இந்த சூழலில் நேபாள அணி தனது எஞ்சிய போட்டிகளில் தோல்வியை சந்திக்கும் பட்சத்தில் பங்களாதேஷ், நெதர்லாந்துன் இலங்கை அணியும் தலா 2 புள்ளிகளை பெறும். இவ்வாறான நிலையில் நிகர ஓட்ட விகிதம் அடிப்படையில் அடுத்த சுற்றுக்கு முன்னேறும் அணி தேர்வு செய்யப்படும். இதற்கு இலங்கை அணி தனது எஞ்சிய இரண்டு போட்டிகளிலும் அதிக இடைவெளியில் வெல்வதும் அவசியமாகும்.

இன்று லோடர் ஹில்லிலேயே இலங்கை அணி நேபாளத்தை எதிர்கொள்ளவுள்ளது.அமெரிக்கநேரப்படி செவ்வாய்க்கிழமை இரவு இந்தப் போட்டி நடைபெறும் நிலையில் அங்கு மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதாகக் கூறப்படுகிறது.

# ரிட்ஸ்பரி ஜோன் டார்பட்ட போட்டி நாளை ஆரம்பம்

## முதல் முறை யாழ்., மட்டக்களப்பில்

இலங்கையின் மிகப் பழைமையான பாடசாலை மெய்வல்லுனர் போட்டியான 53 ஆவது ரிட்ஸ்பரி ஜோன் டார்பட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டிகள் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்க




ளப்பு பிராந்தியங்களுக்கு புதிதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ரிட்ஸ்பரி அனுசரணையில் நடத்தப்படும் இந்தப் போட்டிகள் நாளை (13) ஆரம்பமாகவுள்ளன. இதில் சுமார் ஆயிரம் பாடசாலைகளைச் சேர்ந்த 20,000 மாணவ, மாணவியர்கள் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கினிஷ்ட பிரிவில் முதல் முறையாக நாளை மற்றும் நாளை மறுதினம் யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் வட மாகாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டத்திற்கான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. அதேபோன்று முதல் முறையாக மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 3 மற்றும் 4 ஆம் திகதிகளில் கிழக்கு மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டத்திற்கான போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகள் தொடர்பில் அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் (10) கொழும்பில் நடைபெற்றது.

92 ஆவது சேர் ஜோன் டார்பட் சிரேஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி செப்டெம்பர் 10 தொடக்கம் 13 ஆம் திகதி வரை கொழும்பு, சுகததாச அரங்கில் நடைபெறவுள்ளது. இதில் 16, 18 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளில் ஒட்டுமொத்த சம்பியன்களுக்கு விருதுகள் வழங்கப்படுவதோடு ரிட்ஸ்பரி நிறுவனத்தால் புலமைப்பரிசில்களும் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தவிர, ரிட்ஸ்பரி அஞ்சலோட்டப் போட்டிகள் எதிர்வரும் ஜூலை 2 தொடக்கம் 4 ஆம் திகதி வரை பதுளை, வின்சன்ட் டயஸ் அரங்கில் நடைபெறவுள்ளது.



## சர்வதேச செய்திகள்

# ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட போர் நிறுத்தத் திட்டத்திற்கு ஹமாஸ் இணக்கம்

## அமெரிக்கா நம்பிக்கை: காசாவில் தாக்குதல்கள் நீடிப்பு

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட காசா போர் நிறுத்தத் திட்டத்திற்கு ஹமாஸ் இணக்கத்தை வெளியிட்டிருப்பதோடு, இதனை 'நம்பிக்கை தரும் சமிக்ஞை' என்று பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா முன்வைத்த போர் நிறுத்தத் திட்டத்தின்படி அதன் ஆதரவுடன் பாதுகாப்புச் சபையில் நேற்று முன்தினம் (10) கொண்டுவரப்பட்ட இந்தத் தீர்மானத்திற்கு 15 அங்கத்துவ நாடுகளில் 14 நாடுகள் ஆதரவாக வாக்களித்ததோடு ரஷ்யா வாக்களிப்பதில் இருந்து தவிர்த்துக்கொண்டது.

இதில் முழுமையான போர் நிறுத்தம் ஒன்று வலியுறுத்தப்பட்டிருப்பதோடு, இஸ்ரேலிய சிறையில் இருக்கும் பலஸ்தீன கைதிகளுக்கு பகரமாக ஹமாஸின் பிடியில் இருக்கும் பணயக்கைதிகள் மற்றும் உயிரிழந்த பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானம் இஸ்ரேலால் ஏற்கப்பட்டதாகவும் ஹமாஸ் அமைப்பு ஒப்புதலை வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை ஏற்பதாகவும் அது தொடர்பில் பேச்சுவார்த்தைக்கு தயார் என்றும் ஹமாஸ் மூத்த அதிகாரியான சமி அபூ சுஹ்ரி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம், இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெறுதல் மற்றும் இஸ்ரேலினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு பகரமாக பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பிலான தீர்மானத்தை தமது அமைப்பு ஏற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இஸ்ரேல் இதனை கடைப்பிடிப்பதை அமெரிக்கா உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். 'ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில், போரை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர ஆக்கிரமிப்பாளர்களை நிர்ப்பந்திப்பதில் அமெரிக்க நிர்வாகம் தனது உறுதிமொழிகளை நிறைவேற்றுவதற்கான உண்மையான சவாலை எதிர்கொண்டுள்ளது' என்று அபூ சுஹ்ரி கூறினார்.

டெல் அவிவில் இஸ்ரேலிய தலைவர்களை சந்தித்துப் பேசிய பிளிங்கன், 'இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போர் முடிவடைந்த பின் காசாவிற்கான திட்டங்கள் குறித்த உரையாடல்கள் தொடரும்' என்று குறிப்பிட்டார்.

ஹமாஸின் அறிவிப்பு நம்பிக்கை தருகின்றபோதும் காசாவில் இருக்கும் தலைவர்களின் உறுதியான அறிவிப்பும் தேவையாக உள்ளது என்று பிளிங்கன் குறிப்பிட்டுள்ளார். 'அதுவே கணக்கில் கொள்ளப்படுவதோடு அதுவே எமக்கு இன்னும் கிடைக்கவில்லை' என்றார்.

### மூன்று கட்ட போர் நிறுத்தம்

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடந்த மே 31 ஆம் திகதி தொலைக்காட்சி அறிவிப்பு ஒன்றில் வெளியிடப்பட்ட மூன்று கட்ட போர் நிறுத்தத் திட்டத்திற்கு ஏற்கனவே உலகின் செல்வந்த நாடுகளின் அமைப்பான ஜி7 நாடுகள் ஆதரவு அளித்திருந்த நிலையிலேயே பாதுகாப்புச் சபை இந்தத் திட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு இஸ்ரேலின் மூன்று பேர் கொண்ட போர் கால அமைச்சரவை ஒப்புதல் அளித்தபோதும் இஸ்ரேலிய அரசு இன்னும் உறுதி செய்யவில்லை. இந்தத் திட்டத்திற்கு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் கூட்டணி அரசில் இருக்கும் தீவிர வலதுசாரிகள் எதிர்ப்பு வெளியிட்டு வந்தனர். நெதன்யாகுவும் பைடனின் இந்தத் திட்டத்தை ஆதரிப்பது பற்றி நேரடியாக பதிலளிக்கவில்லை.

முன்னதாக காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை ஹமாஸ் வலியுறுத்தி வந்ததோடு இஸ்ரேல் தற்காலிக போர் நிறுத்தத்தையே கோரி வந்ததால் அதனை எட்டுவதில் இழுபறி நீடித்து வந்தது.

எனினும் இந்தப் போர் நிறுத்த திட்டத்தை காசாவில் உள்ள பலஸ்தீனர்கள் சந்தேகத்துடனேயே பார்த்து வருகின்றனர். கடந்த நவம்பரில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்தத்திற்குப் பின்னர் இடம்பெற்ற போர் நிறுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிவடைந்தன.

'அதனை நாம் பார்த்த பின்னர் தான் உண்மையில் நாம் நம்புவோம்' என்று மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் இடம்பெயர்ந்து கூடாரத்தில் தமது குடும்பத்துடன் வசித்து வரும் 47 வயது ஷபான் அப்தல் ரவூப் தெரிவித்தார். இந்தப் பகுதி இஸ்ரேலின் தொடர்ச்சான தாக்குதலுக்கு இலக்காகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




'எமது உடைமைகளை எடுத்துக்கொண்டு காசா நகருக்குச் செல்ல தயாராகும்படி அவர்கள் குறிப்பிட்டாலும் அது உண்மையா என்பது எமக்குத் தெரியாது' என்று அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்தப் போர் நிறுத்தத் திட்டத்தின் முதல் கட்டத்தில் கைதிகள் பரிமாற்றம் மற்றும் குறுகிய கால போர் நிறுத்தம் ஒன்றுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது கட்டத்தில் நிரந்தர போர் நிறுத்தம் மற்றும் காசாவில் இருந்து இஸ்ரேலிய துருப்புகள் வாபஸ் பெறும் திட்டம் அமெரிக்காவின் தீர்மானத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது கட்டத்தில் காசாவை மீளக் கட்டியெழுப்புவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று ஜோர்தானில் நடைபெற் காசா உதவிக்கான அவசர மாநாட்டில் உரையாற்றிய எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி, காசா தற்போது மனிதர்கள் வாழ தகுந்த இடமாக இல்லை' என்று குறிப்பிட்டார்.

'காசாவில் நடப்பதற்கு இஸ்ரேல் பொறுப்பேற்க வேண்டும. காசாவில் உட்கட்டமைப்பு, அதேபோன்று காசாவில் சுகாதார அமைப்பை இஸ்ரேல் அழித்துவிட்டது. காசா தற்போது மனிதர்கள் வாழ தகுந்த இடமாக இல்லை. ரபாவில் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகளின் விளைவுகள் குறித்து எகிப்து பல முறை எச்சரித்தது. இந்த இராணுவ நடவடிக்கை காசாவுக்கான மனிதாபிமான உதவிகள் செல்வதை தடுத்துவிட்டது' என்றும் சிசி குறிப்பிட்டார்.

கடந்த மே மாத ஆரம்பத்தில் எகிப்து மற்றும் காசாவுக்கு இடையிலான ரபா எல்லைக் கடவையை இஸ்ரேல் கைப்பற்றியது தொடக்கம் எகிப்தில் இருந்து காசாவுக்குச் செல்லும் மனிதாபிமான உதவிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இது ஏற்கனவே உணவு, மருந்து, எரிபொருளுக்கு காசாவில் நீடிக்கும் தட்டுப்பாட்டை மேலும் மோசமடையச் செய்துள்ளது.

காசாவுக்கு நுழைவதற்கு தயாராக 2,000க்கும் அதிகமான மனிதாபிமான உதவி மற்றும் வர்த்தகப் பொருட்களை ஏற்றிய லொறிகள் எகிப்தில் காத்திருப்பதாக ஐரோப்பிய சிவில் பாதுகாப்பு மற்றும் மனிதாபிமான உதவி நடவடிக்கை அமைப்பு தெரிவித்துள்ளது.

'ரபாவில் தீவிர இராணுவ நடவடிக்கை இடம்பெறுவதால் எல்லைக்கடவை தொடர்ந்து மூடப்பட்டுள்ளது. நீடித்த, தடையற்ற மற்றும் பாதுகாப்பான மனிதாபிமான உதவிகள் செல்வதை ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்துகிறது' என்று அந்த அமைப்பு எக்ஸ் சமூகதளத்தில் தெரிவித்துள்ளது.

### மேலும் 40 பேர் பலி

போர் நிறுத்தத்திற்கு பாதுகாப்புச் சபை ஆதரவு அளித்தபோதும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன. காசா நகரில் உள்ள குடியிருப்புக் கட்டடம் ஒன்றின் மீது இடம்பெற்ற தாக்குதலில் எட்டுப் பேர் கொல்லப்பட்டிருப்பதோடு அதில் பெரும்பாலானவர்கள் சிறுவர்களாவர்.

மத்திய காசாவில் இஸ்ரேலிய ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் நேற்று மூன்று பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. அல் சஹாபா வீதியில் ஒன்று கூடியிருந்த பொது மக்களை இலக்கு வைத்து அந்த ஆளில்லா விமானம் தாக்குதல் நடத்தியதாக வபா செய்தியாளர் குறிப்பிட்டார்.

எனினும் மத்திய காசாவில் கடந்த ஆறு நாட்களாக முன்னெடுத்த படை நடவடிக்கை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் நேற்று அறிவித்தது. மத்திய காசாவில் புரைஜ் அகதி முகாம் மற்றும் டெயிர் அல் பலா பகுதிகளில் இஸ்ரேலின் 98 ஆவது படைப்பிரிவு கடந்த ஜூன் 5 ஆம் திகதி இந்தப் படை நடவடிக்கையை ஆரம்பித்தது.

இந்தப் படை நடவடிக்கையின்போதே நுஸைரத் அகதி முகாமில் நான்கு பணயக்கைதிகளை இஸ்ரேலிய படை மீட்டது. இதன்போது 270க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 120 பேர் காயமடைந்ததாக காசா சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

இதன்படி கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 37,164 ஆக உயர்ந்துள்ளது. இதில் மேலும் 84,832 பேர் காயமைந்துள்ளனர்.

# சட்ட விரோதமாக அமெரிக்காவுக்குள் புலம்பெயர்வோர் நாடு கடத்தப்படுவர்

சட்ட விரோதமான முறையில் அமெரிக்காவுக்குள் எல்லை தாண்டி புலம்பெயர்பவர்கள் விரைவாக நாடு கடத்தப்படுவர் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ஜோ பைடனின் உத்தரவுக்கு அமைய இது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் இவ்வாரம் முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டின் கீழ் சட்ட விரோதமான முறையில் அமெரிக்காவுக்குள் புலம்பெயர்பவர்கள் ஒன்றில் அவர்களது சொந்த நாட்டுக்கு நாடு கட்டத்தப்படுவர் அல்லது மெக்சிகோவுக்கு திருப்பி அனுப்பப்படுவர் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்தும் வகையில் எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள ஜனாதிபதி பைடன் நிர்வாகம், அமெரிக்க மற்றும் மெக்சிகோ எல்லை ஊடாக அமெரிக்காவுக்குள் புலம்பெயர்பவர்களுக்கு புகலிட அந்தஸ்து தடை செய்யப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது. சட்டவிரோதமாக அமெரிக்காவிற்குள் புலம்பெயர்பவர்களில் பெரும்பகுதியினர் லத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களாவர். அரசாங்கத் தரவுகளின்படி, கடந்த ஆறு மாத காலப்பகுதியில் மெக்சிகோ ஊடாக அமெரிக்காவுக்குள் சட்ட விரோதமாகப் புலம் பெயர்ந்தவர்களில் 27 ஆயிரம் பேர் சீனர்களாவர். அவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை அமெரிக்கக் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள தேர்தலில் தாம் வெற்றி பெற்றால் சட்ட விரோத குடியேற்றவாசிகளைக் கட்டுப்படுத்தாத சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு வரிவிதிக்கப்படும் என்றுள்ளார்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுன் மாதம் 12ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.